உ

குருவே துணை.

அருணகிரிநாதசுவாமிகள்புராணம்

இஃது

முருகதாச சுவாமிகளென்றும்

திருப்புகழ்ச் சுவாமிகளென்றும்

வழங்கும்

மஹான் - வண்ணச்சரபம்

ஸ்ரீலஸ்ரீ தண்டபாணி சுவாமிகளால்

அருளிச் செய்யப்பட்டு

புதுவை

து. சு. நன்னைய பாகவத ரவர்களின்

பொருளுதவிகொண்டு

திருவாமாத்தூர்

கௌமார சபையாரால்

பதிப்பிக்கப்பட்டது.

இரண்டாம் பதிப்பு

இரத்தாக்ஷி௵ இடபாவி


C. Rajoo.
அருணகிரிநாதர்.

உ

குருவேதுணை

மு க வு ரை

வெண்பா

சண்மதத்துத் தேவுமற்றுஞ் சாற்றுமெந்தத் தெய்வமுமா
யுண்முதிர்மெய் யன்பர்க் குயிராகிப்—பெண்முதலா
முப்பாலு மாகியன்றாய் முந்துகுரு நாதனடி
தப்பாது போற்றுநரெந் தாய்.

வசனம்

அருணகிரிநாதசுவாமிகள்புராணம், என்பது அருணகிரிநாத ரென்னும் பெயரைக் கொண்டவொரு தவசிரேட்டரது பழமையான கதையைச்சொல்லு நூலென்னும் பொருள் தந்து இந்நூற்குக்கார ணக்குறியாய் நிற்றலின் ஆறனுருபடியாகப் பிறந்த அன்மொழித் தொகையாகும்.

இக்காவியநூலை யியற்றியவர் திருநெல்வேலித்தலத்திற் சுத்த சைவவேளாண்மரபில் இற்றைக்கு, எண்பத்தாறு வருடங்கட்கு முன் அவதரித்து அதிபாலப்பருவத்திலேயே கந்தக்கடவுள் கடைக் கண்ணோக்காற் கலைமகளென்னக் கண்டவர் வியக்கக் கவித்தமிழ் மாரி கடன் மடை திறந்தாங்கு கணக்கறப்பொழிந்து ஸ்ரீ முருகக் கடவுளைத் தமதுபாசனா மூர்த்தமாகக்கொண்டு வழிபட்டும், பின், எல்லாம் அவனென்ற சமரசநிலையும் அதினின்று எல்லா மூர்த்தி களும் பரம்பொருளின் கருணைச் சகளங்களே யென்ற சமரச நிச்சயாநுபூதியுமடைந்தும், அவ்வந்நிலைகட்கேற்பச் சோபானக் கிரமத்திற் பல்லாயிரங் கவிகளியற்றியும், அற்புதத்திருவேடப் பொலிவுடன் றிகழ்ந்தும், அனேகம் பக்த சனங்கட்குண்மை ஞான விளக்கவுபதேசம் புரியும் குருத்துவம் புனைந்தும் "வேதஞ்சொல்லி னும் விரிஞ்சனாதியர்-நேரிற் கூறினு நீசர்க்குரித்தாங் - கொலைபுலை செய்ல்கூடா" தென்னுஞ் சத்திய விரதத்தைப் பிரதானமாகக்

கொண்ட அத்துவித கௌமார மார்க்கத்துக் கிலக்கியமாயமைந்தும், பல தலங்கள் சஞ்சரித்தும், சகலதேவதாசாந்நித்ய சொருபமான நிர்மல சரீரத்தையுடைய பசுக்களின் க்ஷேமத்தை விரும்பிக் கோமாதுருபுரமென்னுங் காரணப்பெயர் பெற்ற நடுநாட்டுத்திருவாமாத்தூர்த்தலத்தில், முப்பத்தாறு வருடங்கட்கு முன் வந்து தங்கிக் கடுந்தவ மியற்றியும், ஸ்ரீ முத்தாம்பிகாசமேத அபிராமேசுரப் பெருமானைப் பதிகச்சதகம், சதகப்பதிகம், முதலிய பனுவல்களாற்றுதித்தும், அன்பினர் விருப்பப்படி கௌமாரத் திருமடாலயமமைத்தெழுந்தருளியும், கலி-ஐயாயிரமான விளம்பி வருடத்திற்றிருவுருமறைத்து ஞான சமாதிக் கொலுவமர்ந்து திருவருண்ஞான வொளிபரப்பியும், தன்னை வந்தடையுந் தவமுறுமேலோர்-முன்னைவினையற முழுதருள் பொழிந்தும், விளங்குகின்ற மஹான் வண்ணச் சரபம், திருப்புகழ்ச்சுவாமிகள்-முருகதாச சுவாமிகளென்கிற ஸ்ரீல ஸ்ரீ தண்டபாணி சுவாமிகளாவர்.

இந்தப்புராணத்தை அறுபது வருடங்கட்குமுன் முருகக்கடவுளின் உத்தரவின்பேரில் இயற்றியுள்ளார். இதனை யிவரிவ்வாறியற்றுவதற்காதாரம், தமது அநுபூதியிற்றிருவருள் விளக்கியனவும் குருவினாலும் பெரியோர்களாலும் உலகத்தினராலுந்தெரிந்துகொண்டவைகளுமேயென்பதும், இச்சரித்திரத்தை யுலகிலுள்ளோர், இயற்கையுண்மை நிகழ்ச்சிக்குமாறுதலாகத் தத்தமக்கிசைந்தவாறெல்லாம் விபரீதப் படப்பேசுவது கேட்டு மனம் பதைத்துத் தெய்வசம்மதப்படி சத்தியசாட்சியாய்ச் சொலத்துவக்கினரென்பதும்,

பாயிரக்கவிகளில் "

" அறிவாய பொருணனவிற் கனவிற்றானே
யறிவிக்குமவை கொஞ்ச மவையவங்கள்
செறிவாய குருச்சொல்லல் கொஞ்சமேலோர்
தெரித்தல் கொஞ்சமுலகத்தார் செப்பல்கொஞ்ச
நெறியோடு கலந்தருணகிரி நாதன்சீர்
நிறைந்துளகாவியம் பகர்வேன்" என்றும்,

" உன்சரிதந் தனைப்பலவா றுலகத்தார் பகர்வதுகேட்டுளம் பொறுமன்—முன்சரிதந்தனைக்கூட்டிச் சொலப்புகுந்தேன்———அருணகிரிப்புலவரேறே" என்றும், வருவனவற்றாற் காண்க.

இந்தச் சுவாமிகள் நூல்கள் செய்யுமிடத்து நேரும் விஷயங் களை ஆன்றோராகிய சுருதி. என்ற மட்டிற்றழுவிப் போகாமல், யுத்தி அநுபவங்களுக்கும் பொருந்த ஆராய்ந்து தேற்றத்தாலும், திரு வருள் வியாபக இயக்கத்தைக்கொண்டும், செய்வது வழக்கமென் பது "அளவில் பற்பலர் புகன்மொழித்தொகைகுறித் தறைந்திட் டிளமைச் செம்மறிப் பழிப்புறும்புலவர்" என்றும்,

"பன்னூற்றொகுப்பிற் பதர்களையும் பக்குவத்தோர்
தொன்னூலென் றஞ்சார் தொகைக்கெல்லாம்-பின்னூலென்
றெள்ளார் நலங்கண் டெடுப்பாரிழிவு கண்டு
கொள்ளாரென் றோதல் கற்றோர்கோள்" என்றும்,

"என் மனதிலொன்றெண்ண வென்கைமற்றொருவண்ண மெழுதிடு மியற்கை கண்டும்" என்றும், கூறியவாற்றாற் பெறப்படுகின்றது. அன்றியும் இதிற் பூர்வபுண்ணியச் சருக்கத்தில் அருணகிரிநாத சுவாமிகளுக்கு முந்திய ஆறு செனமங்களெடுத்து விளக்கப்பட்டுள் ளன. அவற்றின் விவரங்கள் தமது அகத்தும் புறத்தும் கலந் துள்ள தெய்வம் அறிவித்தவாறு சொன்னதாகப் பாயிரம் கூறு கிறது அது வருமாறு.

"எண்ணில் பல கோடிதொண்டர் முருகவேளை
யிறைஞ்சி நிற்க வருணகிரி யென்னுநற்பேர்த்
திண்ணியன்றனத்தனைபெறடைந்த ஞாயந்
திகழும் வண்ண மவனுயிரிற்சேர்ந்த பூர்வ
புண்ணியத்திற் சற்றறிந்த மட்டுஞ் சொல்வேன்
புறக்கருவி யுட்கருவிப் பொருத்தம் யாவு
நண்ணியசைப்பவனுணர்த்தா விதத்தைக்கேட்டா
னறியேனென்பதற்கு நாணிடேனே" என்றும்,

௯-ஷ சருக்கம், ௩௩-வது கவியில் "அறுவகைப்பிறவி சொற்றே மவற்றின்முற் பிறவியாதோ" என்றும் கூறி விடுத்தனர்.

ஆறு சென்மவிவரம்

க-குறு முனிவளர்த்தநாய்	எனக் கூறப்படுவனவாம்
உ-தேவேந்திரன்	
௩-அருச்சுனன்	
௪-கண்ணப்பநாயனார்	
ரு-நற்கீரர்	
௬-பொய்யாமொழிப்புலவர்	

இந்த வண்ணச்சரபச்சுவாமிகள் தாம் பாடிய புலவர் புராணத்தின்—ருக-வது, அருணகிரிநாதசுவாமிகள் சருக்கம், முதற்கவியில்,

"அருணகிரிநாதற்கென்றன்றொரு காவியஞ் சொற்றேன்
றெருளுறுமிப்புராணத்துஞ் சிறிதொருவாறுரைக்கிறேன்.
என்றும்,

ஷெ புராணம் முதலாவது, அகத்தியமாமுனிவர் சருக்கம், உச-வது கவியில்

"மந்திரவேள்விநூறு வாம்பரித்துணைகொண்டாற்றி
யிந்திரனூற் பாம்பா கிடச்செய்தோரிள் நாய்தன்னைத்
தந்திரம் யாதுமின்றித்தவளவாரணத்துய்த்தான்றன்
சந்திரமோலியில்லாச் சங்கரனென்பார்தக்கோர்" என்றும்,

ருஎ-வது கவியில்

"அருணையூர்க் கிளியின் காதை யவிர்தருகாவி யத்திற்
பொருவில்சீர்க் கும்பநாதன் பொன்னடித்துணைக்கன்பான
வொருசிறுநாயின்மாட்சி யுரைத்துளேன்" என்றும் கூறினர்.

"ஒன்றுமாய்ப்பல கோடியுமாமுயர்
நன்றுடைக்குருநாதனை நம்புவார்
குன்றுபோலு மனத்தின் குறிப்பெலாங்
கன்று போல்பவர்காணரிதாமரோ." என்றும்,

"அருணலம்பெற் றுயநினைந்தோர் சகளமூர்த்தத்
தகநிலைத்துச் சமரசவாழ் வடைந்துமாறாக்
கருணைவடிவாத்திகழும் பெரியோர் தங்கள்
கருத்தறிந்த வநுபூதிக் காட்சியெல்லாம்
பருவமுளார்க்குரைக்கிலின்பம் பயக்குமன்றிப்
பாமரர்தஞ் செவிகேட்கப் பகர்ந்தாலந்தோ
விருவிழியுமில்லாற்குக் கொக்கின்கோல
மியம்பியதோர் கதையினிலு மேற்றமாமே?" என்றும்,

"தெய்வ வல்லவச்சீர்திகழ்தாற்காம்பொய் செப்பினு மொப்பிகம் பியற்கை-சைவாதியர்தந் தகைமை யாந்தழலாற்றகிப்புறுத் தமிழையும் பழிக்கும்; பொய்வழக்கமண ராதியார்குணமாம்" என்றும்,

கூறிய பிரகாரம் அருளநுபூதி பெற்ற மஹான்கள் தமதுண்மைகளை யுலகினருணரக்கருணையாற் சொல்லுமிடத்து முழுமனத்துடன், நம்புவது தான் நன்மையாகும்——

இந்நூற்றலைவரான அருணகிரிநாதரது திரு அவதாரச் சருக்கத்தில் திருவெண்காடரென்ற பட்டினத்துச் சுவாமிகள் திருவருணைத் தலத்தின் வீதியில் ஒரு கணிகையைக் கண்டுமோகித்து அவளைக் கைதீண்டி யழைத்தனர் அதுகண்டு அவள் அஞ்சி நடுங்கியமையால் விடுத்தனர் அவள் விரைந்தோடித்தனது தாயினிடம் விஷயங்களை யோதினள் அது கேட்ட தாய் மகான்களின் விருப்பத்துக்கிணங்காமல் மறுத்தனையே யென வருந்தி யவளையழைத்துக் கொண்டுவந்து சுவாமிகளை வணங்கி ஏற்றுக்கொள்ளும்படி விண்ணப்பித்தனள்-முன்னரே வெளிப்பட்ட தமது ஞானவிந்தை ஒரு அரசிலையிலேந்திவைத்துச் சிவசிந்தனையிலிருந்த திருவெண்காடர் அவளைப் பார்த்து "தோடவிழும் பூங்கோதை" என்னும் வெண்பாவை யோதித் தமது கரத்தாற் சுட்டிக் காட்டினர், அவள் அவ்விந்துவை யெடுத்து மகளுக்கு உண்ணும்படி ஊட்டினள் அதுமுதற் கருப்பமாயினள். எனக் கூறப்பட்டுள்ளது.

ஷை சருக்கம்-சுக-வது-கவி—"தோடவிழ்மலர்மெல் லளகமாமயிலே தொடர்ந்துனை விரும்பினர் போனர், நீடறிவதனு லறிதி நீ யென்னை நினைத்திடி விடுப்பினி லுதைப்பேன், கூட நான் விரும்பி லுதையெனும் பொருளுட் கொண்டனள் குறிப்பினு லதைக்கண்-, டாடகப்பணிதோய் மகளுணக் கொடுத்தா ளதுமுதற்கருப்பமேயானுள்" எனவரும் இவ்விதச் சரிதத்தில், பலர் நம்பிக்கையும் சிலர் அவநம்பிக்கையுமடைகின்றனர் அவருட்பின்னையவர் கூற்றுவன.

க. திருவெண்காடர், கி. பி. கஉ-வது நூற்றுண்டிலிருந்தவர். அருணகிரியார், கி. பி. கரு-வது நூற்றுண்டிலிருந்தவர் ஆகவே அவருக்கிவர் பிறந்தவரென்பது பொருந்தாது. நம்பியாண்டார் நம்பிகள் திருமுறை திரட்டிய காலத்தில், திருவெண்காடரியற்றிய, ஐந்து பிரபந்தங்களை மட்டும் பதினொராந் திருமுறையிற் சேர்த்துள்ளார். மற்றைய கவிகளு மிருந்திருக்கிற் சேர்த்திருப்பர். ஆதலின் அவைகளை யியற்றியவர் பிற்காலத்துப் பெரிய ரொருவரா யிருக்கலாமென்று சொல்லக் கூடும் அருணகிரிநாதர் திருப்புகழும் இருந்திருந்தால், திருமுருகாற்றுப்படைபோல் அதையும் சேர்த்திருப்பார்.

உ. அன்றியும் ஒருவருடைய விந்து ஒரு பெண்ணால் விழுங்கப் பட்டுக் கருப்பத்துக் கேதுவாயிற்றென்பது இயற்கைக்கு மாறுபட்டு அபிமானத்தாற் சொல்லும் உபசார வார்த்தையாகக் கொள்ளக் கிடந்தது என்றபடி.

அவற்றிற்கு ஒருவாறு விடை

க. அநாதியாயுள்ள நமது சதுர்வேதசித்தாந்த சம்பந்தமான பெரியோர்களது கால நிச்சயங்களைக் கூறுமிடத்துப் பொதுவான கலியுகாதி வருடக் கணக்கைக் கொண்டாளாமல், கி. பி. கஉ-கரு வது நூற்றாண்டுகளெனக் கூறி விளக்குவோரது வெண்மை மிகவும் வியப்பை விளைக்கின்றது. அத்தகையார், உ௰-நூற்றாண்டுகளுக்கு முந்திய திருஞானசம்பந்தாதியர்களது காலவரை காட்டவேண்டின், கி. பி. எத்தனாவது நூற்றாண்டென்பரோ தெரியேம். சைவவயிணவ முதலிய புராதனவைதிக சமயவழிபாட்டைக் கைக்கொண்டொழுகும் பெரும்புலவர்களாகிய, இவர்கள் நவீன சாமானிய கற்பித சமயச் சார்பான, கி. பி. காலவரையை லௌகீகசீவன விவகாரங்களில் வழங்குவது போகப் பாரமார்த்திக சாத்திர சரித்திர ஆராய்ச்சிகளிலும் விரவிக்கொள்ள நேர்ந்த விதிகொடிது. நிற்க,

திருவெண்காடர், கஉ - வது நூற்றாண்டிலிருந்தவரென்பது போல் அவர் ஐக்கமுற்றது இத்தனை வயதிலென்ற விவர மின்மையாலும், எல்லாம் வல்ல இறைவனது திருவருளைக் காதலாமலகம் போற் பெற்றுத் திருவாக்கினாற் சொல்லியபடி வாழைமரம் பற்றியெரிதல் கழுமரம் தீருதல் இறந்தவன்மீண்டெழல் விலங்கு தெறித்தல், முதலிய சித்திக ளனந்தம் புரிந்து விளங்கிய பரமயோக சாத்திய சொருபசித்தராகிய திருவெண்காடரது திருமேனியானது முடிவிற் சிவலிங்கவடிவாகுந் தரத்தினதாதலின், உலக விஷயபோக நுகர்ச்சிப் பிராப்தமில்லாவிடினும், அன்பினர் தவவிசேடத்தாற் றெரிசித்துப் பயனடைதற் கேதுவாகச் சில காலம் உலகினர் காணச் சஞ்சரித்தும், சில காலம் ஏகாந்தபர நிட்டையி லொடுங்கியும் இவ்வாறு நானூறு வருடம் வரை, ஏனிருந்திருக்கக் கூடாது, குகை நமசிவாய சுவாமிகள், உ௱-வருடம்வரை யிருந்தனரென்றும், திருமூலநாயனார் தமது யோகவலிமையால், ௩௲-வருடம் இருந்தனரென்றும் சரித்திரங்கள் கூறுகின்றன.

“ பாரூடு தெய்வ மெனத் தக்கசித்தி
படைத்தசிவ யோகியரைப் பழிக் கொண்ணுது
சாரூபம் பெற்றவர்தாம் போற்றுந் தெய்வத்
தன்மைமுற்று மநுபவிப்பார் தபனன் றிங்கள்
காரூரு நாள்வரையு மிருந்து பின்பு
கலந்தாலுங் கலப்பரந்தக் கடவு ளாரே
சீரூர்மெய்ஞ் ஞானநெறிக் குரியோர் மற்றோர்
சிற்றறிவாற் பிதற்றன்முற்றுந் திருட்டுச் சொல்லே.

என்ற சுருதியும் அதனை வலியுறுத்துகின்றது. திருவெண் காடரா லருளிச் செய்யப்பட்ட கோயில் நான்மணிமாலை - திருக்கழுமலமும் மணிக்கோவை — திருவிடைமருதூர்மும்மணிக்கோவை — திருவே கம்ப முடையார் திருவந்தாதி - திருவொற்றியூர் ஒருபாவொரு பது, என்னும் பிரபந்தங்க ளைந்துமாத்திரம் திருமுறையிற் சேர்க் கப்பட்டன வெனிற் கூறுதும், திருமுறை திரட்டிய நம்பியாண் டார் நம்பிகள் சைவசமையத்துக்கே சிறப்புவிதியாகப் பல நூல் களைக் கொண்டு திரட்டிய பதிஞெராந் திருமுறையில் அதற்கேற்ற வாறு பிரபந்தங்களா யமைந் தப்போதிருந்தவற்றை மட்டும் எடுத் துக்கொண்டு பொதுவிதியாயும் விடுகவிகளாயும் இருந்தவற்றைச் சேர்க்காமல் விட்டனரென்க. எனவே திருவெண்காடரது பாடல் கள் திருமுறை வகுத்த காலத்துக்கு முன்னும் பின்னு முண்டா யிருக்கக் கூடுமென் றெண்ணுவதியையபாம்.

பதிஞெராந் திருமுறையிற் சேர்க்கப்பட்ட ஐந்து பிரபந்தங்க ளல்லாதனவாய் அவர் பேரால் வழங்கப்படுகிற கவிகள் பலவும் பிற் காலத்துப் பெரிய ரொருவரா லியற்றப்பட் டிருக்கலாமெனில் உடற் கூற்று வண்ணம், கச்சியேகம்பமாலையும், தோடவிழும்பூங் கோதை ” என்னும் வெண்பா முதல் கண்டங்கரியதாம் என்ற வெண்பாவரை உள்ள கவிகளை அவ்வச்சமயங்களில் இயற்றித் திரு வொற்றியூரில் முத்தியடைந்த அப்பெரியாரே திருவெண்காட ரெனக் கொண்டு முந்திய ஐந்து பிரபந்தங்களை யியற்றியவர் முற் காலத்துப் பெரிய ரொருவரென்றொரு சாராரோதுவர், உண்மையில் முற்காலத்தவரோ பிற்காலத்தவரோ திருவெண்காடரென்றெழும் ஆசங்கையை நிவர்த்தித்துக் கொள்வதற்கு யோகவலிமையால் ஒரு வரே முற்காலந் தொடங்கிப் பிற்காலம் வரை தங்கியிருந்தனரெனக்

கொள்வதே போதிய சமாதானமா யிருக்கிறது. அருணகிரிநாத சுவாமிகள் பிற்காலத்தினரென்பதில் ஆக்ஷேபமில்லை.

உ. திருவெண்காடரது திருமேனியிலிருந்து சிவயோக முதிர்ச்சியிற்றிரண்டு ஒளி வீசி நின்று, உலகில் தெய்விகத் திருவருண் மணம், தவ மணம்—தமிழ் மணம், ஒருங்கே கமழ்ந்து அநேக மெய்யன்பர்கள் கௌமார சமய நெறியி லீடுபட்டு மேல்வழி யடைதற்கேதுவாக அருட்சத்தியினியக்கத்தால், தூலக்கலப்பின்றி வெளிவந்த ஞானவிந்துவானது, பூமியிற்பிறந்து பலவாறு திரிந்து பஞ்சேந்திரிய போக விருப்பின் மூழ்கி வாத பித்தசிலேத்தும தொந்தத்தால்வருந்தி யழிதற்குரிய சாதாரண சரீரங்களின் பால் நெகிழ்ந்திழியும் சலனவிந்துவைப் போன்றதெனக் கருதுவது அறிவின்பாற்பட்டதெனக் கொள்வது கூடாது. அத்தகைய ஞானவிந்துவை அந்தக் கணிகையின் தாய் எடுத்து மகளுக்கு ஊட்டியபோது அவள் பிணக்கமின்றி யிணக்கமாயுண்ட அன்பினைக்கண்ட திருவெண்காடர் பின் விளைவு தமது ஞானத்தாலுணர்ந்து கடாட்சித் தமையால் அது முதற்கருப்பமாயினளெனக் கொள்வதே முறை "செயற்கரிய செய்வார் பெரியர்" என்ற வேதவாக்கு துணைநின்று இச்சரிதத்தை வலியுறுத்துமாக. உலகியற்கைக்குமாறு பட்டுமேம்பட்டதே அருளியற்கையாகும் ஆதலா லவ்வாறுடன்படுவதிற் குற்றமின்று. அது பொருந்தாதென்று முரண்கொண்டு வாதிப்பவர்களைப்பற்றி யிரக்கமடைவதைத் தவிர யாம் செய்வது வேறின்று.

முன் வியாச முனிவரது விந்துவை ஒரு கிளி எடுத்து விழுங்கிய காரணத்தாற் கருப்பமாகி அதினின்றும் சுகப்பிரமமுனிவர் பிறந்தாரென்று கதை வழங்கி வருகிறது. முன் கூறிய சரித்திரத்தையே முரணுகக் கருதும் நமது சகோதரர்கள் மனித சரீர விந்துவானது கிளியினுடம்பினுண்ணப்பட்டுக் கருப்பத்துக் கேதுவாயிற்றென்னும் சரிதத்துக்கென்ன தீர்மானிப்பார்களோ அறியேம். அன்றியும், சிவமுனிவரென்பவர் தவஞ்செய்து கொண்டிருந்த ஆச்சிரமத்தினருகு அருட்செயலாற் றோன்றிய பொன்மானைக் கண்டு, அவர் ஐம்புலம் வென்ற தமது சிந்தைநெகிழ்ந்து அந்த மானின் மீது மோகங் கொண்டு பார்வையாலின்ப நுகர்ந்து, பின் மெய்யுணர் வடைந்து தமது தவத்திலமைந்தன ரென்றும், அப்பார்வையாலேயே அந்தமான் கருப்பமடைந்து வள்ளி நாயகியைப் பெற்ற

தென்றும் கந்த புராணம் கூறும் உண்மைக் கதை யவர்களை யெந் நிலையிற் சேர்க்குமோ தெரியவில்லை. மேனிகழ்ச்சியாவும் அதனதன் காரியமாக முன்னுக்கு நிகழ விருக்கும் சம்பவங்களைப்பற்றிய தெய்வத் திருவரு ளியக்கமென்பதே சத்திய சம்பிரதாயமாம். "மதனை வென்றவ ரருள்பெறுமேலவர் மனத்தினிற் குறியாக - வெதனை யெண்ணினு மங்ஙனமுடிவதே யியற்கை" என்பது ஒத்து. ஆதலில் அருள்பெற்ற பெரியோர்களது திருவுளச் செய்கையை யுல கியற்கையோடு பொருந்தச் சேர்ப்பது கூடாது. அவ்வாறு பார்க்கில், கருங்கல் தண்ணீரின் மிதத்தல் நீற்றறை குளிர்தல் ஆண்பனை பெண்பனையாதல் சுட்டவென்பு பெண்ணுதன் முதலான திருவரு ளாடல்களும், மாறுபட்டதென்னக் கொள்ளத்தக்க விபரீதம் விளையும் ஆதலின் அம்மட்டில் விடுக்க.

திருவவதாரச் சருக்கத்தின் சச-வது கவியில்,

"ஆறதாந்திங்கண் மூன்றதாங்கிழமை யரியநாள் பன்னிரண்டாகு, மூறணுகரிதா மிலக்கின மொன்பானு மவனுதித்த போதென்கை, சோறலுண்டுவப்பார் குலமறக்களைந்து குலவும்வேற்குருபரன் றனக்கு-நீறணி தகையாற் றவமுதிர்ந் தவர்போ னிலவுமென்றனக்கு நிச்சயமே" என்றதனல் - புரட்டாசிமீ உத்திர நக்ஷத்திரம் செவ்வாய்க்கிழமைத் தினம் அவர் அவதரித்த லக்கினம் தனுசு - என்பது முருகனுக்கும் எனக்கும் நிச்சயந்தானென்று சொல்லியுள்ளார். எனவே ஏனையர் பிணங்கினும் இணங்கினும் அவ்விஷயம் அவர்களறிவின், றன்மையைப் பொறுத்ததென்ற குறிப்பாயிற்று. இக் கருத்தை வேறோரிடத்தில் "இணங்குமறி வளவிலெவ ரிகழ்ந்தாலும் புகழ்ந்திட், டின்புறினு மெனக்காகா தெனையசைப்பாற் காமே" எனக்கூறி யுள்ளமை தெரிவிக்கின்றது.

அருட்பேற்றுச் சருக்கத்தின் கஉ-வது கவியில்,

"ஆறாறு சகத்திர மன்பர்பெறும்
பேறாய திருப்புகழ் பேசியபின்
மாறாத வறத்தொகை யானவகுப்
பூறா மவையின்றி யுரைத்தனனே."

என்றமையால், திருப்புகழ்க் கவிகள் முப்பத்தாறாயிரமும், வகுப்புகள், கூஉ-ம் இயற்றின ரென்று பெறப்படுகிறது - வேறு சிலர் திருப்புகழ் பதினாறாயிரமும் வகுப்புகள் உரு-ம் எனக் கூறுகின்றனர்; பின்னுஞ்

சிலர், வழங்கப்படும் வகுப்புக ளிருபத்தைந்துள்ளும் பதினெட்டே அவர் பாடியதென்றும் பிந்தியவேழு பிற்காலத்து அபியுக்தர்களாற் பாடிச் சேர்க்கப்பட்டன வென்றுஞ் சொல்லுகின்றனர்.

ஷ சருக்கம், ௩0-௩௧-வது கவிகளில் அருணகிரிநாதர் திருச்செந்திலடைந்து முருகன் சந்நிதானத்தில் திருப்புகழ்ப்பா முழுவதையும் அரங்கேற்றியபோது முருகன் சிரக்கம்பஞ் செய்துகேட்டனர் அருணகிரிநாதர் எனது திருப்புகழ்க்கவி முழுவதையும் பாடஞ் செய்து படிப்பவர் அடியேன் பெற்றபேறு பெறக்கருணை செய்ய வேண்டுமென்ன வேண்டியதற்கு முருகன் பேசாதிருக்க அதுகண்டு வருந்தி, ஏடு முழுவதையும் கடலிலுருவி யெறிந்து சென்றனர், அவற்றுள் அலைகளா லொதுக்கப்பட்ட சில பாகங்களையுலகினர் கைக்கொண்டனரெனக் கூறப்பட்டுள்ளது. ஆதலின் இவர்கள் கொண்ட கவிகள் சில ஆனபோது அவர் விண்டகவிக ளெவ்வளவாயிருப்பினும் அதைப்பற்றிய விவகாரம், மிகையாம்.

கிளிவாழ்க்கைச் சருக்கம் ௨௧-வது கவியில்

"பாடினன் கிளியின்செஞ்சொல் பன்னிரு செவிக்கோன் கேட்டு - வாடிடேல் வாவாவென்று வரவழைத் தொருவன்சேவ - னீடிய புயத்தினேரா நிகழ்வலத் தோளில்வைத்தான்" என்றமையால் அருணகிரிநாதர் கிளிவடிவத்துடன் கந்தமாதனஞ் சென்று சண்முகக்கடவுள் சந்நிதியில் நின்று ஞானுநுபூதி பாடித்துதித்தனராக அக்கடவுள் மகிழ்ந்து தமது வலத்தோளில் வைத்துக்கொண்டனர், என்றவிஷயத்தை ஒருவர் மறுத்து, கிளியானது கந்தலோகஞ் சென்றிருக்கலாம் கந்தக்கடவுள் புயத்திற்றுங்கப்பெற்ற தென்பதற்குத் தண்டபாணி சுவாமிகள் வாக்குத்தவிர வேறு ஆதார முண்டோவென்று வினவினராம், அவருக்கு அந்த வாக்கில் அவ்வளவு வெறுப்பு அல்லது அவநம்பிக்கை வந்தது யாது காரணத்தாலோ.

அருணகிரிநாத சுவாமிகளைப்பற்றிக் கர்ன பரம்பரையான வசனங்களும் அபியுக்தர்களது வாக்குத்துதிகளும் தவிர வேறு நூல்களில்லாதிருந்ததி னின்றும், அதனிமித்தமாகவே முருகக்கடவுளின் அநுக்கிரக வைபவத்தினுல் தமதுண்மை யநுபூதியிற் றெரிந்த விவரங்களையுங் கலந்து, எமது சுவாமிகளாற் றிருவாய் மலர்ந்தருளப்பட்டுள்ள இந்தப் புராணத்தை நம்பாமல் வேறு ஆதாரமுண்டோ

வென வுசாவும் அவருக்குத் திருப்திவிளைக்கத் திருவருள்தான் முன் வரவேண்டும்.

அன்றியும் திருவாரூரில் ஸ்ரீ தியாகராசப் பெருமான் றிருவருள் காட்டியபடி சுந்தரமூர்த்தி நாயனாரலருளிச் செய்யப்பட்ட திருத்தொண்டத் தொகையிலுள்ள நாயன்மார்களது பெயர்க்குறிப்பிலிருந்து திருநாரையூர்ப் பொல்லாவி நாயகரருளால் நம்பியாண்டார் நம்பிகள் சில விவரங்கள் தெரிந்து திருத்தொண்டர் திருவந்தாதி செய்தனரென்றும், அதனிற் கூறப்பட்டுள்ள சொற்ப விவரங்களைக் கொண்டு தில்லைத்தலத்தில் ஸ்ரீநடராஜமூர்த்தியின் றிருவருட்டுணையினுல், சேக்கிழார் நாயனுர் திருத்தொண்டர் புராணம் அருளிச்செய்தனரென்றும் வழங்கும் பாரம்பரிய சத்திய சரித்திரத்திலும் சந்தேகங்கொண்டு அவ்விஷயங்களுக்கும் அவர்கள் வாக்குகள் தவிர வேறு ஆதாரமுண்டோவென்றும் ஐயுறுவர்போலும்,

தாருகாரணிய ரிஷிகளால், சினந்தேவப்பட்ட சற்பங்கள் நகு வெண்டலை மான் முதலிய குரூரகுண வஸ்துக்களையும் பரமசிவன் றமது திருமுடியிற் றரித்தன ரென்றதில், ஐயமுந் திரிவுங்கொள்ளாத விவருக் கிதனிற்றோன்றியதை நோக்கு மிடத்து, அவற்றின் றகுதியினின்றும் இந்தக் கிளியின்றகுதி தாழ்வென்றோ அல்லது தண்டபாணி சுவாமிகள் கற்பனையாக அபிமானத்தா லலங்கரித்துப் பாடி முடித்திருப்பரென்றோ வொரு விபரீத சங்கற்பம் அவரை வாட்டுகின்ற தென்றெண்ண நேருகின்றது. அத்தகைய குணத்தை நீக்கியினிமேலேனும நம்பிக்கை யுண்டாகும்படி திருவருள் தலையபுரிக,

ஷை சருக்கம் உஉ-வது கவியில்

“ அன்றவ னருணையூரி லவதரித் திடுமந்நாளே
யென்றவேள் கிழமை மட்டு மிரண்டதா மென்வுஞ் சொன்னு
னன்றது மாறித்தோன்ற னுனிலத் தியல்பே யாமா
லொன்றலாற் பிறிதொன் றில்லை யுரியசீர் செயவல் லார்க்கே.”

எனக்கூறப்பட்டமையால் அவர் அவதரித்தகாலமாகிய ஆறுந்திங்களென்னும் புரட்டாசி மாதம், பன்னிரண்டா நாளாகிய உத்திர நக்ஷத்திரமே கிளி வடிவதுடன் றோளிற் சேர்ந்ததினமென்று முருகன் றமக்குச் சொன்னதால், அருணகிரிநாதசுவாமிகளைக் குறிப்பிட்டுக் குருபூசை முதலியன செய்வோர் அக்காலத்திற் செய்கவெனக் குறிப்பிட்டதாயிற்று.

வேறு சில கௌமாரர்கள் அருந்திங்களென்பதை யுடன்பட்டு-தைமீ முதலாக எண்ணி ஆனிமீ என்றும்-பதினைந்தாந் திதியாகிய பௌர்ணமி தினமென்றும் வழங்குவர் - எந்தக்காலமானாலும் ஆராதிப் போர்பயனடைவ துண்மையே-விவகாரத்தில் நோக்குமிடத்து-அஸ்வனி யாதியாகவே துவக்கிராசி பிரிப்பது பாரம்பரையா யிருப்பதோடு சித்திரைமீ முதலாகவே வருடம் எண்ணப்படுவதாலும், அடியார்களது குருபூசா காலங்கள் பெரும்பாலும் நக்ஷத்திரப் பிரதானமாகவே வழங்கப்படுவதாலும் - முன்னையது பொருத்தமாயிருக்கிறது. தைமாதத்துக் குரிய மகாராசியானது உத்திராடத்தின் இரண்டாம் பாதத்திலிருந்து ஆரம்பிப்பதால், அது முதன்மைக் குரிய மாதமாகக்கொண் டெண்ணுவதற்குப் பொருந்தாமையாலும், திதிப்பிரதானம் கொள்வது உலகியற்கையினர்க்கே யாதலாலும்—பொருந்தவில்லை. ஒரு வேளை உத்தராயனம் பகற்காலமென்பது பற்றித்தழுவி அருணகிரிநாதர் கிளிவடிவினரானதால் சாய்ந்திரகாலமாகிய ஆனியில் முருகன் புயமாகிய இடத்தை யடைந்தனரென்று கொள்வோமெனில், போக பூமியிலுள்ள விஷயாநுபவிகளாகிய தேவர்களுக்கு அக்காலவரையேயன்றிப் பகலிரவற்ற சுத்த ஞானாநுபவப் பெரியாராகிய அவருக்கு அது வேண்டியதில்லை. ஒரு சமயம், மனிதசரீரத்தைவிட்டு நீங்கியதினமெனக் கொள்ளின் அதைப் பற்றித்தடையில்லை.

ஷை சருக்கம், உ௫-வது கவியில் இந்நூலினுக்கு ஓர் புறனடையாக.

" யானிதிற் பகர்ந்தவாற்றிற் கிசைகதிடா விதமுஞ்சில்லோர்
நானிலத் துரைப்பதுண்டு நலந்திக ழருணநாதன்
கானிடக் குறத்திகோன்றன் கழல்பணிந் துய்ந்தவாற்றை
வானின்மென் மலர்கொண்டுற்ற வண்மையை மறுத்திடாரே"

எனத்தழுவிக் கூறி முடித்துள்ளார்-ஆதலின் பக்குவிகளுக்கு விளங்கவுண்மையைச் சொன்னதேதவிரத் தார்க்கிகக்கொள்கை சிறிதுமின்றென்பது நன்கு விளங்கிற்று. நிற்க,

" வல்லைவந்தன் பரைக் காக்குஞ்செவ்வேற்கை வரதனைக்கண்
டெல்லையிலாக்களிப் பாய்மடிமீதி லிருக்குமென்னைத்
தொல்லையருண கிரிதானென் றன்னவன்சொன்ன துண்மை
யில்லையென்றாற்குமுக் கென்றுவெங்கோடை யிடிவிழுமே" என்ற

கவியால் இவரது நிட்டையில் முருகன் காட்சியருளித் தனது மடியின்மீது இருக்கவைத்து நீ முன்பிறப்பிலெனை தருணகிரிநாதனென்று திருவாக் கருளியதாகச் சத்தியங்கூறிச் சொல்லியுள்ளார். அக்கவியோதிச் சிறுதுயில்கூருமிவரிடம் பின்னுந்தோன்றி, நீ கூறியகவியில், இல்லையென்றால் இடிவிழுமென்றது - தன்மை முன்னிலை படர்க்கை யென்னு மூவிடங்கட்கும் ஒக்குமென் றோதியதாக எம்மிடம் நேரிற் சுவாமிகள் சொல்லக்கேட்டு முள்ளோம். அல்லாமலும்.

"அஞ்சலளித் தாண்டபெருங் கருணைச்சீரு
மருணகிரி தானெனநீ யறைந்தசொல்லும்
வஞ்சகமென் றிகழ்வதற்கு மஞ்சுகின்றேன்
வருத்தமினிச் சகித்திடற்கும் வல்லேனல்லேன்" என்றும்

"தோளிலணி கிளியெனவென் றனைப்பல்காலுஞ்
சொல்லியதுன் னுணர்ச்சிகொண்டோ சுராபானஞ்செய்
வாளிணைக்கண் ணன்னைகுணங் கொண்டோபித்தன்
மகனெனகுணங் கொண்டோவகுத்துச் சொல்லாய்
நாளிகத்திற் பொருள்வினையாற் கழிக்கச்செய்த
னலங்கொல்லோ நீயறியா ஞாயமுண்டோ
பாளிதமெள் ளுண்டைபொரி கடலையாதி
பருகுகளிற் றுடன்பிறந்த பவளக்குன்றே" - என்றும்.

"எத்தனையோ தாமருண கிரியென்றென்னை
யியம்பிய நீயறியார்போ லிருக்கக்கண்டு
பித்தன்மக னதலினுனக்கும் பித்துப்
பிடித்ததோ வென்றுமனம் பெரிதுநொந்தேன்" என்றும்

"எனையளவில் கோடிபோதென தருணகிரி நாதனேயென
விதயமகிழ் வாகவோதிய—குருநாதா" என்றும்

"பனிவேய்வனத்தில் வந்து நீற்றைக்கொடுத்தொர்
கிளிதானெனச் சொலுன்றன் வார்த்தைக்கிடக்கர்
பழுதோது முற்சிறந்த பேற்றைக்காத்த-வருவாயே" என்றும்

ஆங்காங்கு விளங்கக்கூறியதன்றிப் புலவர் புராணத்தில்,

"அத்தகைய வருணகிரிதனைக் குறித்து முருகோனென் னறிவு சான்று, யெத்தனையோ தரமொருசொ லிசைத்துள்ளா னதைப்

பலபாட்டிடத்திற் சற்றுஞ், சித்தமொல்கா துரைத்துள்ளே னின்று வரை சந்தேகந் தீரவில்லை, பொய்த்தமொழியஞ்சாமற் புகலு மவ ரெவரேனும் புலையர்தாமே" என்று குறிப்பாகவும், இந்நூலின் கோபுரத்துச் சருக்கத்தில், ௩க-வது கவியில்,

"முன்னைநாட்புகழ்த் தொகுதியிற் சிறிதிவண் மொழிந்தேன்
பின்னையுள்ளன முடிந்திலவாதலிற் பேசே,
னென்னையும்பொருளாமெனக்கொண்டதவ்வியல்பு" என அத்து விதமாயும் கூறியுள்ளார் இவற்றை நோக்குமிடத்து முருகன்பல முறை தமது மனவெளியிற் றெரிவித்தும், தாம் அருணகிரிதானென நம்பி, யிறுமாந் தொழியாமலும் அவன் சொன்னது வெறும் பொய் யென வெறுத்திகழ்ந்து விடாமலும் நடுநிலையில் நின்று சரியையாதி நாற்பாதங்களினு மீடுபட்டொழுகிய வுத்தமத் தவமுனிவ ரென்பது விவேகிகட்கு நன்கு புலப்படற்பாற்று. இதை விடுத்து முரண்பட வேறுபொருள் கொள்பவ ரிருப்பின், மாலைக் கண்ணனுக்கு மதி யொளி தெரியாதவாறு போலுமென விடுத்தலன்றி வேறின்று. நிற்க மஹான்களாகிய சொருப சித்தர்கள் உலகத்திலுள்ள பிராகிருத சனங்களைப் போன்ற கிஞ்சித்ஞர்களல்லர். தமது பூரண சொரூபத்தி னின்றும், அநேகம் அமிச கலைகளைப் பிரதி பலிப்பிக்கும் சர்வக்ஞர்க ளாதலால், எதிர்காலத்தில் நிகழவேண்டிய விஷயங்களைத் தமது பரம ஞான விளக்கத்தா லுணர்ந்து தம்மிடம் அத்துவிதமாகக் கலந் துள்ள திருவருளியக்கத்திற் கிலக்காய் நின்று ஒரு கலையை யுலகத் தில் விடுவார்களென்ற முறையில் ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகளது ஒரு கலை அவதரித்ததெனக் கொள்வது சால்பாம். அதனால் அவர் பிறந்துவிட்டாரென்றும், பிறந்ததனால் அவர் அடைந்த முத்தி சிதைந்துவிட்டதென்றும் எண்ணுவது பழுது. சுகதுக்கப் பிராப் தாநுபவத்தினிமித்தம் இருவினைகட் கீடாய்ப் பிறக்கும் ஆன்மவர்க் கங்களோ டொப்பாகப் பாவித்தல் கூடாது.

வைதிக சமையங்களாகிய ஆறிலொன்றாகிக் குமார சம்பந்த முள்ளதென்ற பொருளைத் தந்து நிற்கும், கௌமார சமயத்தை நன்கு சிறக்க விளக்கி, அதீத நிர்ச்சய விளக்கத்தைக் குறிப்பிற்காட்ட அருணகிரிநாதராய் விளங்கிப் பின் மேற்சொன்ன கௌமார சத்தத் திலேயே, சாதுர்பாதங்களி னிலைகட் கேற்றவாறு நிச்சயங்களை யநு பூதியிற் கண்டு உலகிற்றோன்றும் உத்தமர்களுக்குப் பாரம்பரியத்தி

லுதவுமாறு சகலபேதவாதங்களினும் எதிர்த்து முரணுமலும், அவற்றில் மடங்கி யமிழாமலும், ஒரே மேல்நிலையில் அமையத்தக்க நிச்சயத்தைக் காட்டும்பொருட்டு முருகன் றிருவுளக் குறிப்பின்படி ஒரு கலை அவதரித்ததெனக் கொள்வதே துணிபு.

அவை வருமாறு

(கௌமார விநோதம்.)

" உள்ளபடி சொல்லுகின்றே னறுபேத
முடையகவு மாரத்தி னுலகமொன்று
தள்ளரிய மகாவிரதந் துவிதமப்பாற்
றுங்கரிய வத்துவிதஞ் சகலர்தம்பால்
விள்ளரிய சமரசம்பி னைத்துமொன்று
விளங்குகின்ற வதீதமென்ப தாறும்போர
மெள்ளரிய நிலையுணர்ந்த பெரியோர்க்காகு
மித்தலத்திற் பிறந்திறப்போ ரேற்றிடாரே "
என்ற தொடக்கத்தனவாகும்.

அவற்றுள், கண்டபாவனு சரிதமார்க்கமான பௌராணிகக் கூற்றைப் பொது விதியாக முற்பகுதி மூன்றுலும், அகண்ட நிச்சய விளக்க மார்க்கமான அநுபூதிக் கூற்றைச் சிறப்பு விதியாகப் பிற்பகுதி மூன்றுலும் வினக்கியருளி அவற்றினங்கமாகப் பல விதி நூல்க ளியற்றியுள்ள பெருங் கருணைத் திறத்தை யான் சொல்ல வல்லனல்லன்.

(கௌமார சூத்திரம்)

" தானே தன்னுட் சகளமாகி
யுள்ளதுதோன்று முருவக்குருவைத்
தெள்ளிமை பொலிந்த சீரியபுலவ
ரதன்சேய்போலு மதுவெனப்பகர்தலு
மூவிருதிசையே முகங்கள்பன்னிரு
நெறிகளுந்தோள்க ணிறைவுறுஞானம்வேன்
மிளிர்தருதொழிலே வேழமாது
வேட்கைவள்ளி மென்கொடிமுதற்குண
மாதியமூன்று மாணமைமயி
லென்னலிற்கூறலு மேழிசைச்சதுமறைச்
சமயமாறைச் சாத்திரப்பகுதியை

மூலமுதலா மொழிதருதலங்களை
யன்னபல்விதத் தணிமுகநிரைபகுத்
தோதலுமொருமுகத் தோதுவாரோது
மாப்பெரும்புகழின் மன்னுங்குரவரி
லோர்வழியமைத்த லொன்றுசீர்படுத்தல்
சின்னெறிப்புலவோர்ச் செகுத்தலாதிய
புரிந்தோர்பலரும் பூமலர்குரவ
நீழலிலமர்தரு நித்தியனெனலும்
வானகத்தணங்கினர் மஞ்சொடுவந்து
செஞ்கிலைக்குறவர்கைத் திருக்குறுகண்ணி
யஞ்சமுங்குயிலு மணிதிகழ்கலவ
மஞ்ஞையும்போல மலிதினைக்காட்டுறு
மிதண்டொறுந்தழையுடுத் திருக்கும்பேதையர்
கைகொடுபற்றிய கார்குழல்பெறுவான்
மறுகுதண்சாரன் மலையெலாமணக்குந்
தாள்களேசதமெனச் சாற்றலும்புற்பறித்
துண்பவைகொல்வார்க் குதவாவுயர்நகர்
நண்பர்பல்லோர் நலமுறக்கருது
முருகவேளென மொழிதலுமென்பான்
முற்பிறப்பாதி மூதுணர்வனந்தஞ்
சொற்பனத்துரைதரு துவர்பொருகனிவாய்
முனிவனென்பது மூடிகமுயர்த்தோன்
றுணையானமதலை சூலிபானுகர்சேய்
வெள்வளைக்கடவுள் விழைவுறுமருகனென்
றிசைத்தலுமழநரை யேறூரிறைவன்
குறுமுனிகிரன் கோபுரத்திருந்தோன்
பகழிக்கூத்தன் படியாக்கவிஞ
னன்னோர்பலருக் கருளியபொருளே
நன்றினத்தினிதென நவில்கையும்வெறூஅர்
தந்தாண்மலர்தரு தனிமணச்சிறுதுகள்
வனைதருதலையினென் மருளறப்புனித
மாதவர்தம்புடை மலிதரவேண்ட
லின்னேயெய்திட லென்னதுகுறிப்பே.”

என்றமைபோற் பலவாவிரியும்.

கந்தக்கடவுள் சிந்தையுவப்பச் சொந்தப் புனிதச் சந்தத் தமிழிற் றெய்விகத் திருப்புகழ் வேதத்தைத் திருவாய்மலர்ந்தருளிய ஆசிரியராகிய ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் தாம் அருளிச் செய்துள்ள கவிகளில், சாமானிய வுலக மனிதர்களின் மாயாபீடித விவகார சஞ்சல பேதங்களைப் பலபடத் தொகுத்து ஆங்காங்கு அவை தமக்குள்ளனபோ லமைத்துக் கூறியது, பாரம் பரிய பக்த சனங்களது பரஸ்பர விண்ணப்பத் துதிகளாகப் படித்து ஈடேற வேண்டுமென்ற பரம கருணையினைச் செலுத்தியவாறேயன்றி அவ்வளவும் அவரிடமிருந்தன வென்றும், இல்லாதிருக்கக் கவி நிரம்புதற் பொருட்டு வாளா கூறினரென்றும் கருதுவது விபரீதம்.

அது வருமாறு

"தொந்திசரிய மயிரே வெளிறநிறை
தந்தமசைய முதுகே வளையவிதழ்
தொங்க வொருகை தடிமேல் வரமகளிர் நகையாடி
தொண்டுகிழவ னிவனா ரெனவிருமல்
கிண்கி ணெனமுனுரையே குழறவிழி
துஞ்சு குருடுபடவே செவிடுபடு செவியாகி
வந்த பிணியுமதிலே மிடையுமொரு
பண்டிதனுமெ யுறுவே தனையுமிள
மைந்த ருடைமைகடனே தெனமுடுகு துயர்மேவி
மங்கை யழுதுவிழவே யமபடர்க
ணின்று சருவமலமே யொழுகவுயிர்
மங்கு பொழுதுகடிதே மயிலின்மிசை வரவேணும்"

என்ற திருப்புகழ்ப்பாவிற் கூறப்பட்டுள்ள தொந்திச் சரிவு முதலிய வுபாதிகள் எவ்வாற்றானுந் தமக்கு நேராவென்பது தமது அநுபூதி ஞான விளக்கத்தா லறிந்து "கந்தரலங்காரத்தில், கண்டாய டாவந்த காவந்து பார்சற்றென் கைக்கிட்டவே" என்றும், "காலன்றனக் கொருக்காலு மஞ்சேன்" என்றும் பாடிய முழுத்துணிவமைந்த முத்தராதலின், மயிலின்மீது முன்னமே முருகனை நேரிற் றெரிசித்துத் தாம் அருட்பேறு பெற்றதன்றிப் பின்பு பிரபுடதேவராசனுக்கும் அத்தகைய காட்சியைக் காண்பித்து அவனிழந்த கண்களையும் அக்கணமே பெற்றுக் கொடுத்த சித்தி வல்லமை நிறைந்த சாத்திய

கௌமார சிரேட்டராகிய அவர்—"உயிர்மங்கு பொழுது கடிதே மயிலின்மிசை வரவேணும்" என முன் அறிக்கை விண்ணப்பஞ் செய்துகொள்ள வேண்டியது அவசியமில்லை. அதுபோல.

"அரகர சிவாயவென்று தினமுநினை யாமனின்று
அறுசமய நீதியொன்று மறியாமல்
அசனமிடு வார்கடங்கண் மனைகடலை வாசனின்று
அநுதினமுநாணமின்றி யழிவேனோ"

என்பதில் மந்திரோச்சரணமான செபமும், உருவ பாவனையான தியானமும் இடைவிடாது செய்து சதுர் வேதங்களில் வரையறுக்கப்பட்டுள்ள, "சௌரம், சைவம், சாத்தேயம், வைணவம், காணபத்யம், கௌமாரம்" என்னும் ஆறு சமய பேதங்களின் அந்தரங்க நிச்சய வுண்மையான சமரச நீதியைச் சிறிதும் அறியாமல் ஆகார முதலிய விருப்பங்கொண்டு நாணமற் றலைந்தழிவேனோ வென்னுங் குறிப்பைக் கொண்டு அப்படி யுழலாமல் முற்கூறியபடி யறிதல் வேண்டுமென அர்த்தாபத்தி ஞாயமாகத் தம்மேல் வைத்துக் கூறியமையை நோக்கில் அவ்வாறு சதுர்வேத சித்தாந்த சண்மத சமயாதீத அத்துவித கௌமார நிச்சயத்தை நேர்வழியில் விதிநூலாயும் துதிநூலாயும், சரித்திரநூலாயும் வெளிப்படச் சொல்லிப் பக்குவிகளுக் குபகரிக்க வேண்டுமென அருணகிரிநாத சுவாமிகளது திருவுள்ளத்திற் கருணைமிகுதியாற் கொண்டிருந்த சங்கற்பசேடத்தை நிறைவேற்றுவதற்குக் காலங் கருதி யிருந்து முருகக்கடவுள் அவ்வருணகிரிநாதரின் அமிசமான வொரு கலையைத் தண்டபாணி சுவாமிகளாக அவதரிக்கும்படி பூவுலகத்துக்கு அனுப்பி யருளின ரெனக் கோடலே மாண்புடைத்தாகும்.

"என்கடவு ளேயுயர்ச்சி யென்று சொல்வா
னிறுமாந்து நாட்கழியா தேங்கிவாடித்
தன்கடவு டிருவுருவைக் காண வேண்டித்
தவித்தானேற் சமரசத்தோர் தம்மிற் சேர்வான்"

"பலவற் றொன்றெனப் பழகப் பழக
யாவுந்தானு வியங்கு மன்றே"
"ஒன்றே பொருளென் றுணரார் ஞானங்
கன்றே தம்பல காட்டுமன்றே'
"ஆறுசமயத் தவருரைக்குந் தெய்வ முற்றும்
வேறுவே றல்ல வென்கை மெய்."

என்றற் றொடக்கத்தனவாக இவரா லியற்றப்பட்டுள்ள நூற்கவிப் பொருள்களும் அந்தக் கொள்கையின் றொடர்ச்சியை நன்கு புலப் படுத்துகின்றன.

தமிழுலகந் தோன்றிய காலந்தொடங்கி யிந்நாள்வரை ஆசிரி யர் அகத்திய முனிவரா லிலக்கணம் வகுக்கப்பட்டிருந்ததைத் தவிர வொருவராலும் பாடப் பெற்றிலதாயிருந்த முதலொலிய லந்தாதி யென்னும் பிரபந்த மிரண்டு, கஊச கலைகளான் முடியும் கவிகள் ௱ம. கொண்டு சமயாதீத பரமான பொதுப் பொருட்டாயும், சண்மத சமயாதீதபரமான பொதுவிற் சிறப்பென்னும் பொருட்டாயும் இயற் றியும், ௱உ, கலைகொண்ட கவிகள் ௱ம, கொண்டு முடிக்கும் நடு வொலியலந்தாதி ஒன்று, பழனித்தலத்தைச் சுட்டிக் கௌமார பரமான சிறப்புப் பொருட்டாயு முரைத்தும், ஷெ விவரப்படி அநே கந் திருப்புகழ்க் கவிகளும் வண்ணத்துறைகளும், வண்ண விலக்கண மும் இயற்றியும்,—ஏகத்தாளிதழகலந்தாதி, எழுகூற்றிருக்கை, எண் கூற்றிருக்கை, ஒன்பது கூற்றிருக்கை, ஒருபது கூற்றிருக்கை, தசாங்கக் கூற்றிருக்கை முதலிய அரும்பெருந்தகையினவான கவித் திறமையைப் பெயர்த்தெழுதாப் பெற்றியினியற்றி யருளி "வாக் குக் கருணகிரி" என்ற அபியுக்தர் செய்யுளின் பொருளைத் தமது நடையிலும் காட்டி விளங்கும் எமது பரமசற்குரு மூர்த்தமாகிய— மஹான் வண்ணச் சரபம், திருப்புகழ்ச் சுவாமிகள் முருகதாச சுவாமிகளென்ற ஸ்ரீலஸ்ரீ தண்டபாணி சுவாமிகளது கைம்மாறில்லாக் கருணையெம்மை அடியவர் குழுவுட னமைத்துக் காத்தருள்க.

இத்தகைய பெருமைகளமைந்த ஸ்ரீலஸ்ரீ தண்டபாணி சுவாமிகளாலருளிச் செய்யப்பட்ட இந்த அருணகிரிநாத சுவாமிகள் புராணத்தை, ருடு-வருடங்கட்கு முன்பு திருநெல்வேலியில் ஷெ சுவாமிகளே அச்சிட்டுலகிற்பரவ வைத்தனர்-அது நெடுங்காலமான மையால் இக்காலத்துள்ள அன்பர்களுக்கு ஷெ புத்தகம் கிடைத்த வின்றானமை பற்றி, இரண்டாவது பதிப்பு, மதுரை—ஸ்ரீ—சுந்தர ராஜ பாகவதர் குமாரர், புதுவை—ஜவுளிவர்த்தகம், ஸ்ரீ—சு—நன்னைய பாகவதரவர்களின் மனப்பூர்த்தியான பொருளுதவியைக்கொண்டு திருவாமாத்தூர்க் கௌமார சபையாரால் அச்சிட்டுப் பிரசுரிக்கப் பட்டது, குமாரபக்திக்குரிய கௌமாரர்க ளொவ்வொருவரும்

இந்தநூலை ஆதரத்துடன் ஏற்றுக்கொள்ளக் கடமைப்பட்டவர்களே யென்பது நிச்சயம்.

வெண்பா

தண்டபா ணிப்பெரியன் றனே யருணகிரித்
தொண்டனென முன்னவிர்ந்த சூழ்ச்சியால்-விண்டவருட்
காவியத்தி னுண்மைக் கருத்தறியுங் கற்பினர்தாட்
சேவியத்த தென்றன் சிரம்.

இராத்தாக்ஷி-ஸ்ரீ இடபரவி } இங்ஙனம்
ஷை சுவாமிகள் மாணுக்கனும் குமாரனுமான

தி. மு. செந்திநயகம் பிள்ளை

கௌமாரமடாலயம்

திருவாமாத்தூர்

குருபாதமேகதி

உ

முருகக்கடவுடுணை

சா த் து க வி க ள்

திருநெல்வேலிப்புதுத்தெரு

மகாராஜராஜஸ்ரீ

தச்சனல்லூர் வன்னியப்பபிள்ளையவர்கள்

குமாரர்

அழகியசொக்கநாதபிள்ளையவர்கள்

இயற்றியது

மருமலி திருநெல்வேலி வடக்கன வரததானத்
தெருவளர் தண்டபாணி திருப்புகழ்க்காரன் செஞ்சொன்
முருகதா சனுமாமென்ன முப்பெயர் தரித்தமேலோன்
பெருமைதா னளவிட்டென்றற் பேசருந் தகைமைத்தம்மா. (க)

மந்தமாருத வரைமுனிவான்றமிழ் வளரச்
சந்தமாமழை பொழிமுகிலருணையந் தலத்தில்
வந்தமாதவன் சரித்திரம்விரித்தனன் மாயைப்
பந்தமாசறு தண்டபாணிப்பெயர் படைத்தோன். (உ)

அடிக்குமுன்னோர் விதிக்குமின்சொற் சுவைக்குமொரு குறைவு வரா தமைத்தோர்பாட்டு, முடிக்குமுன்னந் தாய்கொடுத்த சேனையெல்லாம் வாங்குதையோ முதிரக்கல்வி, படிக்குமுன்னே தொடுத்தடுத்துக் கேட்போர்கள் பிரமிக்கும் படிக்குமொவ்வோர், நொடிக்கு முன்னற் கினியகவி முருகதாசனைப்போல நுவல்வாரியாரே. (௩)

சீதையிற்பணில மணிதிகழ்பழனஞ் சிறந்ததென்னருணையிற் செப்பு, மோதைசால்பழைய திருப்புகழ்க்கார னுயாருட்குமானுலுய்ந்த, காதையைப்புதிய திருப்புகழ்க்காரன் கழறிய வுண்மையைக்காண்போர், தாதையாஞ்செந்தி னாயகன்பெருமை தனைநினைந் துருகனிச்சயமே. (௪)

குழிப்பு

தனன தன தான தந்த தனதானா

அருணையுயர் கோபுரங்கொ ணிலையின்வட பால்விளங்கு
மமலனிசை பாடியுய்ந்த கிளியாமோ
ரருணகிரி நாதர்முந்து கதையையுல கோரறிந்த
வளவிலவர் வாயில்வந்த படிபேசா
திருளறவ மாதவன்ற னரியவிளை யாடலின்ப
மிலகியபு ராணமொன்றை யெளிதாயே
யெவருமுணர் வாறுநெருங்கு கடலின்மடை வாய்திறந்த
தெனவுரைசெய் தான்முதிர்ந்த தமிழாலே
திருமலையி லேறியன்பு மிகுமுறுதி யாலுருண்டு
சிறிதுமுட லூனமின்றி யெழுவோன்வேள்
செயுமடலி னல்வருந்தும் வினைமுழுது மாறவென்ற
திறமையினன் வேயடர்ந்த வனமூடே
மருள்றும்வி பூதியென்ற பொடியணிகு லாவவென்றி
மருவுகவு மாரமென்ற மதமோடே
வருமுருக தாசனென்ற களிறுபல கோடிதொண்டர்
மகிழ்திருநெல் வேலிவந்த பெரியோனே. (௫)

உ

இஃது

திருநெல்வேலி

வடக்கனவரததான விநாயகர்கோவிற்றெரு

மகாராஜராஜஸ்ரீ

செந்தினாயகம்பிள்ளையவர்கள்

குமாரரும்

இந்நூலாசிரியரதுமாணாக்கர்களிலொருவருங்கனிட்டசகோதரரு

மாகிய

சித்திரபுத்திரபிள்ளையவர்கள்

இயற்றியது

கந்தவேள் புயத்திற்சந்தக் கவிமிகப் புனைந்தோன்றன்சீ
ரிந்தவா றாமென்றியாரு மெளிதினிற் றெளிதல்வேண்டி
யந்தமெய்ச் சரிதந்தன்னை யருந்தமிழ்க் கவியிற்சொன்னான்
சந்தனப் பொழில்சூழ்நெல்லைத் தண்டபாணியனென்போனே. (க)

அருணையம்பதிவந் துதித்தமாதவன்ற னருள்விளையாடல்களனைத்தும், பொருணயம்பெறுசீர்த் தமிழ்க்கவியதனாற் புகன்றெமதுளத்தினிற்பொருத்தி, யிருணையப்புரிந்த முருகதாசனைவே லேந்தியகுருபரற் கினிய, கருணையங்கடலை யநுதினந்துதித்துக் கரங்குவித்திருப்பதென்கடனே. (உ)

நீடியசீர்த் திருவருணைச் சிகரிவாயி
னிலைக்குவட புறத்தினிற்கு நிமலவேளைப்
பாடியபைங் கிளிப்புலவன் சரிதந்தன்னைப்
பலவாறிவ் வுலகத்தார் பகராவண்ண
நாடியருண் மலிமுருக தாசனென்னு
நலங்குலவு திருப்புகழோ னவின்றானன்பாற்
றேடியமெய்க் கவுமாரர் பலருங்கேட்டுச்
சிரமசைத்துக் களிகூர்ந்து சிறப்புற்றாரே. (ங)

குழிப்பு

தனனதன தானந் தனதனத் தான தய்யானு

கயிலையிறை யாளுங் கழைவனத் தூரி னல்லோர்சூழ்
களிமருவு சீலன் றமிழ்வனப் பாரும் வல்வாயான்
வெயிலவனை நேரும் புகழுடைத் தூயன் மெய்கோடா
விறன்முருக தாசன் றிருவருட் சீரை யெள்ளாதா
னெயிலினிடை வாழுந் தகுவரைப் போரில் வெல்சீரா
லிமையவர்கள் பேணும் பெருமைபெற் றியாது மொவ்வாதா
மயிலணியு மார்பன் கழல்விருப் பாளர் சொல்லாலே
யருணகிரி நாதன் கதையினைப் பாடல் செய்தானே. (௬)

உ

திருநெல்வேலி

ஒளிமுத்துத்தொண்டமான்

குமாரரும்

இந்நூலாசிரியரது மாணக்கர்களிலொருவருமாகிய

அருணசலத்தொண்டமான்

இயற்றியது

ஆண்டிமையோர்க்கருள்புரிந்த குமரகுருபரக்கடவுட் கடிமைத் தன்மை, பூண்டினியதமிழ்சந்தக் கவிபொழியுமருணகிரிப் புலவன் காதை, வேண்டியவாறுலகுரைக்கும் பொய்மைதவிர்ந்திடமெய்மை விளங்கவெங்கள், பாண்டிநன்னாட்டுறுநெல்லைப் பதிமுருகதாசனன் பிற் பகர்ந்திட்டானே.

கந்தனேபரமென் றுணர்ந்ததாலவன்பொற் கழல்களையநுதினந் துதித்த செந்தமிழ்ச்சந்தப் பைங்கிளிப்புலவன் றிருச்சரித்திரந் தனைத்தெரித்தான், மந்தமாருதம்வந் துலவியநெல்லை மாநகரிடத் தயிற்படையைச், சந்ததம்போற்றி யருள்பெறுமுருக தாசனு மாசி லாதவனே. (௨)

பொங்கரவ மணிந்தபிரா னருணைநகர்ச் சிகரிப்
    புகழோங்கத் தமிழ்க்கவிதை பொழிந்தவன்றன் கதையை
யைங்கரத்தோன் றனக்கிளைய குமரகுரு பரவே
    ளநுக்கிரகப் படியுரைத்தென் மனக்கவலை தவிர்த்தான்
பங்கமில்சீ ரருள்வடிவு முழுதணிந்த நீறும்
    பவளநிறத் தானையொன்றும் பழுதறுகண் டிகையு
மெங்கணுமெச் சியதிறல்வாய்ந் திலங்குதண்ட பாணி
    யென்னுமொரு திருப்பெயரு மிசைந்துடையோன் றானே. ()

குழிப்பு

தனன தனதன தய்யத் தனதன தத்தன தந்தனனு.

படியிலுயர்திரு நெல்லைப்பதிவரு பத்தர்தினம்பகர்சீர்
    பழகுமனதின னுய்வைத்தருதவ முற்றுமுணர்ந்தருள்வோன்
மிடியினிடைபடு மல்லற் பிணியைய றுத்தெறியுந்திறல்சேர்
    விரதனதிநய மல்கிக் குலவுதி ருப்புகழும் பொழிவோன்
முடிவில்சமரச வெள்ளக்கருணைவ னப்பவிர்பண்பினரா
    முனிவரதிபதி வைசந்தகுபொதி யைத்தமிழின்கவியா
லடிமைகொளுமுரு கையற் குரிமைமி கப்பெறுபைங்கிளியா
    மருணகிரிமுனி மெய்மைச்சரிதமு ரைக்கவறிந்தனமே. (ச)

சாத்துகவிகள் முற்றியன

வேலுமயிலுந்துணை

௨

குருவேதுணை

பதிப்புப்பாயிரம்

ஸ்ரீலஸ்ரீ தண்டபாணி சுவாமிகள்

குமாரர்

தி. மு. செந்திநாயகம்பிள்ளை யவர்களியற்றியது

எழுசீர் விருத்தங்கள்

அருள்வளம்பெருகு நெல்லையம்பதியி லவதரித்திளமையிற்குமரன், றெருள்வளக்கருணை யடைந்துசெந்தமிழின் செழுங்கடல் கடைந்துதெள்ளமுதாம், பொருள்வளங்குலவு பலகவிப்பனுவல் புகன்று பின்னருணையூர்ப்புலவன், மருள்வளங்கெடுமெய் யருளநுபூதி வாய்ந்ததோர்மகிமைசேர்கதையை. (௧)

எமதுசற்குருவுந் தந்தையுந்தேவு மியாவுமாந்திருப்புகழ்முனிவன், றமமறுமுருக தாசன்மெய்யுரிமைத் தண்டபாணியன்றமிழ்ச் சரபன், விமலமாந்தனது தெளிவநுபவத்தால் விதித்தனன்புராண காவியமா, யமரர்வந்தனைசெய் திடமுதற்பதிப்பித் தனந்தவாண் டானதாலம்மா. (௨)

இந்தநாள்கல்வி யுபாசனையன்பி லிசைந்துகௌமாரமார்க்கத் தில், வந்தமைபவர்க ளறிந்துவப்புறுஞ்சீர் வாய்ப்பவச்சினின் மறு பதிப்பாய்ச், சொந்தமாமுளத்தின் றெளிவினுற்புதுக்கித் துகளிலக் குருபரன்றளியில், வந்ததோரிருபத் தாறெனும்பெருமை வளர்குரு பூசைநற்றினத்தில். (௩)

சிரவணபுரம்வாழ் தருகவுமார திலகராமானந்தமுனிவன், கர வறுதிருவாக் குரைப்படியன்பர் கவிப்புலவோர்பலர்குழுவி, லூர முடனரங்கேற் றிடும்விழா வியற்றி யுத்தமப்பயன்முழுமையும்பெற, றரனரிமுதற்றே வனைத்துமாம்பரத்தி னருளினுக்குரிமைபூண்ட னனே. (௪)

அத்தகைவாழ்வு பெற்றவன்மதுரை யவிர்ந்தநற்சுந்தராசன், மெய்த்தவப்புதல்வ னாகியுற்பவித்தோன் வியன்பொலிபுதுவையம் பதியிற், சுத்தமார்செல்வ மிகைகொடுதூசு துலங்குவாணிபம்புரி தூயன், பத்தர்சொற்சாரம் பருகு நன்னய பாகவதப்பெயரோனே.

குருபாதமேகதி

உ

குருவேதுணை

அட்டவணை

குருபாதமேகதி.

உ

முருகக்கடவுட்டுணை.

அருணகிரிநாதசுவாமிகள் புராணம்.

பொதுப்பாயிரம்.

விநாயகர்துதி.

வேதநான்கும் விளங்கவிளக்கிய
மாதவன்சொல் வரைந்தவன்றாள்பணிந்
தேதமின்றி யிலங்கருணைக்கணோர்
நாதன்வந்த நலஞ்சொலநண்ணுவாம். (௧)

முருகர்துதி.

ஆறுதிசையேமுகமாய்ச் சமயங்களீராறே யடற்றோளாகி
வீறுபராஞ்சிவமெனச்சொல் லிருநூலின்பொருண்முடிவே வியன்றாளாகி
யீறுமுதனடுவின்றி யிலங்குகுகப்பெருமானே யெனைநீயன்பாற்
கூறுகெனச்சொன்னபடி நின்னருணகிரிசரிதங் குலவச்செய்யே. (௨)

ஆறுசமையத்துக்கடவுளர்துதி.

ஆதவன்சிவ னம்பிகைமுராரி யாகு
மீதமர்ந்தவன் குகனெனுமறுவரை யிறைவாங்
கோதகன்றதென் னருணையின்கோபுரத் துய்ந்த
போதகன்றிருச் சரிதமெய்ப்பொருடரும் பொருட்டே. (௩)

சரசுவதிதுதி.

பூமிசை யிருந்தபோதன் புனிதநா வகத்தில்வாழு
மாமயிலே யுனக்கு நூறு வந்தனம் வடிவேல்கொண்ட
சாமியாந் தந்தைமாற்றந் தவறிடா துரைக்கலுற்ற
தாமிதிற் பிழைவாராம லருள்வதுன் கடன்கண்டாயே. (௪)

அடியார்துதி.

இளங்குரும்பை முலைப்பரவை கணவன்முன்னா
ளெடுத்தியம்பு மெய்யடியா ரெழிற்றாள் போற்றிக்
களங்கமில்சீர்க் குமாரத் தொகையினையேன்
கழறியவர் தம்மையெல்லாங் கருதிப்போற்றி
யுளங்களிக்க மாதவத்தாற் பிறவாவீட்டி
லுற்றவர்க ளனைவரையு மொருங்குபோற்றி
விளங்குபுக ழருணகிரி நாதனைன்
மெய்ச்சரிதஞ் சிறிதுரைக்க விரும்பினேனே. (௫)

போதுத்தெய்வத்துதி.

கருசல்வெளிறிடலாதி யாமெண்ணில்கோதுங் களைந்தென்றனக்
கருணகிரிநாதன் புகழ்க்காதை நவில்பாட லருள்செய்யுமா
லொருமையொடுபன்மைக்கு நடுவாகியுறவாகி யுயிர்கொன்றுணர்
லருமமின்படனந்தோறு நினைகின்றவண்ணத்தி லவளர்தெய்வமே. (௬)

பொதுப்பாயிரமுற்றிற்று.

வேலுமயிலுந்துணை.

சிறப்புப்பாயிரம்.

விநாயகர்துதி.

ஆகமங்கள் சொன்ன ரருணைச் சிகரியிற்றென்
பாகமுறு மானைமுகப் பண்ணவனை யெண்ணலுற்றாங்
கோகனக வேதனழக் குட்டியவன் கைக்கிளியின்
மாகதையைச் செந்தமிழால் வாழ்த்துநலம் வாய்க்கவென்றே. (௧)

முருகர்துதி.

திருவருணைவல்லாளன் கோபுரத்தின்வடவருகிற் றிகழுஞ்சேயைக்
குருதிவடிவேற்படையைக் குலமயிலைச்செஞ்சேவற் கொடியைக்கும்பிட்
டருள்பொழிசட்குஞ்சரியைக் குறமகளை மிகப்போற்றி யணியார்கிள்ளை
யுருவெடுத்துந்தமிழ்பாடு மொருபுலவர்புகழுரைத்தற் றுணிந்தேனே. ()

ஏழிளையனார்க்கும்போதுத்துதி.

தென்னருணைச் சிகரியினி லொருகற்றூணிற்
றிகழும்வட வீதியிலோர் சிறியகுன்றிற்
றன்னதென-வாகமஞ்சொல்-வடமேற்றிக்கிற்
றனதடியா ரெனும்பெயரே சாதிப்போர
மன்னவர்தந் தெருவின்மற்றுஞ்சொல்வார் சொல்லு
மவ்விடத்தி லேழுருக்கொண் டாடும்வேளை
யின்னலொழித் தெளிதாளு மிளையோன் றன்னை
யிறைஞ்சுகின்றே னவன்கிளிச்சீ ரியங்கவென்றே. (௩)

அண்ணாமலையார்துதி.

மாலோடய னிகலுந்தின மலையாய்நடு நின்ற
மேலோனைவ ணங்கித்துதி மிகவும்பகர் வேமால்
வேலோனது கிளியின்புகழ் விண்ணோருணர் வதுபோற்
பூலோகரு மறியும்படி புகலப்பெறு மாறே. (௪)

உண்ணாமுலையம்மன்துதி.

வார்செவிக்குழையாய் வளையணிபெருமான்
மகிழுமுண்ணாமுலைமாதின்
சீர்செறிந்தலர்ந்த கமலமென் மலர்போற்
றிகழ்பதஞ்சென்னியிற்சேர்ப்பாம்
போர்செயுமவுணர் குலமறக் கறுவிப்
புலவரைப் புரந்தவேற்புனித
னோர்செழுங்கரத்திற் கிளியுருவாகி
யுறைந்தவன்சரிதமுற்றுறவே. (௫)

வீரவாகுமூர்த்திதுதி.

விற்கொண்டுசரமாரி பொழிமேகமெனநிற்கும் விறல்வீரவா
கற்கொண்டதிருமேனி தனைநாடியவனன்ப ரடல்கூறுவாம்
பொற்கொண்டுசெயுமாட மலிவீதியருணபு ரிக்கோபுரத்
திற்கொண்டுவளர்வேல னணிகிள்ளையெனுமன்ப னிசைநீடவே (௬)

அகத்தியமகாமுனிவர்துதி.

தெருளும்பெரியோர் புகழ்தென்பொதிகை
மருவுங்குறுமா முனியைப்பணிவாம்

பொருமங்கசவேள் கிளிபுண்படவேன்
முருகன்கிளிவண் மைமொழிந்திடவே. (௭)

அருணகிரிநாதர்துதி.

உன்சரிதந்தனைப்பலவா றுலகத்தார்பகர்வதுகேட் டுளம்பொருமன்
முன்சரிதந் தனைக்கூட்டிச் சொலப்புகுந்தே னவையாவு முறையிற்றந்தா
ளென்சரிதங் கருதியெண்மூக் களவுமனநாணுகிலா வெனைத்தள்ளாதே
பொன்சரிதங் கியகாத்தார்க் கொருமதனு மருணகிரிப் புலவரேறே. (௮)

உண்மை.

முக்காலத் துறு செயலு மறிந்துவப்போனல்லேன்
முருகோனை மயிற்பரியின் முன்வரக்கண்டில்லேன்
மைக்கால னிகர்விழியார் மயலொழிந்தோர்வேடம்
வஞ்சகத்தாற் றரித்துலகின் மனைதோறும்புகுவே
னக்காலத் தருணகிரி நாதனருட்சரித
மறிந்தவன்போற்பிதற்றுவதற் காசைகொடுதுணிந்தே
னெக்காலத் தெச்செயலு மிறைவனதேயென்னு
மியல்புடையா ரல்லாதா ரிகழ்வதுநிச்சயமே. (௯)

அவனசையா விடிலணுவு மசையாதென்றிடலு
மயில்வேளென் னெடுசிலரு மறியவுரைத்ததுவுஞ்
சிவனனைய தமிழ்முனிநா லையாண்டுசென்று
செப்புமரைக் கவியெனினுந் தெய்வச்சார்பெனலுங்
கவனமுற்றுங் கலைவாணி தொழிலெனவே பல்லோர்
கழறுதலும் பொய்யாகிற்கடல்சூழுமுலகத்
தெவனருண கிரிநாதன் சரிதமதைக்கேட்டெங்
கெவ்வாறு சொல்லிடினு மெனக்கதுசம்மதமே. (௧௦)

பிறந்தவுடன் றுதைபின்போய்க் கயிலைவரைகண்டு
பிறைசூடி தனைப்பணிந்து பின்னடக்கும்வண்ணஞ்
சிறந்தகதை கணபதிதன் கரத்துறுகோடதனாற்
செம்பொன்மலை மீதெழுதச் செப்பியமாமுனிவன்
றிறந்தழைக்கும் பனுவலையு மிகழ்வாருஞ்சில்லோர்
திரிதருமிப் பூதலத்திற் சிறிதேனுநாணு
தறந்தவிராவருணைநகர்க் கிளிப்புலவன்காதை
யடியனேன் சொலத்துணிந்த தாச்சரியத்துயர்வே. (௧௧)

எத்திசையும் புகழருணைச் சிகரிவடவருகி
லெழில்வேலுஞ் சிகிப்பரியு மிலங்கவிளையாடு
முத்திமுத லாமுருகக் கடவுளைக்கைதொழுது
முன்னுளி லருணகிரி முனிவனெனும்புலவன்
சித்தியடைந் ததைமுழுதுந் தெரிந்துரைக்கத்தக்க
திறம்போதாமையிற்றமியேன் சிறிதொருவாறுரைப்பேன்
பத்தியிலா னென்றிகழ்வார் தவப்புரியச்செய்வார்
பரவுவா ரிறுமாந்து-பழுதுறச்செய்வாரே. (கஉ)

வரலாறு.

அறிவாய பொருணனவிற் கனவிற்றானே
யறிவிக்கு மவைகொஞ்ச மவையவங்கள்
செறிவான குருச்சொல்லல் கொஞ்சமேலோர்
தெரித்தல்கொஞ்ச முலகத்தார் செப்பல்கொஞ்ச
நெறியோடு கலந்தருண கிரிநாதன்சீர்
நிறைந்துளகா வியம்பகர்வே னேமிக்காவின்
மறியேந்தி யெனவாழுஞ் சூதன்சொல்ல
மாமுனிவர் கேட்டதென்றான் மனமொப்பாரே. (கங)

எண்ணில்பல கோடிதொண்டர் முருகவேளை
யிறைஞ்சிநிற்க வருணகிரி யென்னுநற்பேர்த்
திண்ணியன்றா னத்தனைபே றடைந்தஞாயந்
திகழும்வண்ண மவனுயிரிற் சேர்ந்தபூர்வ
புண்ணியத்திற் சற்றறிந்த மட்டுஞ்சொல்வேன்
புறக்கருவி யுட்கருவிப் பொருத்தமியாவு
நண்ணியசைப் பவனுணர்த்தா விதத்தைக்கேட்டா
ஞறியே னென்பதற்கு நாணிடேனே (கச)

சிறப்புப்பாயிரமுற்றிற்று.

ஆக - கவி உ௦.

வேலுமயிலுந்துணை.

உ

முருகக்கடவுடுணை.

அருணகிரிநாதசுவாமிகள் புராணம்.

பூர்வபுண்ணியச் சருக்கம்.

தமிழ்மணங்கமழ் தென்றலுஞ்சந்தனக் காவு
மமிழ்தைநேர்சுவைப் பொருநையாதியநதி யாகு
மிமிழ்வருதவெள் ளருவியின்கூட்டமு மேமச்
சிமிழ்குலாவிய முலையாமகளிர்தஞ் செறிவும். (௧)

சித்தர் தங்கணங் குகைதொறுநிலவிய சிறப்புஞ்
சத்தமேகமு மடைகிடந்தறல்பொழி தகையுஞ்
சுத்தநான்மறை நெறிகொள்வாரறுவர்சொற் றுதியும்
புத்தராதியர் நினைதொறுநடுக்குறும் புகழும். (௨)

வெருவிவானரக் குலத்துடல்விதிர்ப்புறப் பிளிறுங்
கருவியானையின் மதமலர்கனியிறால் கலுழ்தேன்
மருவியோடிடு மோடையுமாதிய வளத்தாற்
பொருவிலாநலங் கொடுதிகழ்சுந்தரப் பொதியை. (௩)

கல்லின்மேன்மலர் கமலநாண்மலர்த்திரள் கண்ணாய்
வல்லிமான்மயி லணங்கினமாகிவா லருவி
மல்லிலங்கிய வச்சிரப்படையதாய் வயங்கப்
புல்லியிந்திரன் றானெனப்பொலியுமப் பொருப்பு. (௪)

வாணிநீங்கரு முகத்தினாற்பல்லுயிர் வருக்கம்
பேணியீகையாற் பொன்னெனப்பிறங்கொளி தன்னான்
மாணிலாவிய மாதவர்குழுவினான் மலரே
காணியாமென வதிதரும்விதியினைக் கடுக்கும். (௫)

அந்தவேளையி லமரர்கின்னரர்முத லானோர்
சந்தமாமலர் பொழிந்தனர்கயிலையா னெறும்பைத்
தங்கமாலிணைச் சிலங்கியைத் தறுகண்வா ளரவை
முங்கவாண்டமை போலுமீதெனமிக மொழிந்தார். (௨௨)

தன்னுநக்கொடு சந்தனமால்வரைக் குவட்டின்
முன்னுறைந்தவா றெழுந் தருளினன் முனிக் கோமான்
றன்னுடக்குநாளையுள்வளர்ந்தது பெருந் துணிவாற்
பன்னுமாதவர் பற்பலர்புகழ்ந்தனர் பணிந்தார். (௨௩)

முத்தமிட்டனர் முதுகினைத்தடவின ரன்றிப்
பத்தமுற்றவா பலவிதம்பயின்றனர் பண்டு
மைத்தகைத்திரு மாலணிநெற்றியிற் சூலக்
குத்தமைத்தவன் களித்தருள்வரமிகக் கொண்டார். (௨௪)

ஆனநாளின்மற் றோர்பிரமாண்டமுற் றரிய
ஞானமின்றியெண் சித்தியும்பெற்றொரு நாத
னியானடைந்தபே றெவர்க்குளதென்றிறு மாப்போன்
வானமேவழி யெனக் கொடிப்புவனியில் வந்தான். (௨௫)

இங்குவந்தவ னெண்ணிலாமுனிவர ரென்றுந்
தங்குமால்வரை பொதியையே யெனத்தெளி தகையா
லங்குபோயளப் பரும்புகழ்க்குறுமுனி யறியப்
பொங்குமாணவ வழுக்குறுமொழிசில புகன்றான். (௨௬)

சேட்டுமாதவன் மறுமொழிகிளத்திலன் றனது
மாட்டுவைகிய சுணங்கன்மேல்வலக்கைவெண் ணீறு
போட்டுநோக்கின னுடனதுசெந்தமிழ்ப் புதிய
பாட்டுமாலிகை பகர்ந்திடத்துவக்கிய தன்றே. (௨௭)

அன்னவற்புதங் காண்டலுமவனடு நடுங்கித்
தன்னகங்குலைந் திறைஞ்சினன்பணிந்தனன் றவர்கோன்
பொன்னடித்துணை சுமப்பதில்விழைவொடு புலர்ந்தா
னின்னதன்மைகண் டிருங்கடல்குடித்தவா யியம்பும். (௨௮)

ஆணவப்பிணி கொடிதினுட்கொடியதே யயிலோன்
றுணையந்தவர்க் கல்லதப்பெரும்பகை தவிரா

வேணபேறடைந் தானுமியானுயர்வெனல் வெண்மை
நாணமோடுதற் பழித்தன்மெய்புணர்வென நவின்று. (௨௯)

தொண்டர்தாண்மலர்த் தொழுநலம்பெறும்படி சொல்லிப்
புண்டரீகனைப் புடைத்தவன்றந்தமெய்ப் பொருளோன்
றுண்டதைத்தரும் பருவமீதன்றென வுரைக்க
வண்டர்வேண்டுமெய்ப் பணிசெயுமவர்புடை யடைந்தான். (௩௦)

கொள்ளைநாட்கழித் தகத்தியப் பெயர்முனிக் கோன்றன்
பிள்ளைபோல்வளர்த் தருளியபேறுறப் பெற்ற
வெள்ளைநாயகநின் விருப்பமியாதுரையென வினவ
வெள்ளைநேர்குறை தானுமெற்கிலையெனு தந்தோ. (௩௧)

கற்பகத்தரு நிழலரசுரிமையிற் கடையே
னிற்பதற்கவா வடைந்தனனென்றது நிகழ்த்து
மற்பவாசகங் கேட்டலுநகைத்தன னந்நாள்
சற்பமாகவோ ரிந்திரன்றனைச்செயுந் தகையோன். (௩௨)

இழிகுலத்தினர்க் கெத்தனைமேன்மையெய் திடினு
மழிவின்மெய்ப்புகழ் விரும்பிடாரென்றுளத் தமைத்து
விழிகளாலுடன் பெறும்படிவிடுத்தனன் வினைபோ
யொழியும்வீடுமோர் நொடியினிற்றரத்தகு முரவோன். (௩௩)

புதியவிந்திரன் பொன்னகர்புகுதலும் பழையோன்
மதிகுலாமுகச் சசியைவிட்டழச்சிவன் மலர்த்தாட்
டுதிகொள்பூதர்வந் தடுத்தனர்பிடித்தனர் தொலையா
விதியைவெல்பவ ரியாவரென்றேங்கியு மெலிந்தான். (௩௪)

ஒற்றையிந்திரன் கனகமால்வரைக்குகையூடுற்
றெற்றைநாடுணை யெய்துமென்றிருந்தவ னிகலா
மற்றையோன்வரக் கண்டுளமகிழ்ந்தனன் வந்தோ
னற்றைவாழ்வடைந் தவன்வரற்குறித்துநொந் தனனால். (௩௫)

அம்மலைக்குகை யடைத்தடற்கணங்கள்போ யினபின்
மும்மலப்பிணக் கொழிந்தமாமுனிவனென் முகிலூர்
செம்மலானவன் செழுமலர்க்கற்பக நிழற்கீழ்
விம்மலார்முலை யணங்கரான்மகிழ்ந்தனன் வெகுநாள். (௩௬)

சூரனாதிய தகுவராற்பெருந்துயர் துய்த்தான்
வீரவேலன்மா லனையராற்பகையற வென்றா
னீரமில்லவ ரிடுமகத்தவிகளு மேற்றா
னாதன்சொலாற் பரிபல,திருடவு நயந்தான். (௩௭)

இந்தவாறுபல் விதம்புரிந்திலங்கு நாளிகத்திற்
சந்தநாண்மலர்க் கமலனோதியபடி கனவில்
வெந்தவாம்பரி நூறயின்றிடுமொரு வேந்தன்
றந்தவெண்களி றாதியாந்தகையெலாங் கவர்ந்தான் (௩௮)

முன்னுளாருட னிவனுமுற்றிடைந்தனன் முறையிற்
பின்னுமோரிரண் டிந்திரர்பெயர்ந்தனர் பிறங்கன்
மன்னுமைவருங் கவுரவக்குலத்திடை வையம்
பன்னுபாண்டவ ராயினரன்னவர் பகுப்பில். (௩௯)

வேறு.

மத்தியிந்திரனாத்தென்றல் வரைமுனியருளால்வந்தோ
னத்திறத்தடற்காண்டீப னாகினனவனைமாயன்
சத்தியினரனென்றோங்குந் தனிக்கலைபுணர்ந்தநீரான்
மெய்த்திறல்கீர்த்தியாதி வியனெலாமிகுத்ததம்மா. (௪0)

ஈசனைத்தடங்கைவில்லா லிசைபடச்சடையின்மோதித்
தேசவிர்கணைபெற்றுய்ந்தான் றிருமலிகனகநாட்டு
வாசவன்பகைவர்ச்செற்றான் மணிமுகிலனையமேனிக்
கேசவன்சூதனாகிக் கீழிருந்திடவுங்கண்டான். (௪௧)

இவ்விதத்தவன்செயாட லியாவையுமெளிதிற்றேர்ந்து
செவ்விதினுரைக்கவல்லான் சிவனெனத்திகழ்பராசன்
மைவிழிப்பேதைதன்பால் வழங்கியமகவேயல்லா
லௌவியநெஞ்சத்தென்போன் றவர்சொலிலடங்காதன்றே. (௪௨)

வெண்ணகைமடவார்தாமே விரும்பிடும்வியன்றோட்பார்த்தன்
றிண்ணனென்றுருவங்கொண்டு சிறந்துயர்திருக்காளத்தி
யண்ணலுக்கன்பனாகி யடிபணிந்தாறுநாளிற்
கண்ணைநப்பறித்தூவெள்ளிக் கயிலைமாமலையிற்சேர்ந்தான். (௪௩)

கீரனென்றவனேதோன்றிக் கிளர்தமிழ்ப்பலகையேறி
யீரமின்மனத்தார்போலு மீசனோடெதிர்வாதிட்டுக்

காரமர்பொதியைக்கோமான் கழறிலக்கணநூல்கேட்டுக்
கோரவல்லரக்கிதன்னாற் குகையினுட்குறுகிநொந்து. (௪௪)

பைந்தமிழ்ப்பனுவலாற்றுப் படையெனவொன்றுபாடிக்
கந்தனுக்கணிந்துசெம்பொற் கதிரயிற்படையான்மீண்டு
மந்தவன்பகட்டுக்கூற்றின் வசமுறுவரம்பெற்றேகிச்
சிந்தனைக்கினியவாழ்விற் சிறிதுநாளிருந்தபின்னர் (௪௫)

முதிர்தமிழ்க்கவிதைப்பொய்யா மொழியெனவந்துதோன்றி
யதிர்தொனிக்கடகச்செங்கை யணங்கனோரிவைதன்னை
விதிமுறைமணந்துரோமம் வெளிறுமட்டின்பத்தோடு
மதியினைச்சுடுவதாய வறுமையுந்துய்த்தான்மன்னோ. (௪௬)

எவ்வகைத்துயருற்றாலு மீசனையன்றிமற்றோர்
தெய்வமுந்துதியேனென்னுந் திடத்தினிற்சிறந்தான் செவ்வேள்
கைவயின்வேலுந்தோன்றக் கனவினிற்பலகால்வந்து
செவ்வனப்புறுபாட்டென்மேற் செப்பெனவிரக்கக் கண்டான். (௪௭)

கோழியும்பாடிக்குஞ்சுங் கூறிடேனெனவேசொன்னான்
பாழிதோய்மனத்துக்கீரன் பட்டபாடறிதியென்ன
வாழியங்கருணைச்சேந்த னறைதலைமதியாறானா
னாழிகேழ்வரகுங்கம்பு நாட்டினிலிரக்கநானான். (௪௮)

வாணனென்றொருவன்றன்மேல் வளஞ்செழுகோவைபாடிக்
காணமுந்துகிலும்பெற்றுக் கைவிரித்திரப்போர்க்கீந்திட்
டூணளவிரந்தகம்போ டுரியவள்பசியைநாடி
யாணமிக்குருகிப்பாலை யதனிடைநடக்கும்வேலை. (௪௯)

கரியமாமேகம்போன்று கையினிற்றடிவாள் வேல்கொண்
டெரியெழச்சினந்தகண்ணோ டெயினனொத்துருவங்காட்டிக்
கிரியெலாமுடையகோமான் கிட்டியாரெனவுங்கேட்டா
னரியவாயுலரமெய்வேர்த் தச்சமிக்குழைக்கலுற்று. (௫௦)

புலவனென்றிசைத்தான்கேட்டுப் புன்னகைபுரிந்தவ்வேடன்
மலயமாமுனிவற்கன்றி மலரவன்றனக்குமின்றிக்
குலவுபேர்தரித்துக்கொண்டாய் கொல்லெனக்குழப்பந்தீர்ந்து
நலனுணர்ந்துள்ளான்கொல்லா னம்பொருள்கவானென்ன. (௫௧)

உன்னினன்மறுத்தோர்மாற்ற முரைத்திலா னதுகண்டன்னோன்
கன்னிவண்டமிழிற்பாடல் கழறுநர்சிலருமப்பேர்
சென்னிமேற்கொள்வர்பாடத் தெரியுமோவென்றுங்கேட்டான்
றன்னிறைமகனென்றோரான் றலையசைத்தாமாமென்றான். (௫௨)

ஒப்பலுமென்பேர்முட்டை யுனதுசொற்சுவைச்சீர்தோன்ற
விப்படுபாலைப்பண்போ டிசைத்தொாகவிசொல்லென்று
னப்படிப்பகரக்கேட்டு மநுதினங்குஞ்சியென்னச்
செப்பவனதனின்முட்டை சிறிதெனும்விதந்தேர்ந்தில்லான். (௫௩)

பொன்னினைக்கடுக்குங்கள்ளி பொறிபறந்திடும்வெங்கானி
லென்னிளம்பேதைசென்று ளிகல்புகழிசைவேன்முட்டைக்
கன்னியப்பகைவர்போவா ரதனிடந்தைக்கும்வேன்முட்
டுன்னிடுமெனவோர்வெண்பாச் சொற்றனன்சுவையின்மிக்கோன். ()

கள்ளியிற்பிடித்துவேவுங் கனல்படுகானில்வேல
முள்ளிருந்திடுமென்றேதன் முறைப்பிழையன்றேவென்ன
வெள்ளிலைவேற்கைவேடன் விளம்பிநாணுறச்செய்தப்பாற்
றெள்ளிமைப்புலவாநின்பேர் செப்பெனச்சிரித்துக்கேட்டான். (௫௫)

ஐயுறவில்லான்றன்பே ரறைதலும்வெம்மைக்கஞ்சிட்
பெய்யுமாமுகில்பெய்யாது பெயர்தழற்கானத்தூடு
கையுலாம்வளையாள்சென்றாள் கவிப்பொய்யாமொழியின்றெவ்வர்
செய்யுமாறென்றோர்செய்யுட் செப்பினன்றிகைக்கக்கண்டான். (௫௬)

மின்னுமாமுடிகளாறும் விறற்பெரும்புயமுந்நான்கு
மன்னுசீர்பிறவுந்தோன்ற மடநலாரிருவர்பாகந்
துன்னுறநடிக்குமஞ்ஞைத் தோகையினீழலின்கட்
பன்னும்வானவர்கள்சூழப் பளிச்செனச்சேவையீந்தான். (௫௭)

காண்டலுந்துதித்தான்வீழ்ந்தான்கண்ணினீர்கலுழ்ந்தான்சோர்ந்தா
னாண்டநின்புகழ்கூறும லவத்தினாட்கழிததேனென்றான்
வேண்டல்பெற்றுய்ந்தான்செவ்வேள் விண்ணிடைமறைந்தபின்னர்
பூண்டவிர்ந்தழகேபூணும் பொற்கொடியுறும்வீட்டுற்றான். (௫௮)

சிறிதுநாட்கழித்தப்பொய்யா மொழியடற்செழியற்காண்பான்
செறிபொழின்மதுரைக்கேகிச் சிவபிரான்சேவைக்காக
வெறிகமழ்வேப்பந்தாரான் மேவுமவ்வேலைகண்டா
னறிதியானின்றனென்ன வமறைந்தனனடுத்துஞ்சென்றான். (௫௯)

அஞ்சுறு தடுக்கக்கண்டவ் வரையனர்நாளிலுள்ள
விஞ்சுபாவலர்போலிந்நாள் விளங்குநருளரோ வென்றான்
செஞ்சுவைக்கழகத்துள்ளார் திருவுருச்சிலைகளியாவுங்
கொஞ்சுசொற்கவிகேட்டொப்புக் கொடுத்தலையசைக்கச்செய்தான். ()

அன்னசீர்கண்டும்வேந்த னையமுற்றிடக்கண்டப்பான்
மன்னரேயிழிவுற்றார்கள் வளர்கவிப்புலவர்தாழா
ரென்னவோர்கவிதைபாடி யியற்றமிழ்ப்பலகையொப்பிப்
பொன்னரவிந்தப்பொய்கைப் புனன்மிசைமிதக்கச்செய்தான். (கூச)

வேந்தவன்மனைவியோடு மெய்த்துணையவர் தம்மோடு
மேந்தணிச்சிவிகையேறி யெழினகர்வலம்வந்தேகி
நீந்தருந்துயர்போய்வாழ்ந்து நெடுங்கதிர்வடிவேற்செங்கைச்
சேந்தனாதனிற்சாமீபத் திருப்பதமடைந்தானன்றே. (கூஉ)

அறுவகைப்பிறவிச்சொற்றே மவற்றின்முற்பிறவிப் பேதா
குறுமுனிவளர்த்தநாயின் குலவுசீர்ச்சரிதமொன்று
மிறுதியிற்பகருமொன்று மித்திணை சிலங்காவாற்றாற்
சிறுகலுமவிரித்தலுந் தெரிதரச்செப்பினேமால். (கூரு)

சுருக்கியல்விளக்கிடாது துணிவொடு சொல்லுமட்டும்
பெருக்கியற்பனுவலாரும் பெரினுக்கிசைவுறுதாங்
கிருக்கவுமிடையிடைகாதை யீரண்டடக்கிச்சொற்றேஞ்
செருக்குறுபுல்வாய்பல்லோர் தெளிவுறச்செய்யலாலே. (கூச)

அருணையின்சிகரிக்கோயி லதனிடத்தபில்கொண்டோங்கு
முருகவேளருளாற்கிள்ளை முகமுனியழுக்காறெய்துந
திருவுருப்பெற்றோன்முன்னைச் சீர்சிலம்தரிதந்தோமனத்தே
னொருசாறுமத்தலையாங்கு யுதித்தவாறுரைக்கலுற்றாம். (கூரு)

பூர்வபுண்ணியச்சருக்க முற்றிற்று.

ஆக கவி - அரு.

வேலுமயிலுந்துணை.

உ

முருகக்கடவுடுணை.

திருவவதாரச்சருக்கம்.

அண்டமூடொரு லோகமுந்தீவுநன் கறைந்து
கண்டமொன்றுபின் கழறியோர்தேயமு நாடும்
விண்டபின்னரு ணாசலப்புகழ்சொல விரும்பேன்
றொண்டர்சூழ்தன் பெருமையைமுதற்சில சொல்லி (க)

அன்னதன்றொடர் பாமெனவவற்றையுஞ் சிறிது
சொன்னபின்னடித் துவக்கமாங்கதைவகை சொல்வே
னென்னகாரண மெனினுலகியற்றினோன் புரப்போன்
புன்னகங்கெடுத் தோங்கிடப்பொருப்பெனு மதனால். (உ)

அம்மலைத்திரு வுருப்பலவண்டமு மணுவாச்
செம்மலாமெனக் கருதியுநம்பிடுஞ் சிலர்க்கே
வெம்மலப்பிணக் கறும்பலவித்தையும் விளங்குங்
கைம்மலைக்கிளை யவன்கழற்பெருமையுங் காணும். (ந)

மேருவுங்கயி லையுங்குன்கன்றாப்பெறும் விதத்தை
யூருளாருணர்ந் துரைத்திடும்பெருநல முன்னி
யாருறுஞ்சடைப் புனிதர்தாமலையுரு வாயுஞ்
சீருலாமவன் பதச்சுவடணித்தலை சேர்க்கும். (ச)

பருமைசான்மலைப் பார்ப்பதிபரிந்தரு ளமுத
முருகனுண்டவன் முகுளவாயூறலிற் கலந்து
கருணையீசர்தா முடிந்ததோன்மிசையிழல் கடிந்தாங்
கருணவெற்பினி லப்பெயர்வாவியொன் றமையும் (ரு)

வன்னமோகினி புணர்ந்தகாலவள்பத மழுத்தோட்
டுன்னவீசர்தஞ் சடைப்புனற்றுளிபல தோய்ந்து
சின்னவாறெனச் சொரிதரவவர்மடி செறித
லென்னவோர்தட மப்பெயருடனதி லிலங்கும். (சா)

சிறந்தகாழியம் பதியினன்வாக்குமன் றேனு
கறந்தபான்மொழிப் பரவைசோன்வா ரூர்க்கடவு
ணிறந்தழைத்தசொற் பலவர்பற்பலர்மிக நிகழ்த்தப்
பிறந்தமால்வள மாயிரம்புனையுமப் பிறங்கல். (௭)

நல்லவீகையிற் காமியல்பழியினு ஞான
வல்லபத்தின ரெவ்விதவருத்தமுற் றேனு
மெல்லவோர்சிறி தீதலொக்கமுற்கிரி விரித்துச்
சொல்லரும்புகழ்ச் சோணமாநதியையுஞ சொரியும். (௮)

ஞானபண்டிதப் பெயர்மகவம்மலை நல்கி
யானபாலனு லகத்தியமுனிவனைத் திருத்தி
யூனமின்றிய தமிழுதிப்பித்ததன் றேயம்
வானளாவிய நாவலந்தீவில்வைத் ததரோ. (௯)

குமரிகண்டமே முதற்பக ரொன்பதுங் கூட்டி
யமரர்கோன்றிசை யாதியாமெட்டுட னுக்கில்
விமலமாமரு ணாசலமுரும்வெள் விடையின்
கமலநாண்மலர்ப் பதத்தினுக்கோரடி காணும். (௧௦)

ஈசனுமரு ணாசலநந்தியென் றிடும்பேர்த்
தேசவிர்ந்தகுன் றுதவுபாலாறெழிற் செய்யா
றுசகன்றதண் கெடிலமாதியநதி யனந்தம்
வாசமாந்திருத் தொண்டைநன் னாட்டிடை மன்னும். (௧௧)

ஐந்துபூதமு மாகியதலங்களி னடுவா
யிந்துசேகர னேமலையெனவிலங் கிடலாற்
பைந்துழாயினன் பரவுமப்பருப்பதச் சார
னந்துறுநடு நாட்டெனப்பற்பலர் நவில்வார். (௧௨)

எண்ணுவார்வினை யிரண்டுமற்றிணையில்வீ டெய்தப்
பண்ணுமம்மலைப் பரிசினைப்பாம்பர சுரைக்க
நண்ணுமாயினு நாணுமென்றுற்சிறு நாயேன்
புண்ணுலாமனங் கொடுபுகழ்கருதிடப் போமோ. (௧௩)

சிவத்தினாற்சமைந் துளவருணாசலச் சிறப்பென்
றவத்தனுப்பல மரங்களாதியபொரு ளறையேன்
றுவக்குகாதையு மவ்வரைப்பெயர்புனை தொண்டன்
றவத்தின்மேன்மையென் றுலினிச்சாற்றுவ தென்னே. (௧௪)

வேடர்சேரியின் சாரலும்பற்பல விருகத்
தாடலும்புன லருவியுந்தோயும்வெற் பனந்தத்
தூடவிர்ந்திடு மருணமால்வரையினை யுரக
பூடணத்தான் றனெனக்கருதிடார் பொல்லார். (கரு)

அருணமால்வரைக் கன்னியமல்லதோர் நகரந்
தருணமடமங்கைய ராடிடுங்கோயிலுந் தமிழ்ச்சொற்
பொருணலந்தருங் கோபுரத்துயர்ச்சியும் புகனல்
வருணமாந்தர்கள் வாழ்மறுநினங்களும் வயங்கும். (கசு)

வேறு.

தூயவர்வி ரும்புபல தூங்கழும்வி ளக்குந்
தீயவர்கு லத்தொடுநி டுக்குறவெ ருட்டு
மாயனய னன்றுருவ மாறிடவ ளர்ந்த
சேயமலை யொன்றுதிகழ் தென்னருணை யூரே. (கஎ)

ஆணியில்பெ ரும்புகழ னந்தமுற வாகும்
வேணின்மத னைச்சுடும்வி றாவணிமி குக்குஞ்
சேனிலவு வாவிபல சேர்தரவி ளங்கு
நானிலம்வி யந்துதொழு நல்லருணை யூரே. (கஅ)

மாதவர்கு ழாமிகவும் வந்துகளி கூரும்
வேதமுணர் மேலவர்வி தித்தொழின டக்குஞ்
சீதளம லர்க்கமலை சிந்தையொடு வைகுங்
கோதறுசி வன்புகழ்கு லாவருணை யூரே. (ககூ)

நெற்பயிர்க ரும்புகமை நீள்கமுகு வாழை
பற்பலகு லத்தினர்ப ரிந்துறையும் வீதி
முற்படுபொ ருட்டொகுதி முன்னியவை தம்மாற்
கற்பனைமொ ழிந்தனர்க விப்புலவர் பல்லோர். (உ0)

அம்முறைவி ரித்திடல டுத்ததல வென்றே
யிம்முறைசு ருக்கினமி யற்றொளிமு ழங்குஞ்
செம்முறையு ணர்ந்திலர்தி ருத்தியடை யார்தா
மெம்முறைவி ளம்பினுமெ மக்கது சிறப்பே. (உக)

அந்நகர்வ ளம்பொருவ ளப்பரிய தொண்டர்
முந்நவைத விர்ந்தமுதன் முத்திபெற வென்றே
செந்நலமி லங்குதிரு வேடமொடு செப்பு
மெந்நகரி டத்தினுமி ருந்துவரு முண்டே. (உஉ)

பொன்மலிந லந்திகழ்பு கார்கரில் வந்தோன்
கன்மனமு ருதுதவு கங்கைகுல முற்றோன்
மன்மகிழ்பொ ருட்கொடியர் வாணிபமு யன்றோ
னன்மருத நாதரடி நாடொறுநி னைப்போன். (உங)

வாசவன்முத ற்பலர்ம னத்தைவிலை கொள்ளு
மீசனும்வி லைப்படவி ருந்தவம்வி ளைத்தோ
னாசகல்வ டக்கிளை காபுரிபு ரந்து
நேசனென வன்னவனி சுற்றமுன்ம கிழ்ந்தோன். (௨௪)

மெய்த்துறவி னோர்புடையின் மிக்கபுகழ் பெற்றோன்
பொய்த்ததுகளொ ழிந்தகவி போதவுறு வன்றோன்
மைத்துணைவி ழிச்சிகையின் மாசுதவிர் பாண
னுய்த்துளதொ ழிற்கொடொ ருங்கறவொ ழிந்தோன். (௨௫)

தாயுரிமை யொன்றுதணை வாகுநனை வைத்தோன்
மாயுறுபி ணத்தையெரு வாயெனொரு பாவா
லேயுமுயி ரோடெழவெ ழுப்பன்மு தலாக
வாயும்விளை யாடலள வற்றவை புரிந்தோன். (௨௬)

தில்லைமரு தூர்மதுரை யாதியவை சேவித்
தொல்லையினில் வீடுதவு மோருணை யென்னுஞ்
சொல்லைநனி யுள்ளிநகர் தோறமுதி ரந்துண்
டல்லைநிகர் கண்டருறு மப்பதிய டைந்தான். (௨௭)

வேறு.

வந்துமாதவன்றன் வளர்செவிச்சிரும் லக்கையிலுறுந்திரு வோடுஞ்
சுந்தரவெண்ணீ றணிந்த மெய்ப்பொலிவுந் தூயகோலமுந்தொடு பிறவு
மந்தமாநகரத் தவருங்கண்டா ரடுத்திறைஞ்சினர்சிலர் சிலர்தா
நிந்தனைபுரிந்தார் சிறுவர்கல்லெறிந்தா ரிகழ்ந்தனவிப்பரி சனந்தம். (௨௮)

தொய்யில்வேய்மென்றோட் கவுரிவாழிடத்தார் துலங்குமவ்வூர்ப் பெருங் கோயிற், பொய்யினைமெய்ப்புகழ்தோய் பொருப்புடன்றொழு தான் புகழ்ந்தனன்சுற்றிலன் புகழ்ச்சால், கையினிலுறும்பேய்க் கருப்புடன் சுழுழ்ந்தான் களிப்புறுநலஞ்சில கண்டான், மைமயிலங்கியகட் சிறுமியர் படைசூழ் மதனனைமதித்திடாமனத்தான். (௨௯)

ஆயகாலையிலச் சிவபிரான் கோயிற் கடிமையே யாய்ப்பணிபுரியுந் தூயவாணையையா புடைவரக்கண்டோ ரார்குழல் புரிதவப் பயனுஞ் சேயவேள்பொய்யா மொழியின்மேல்வைக்குந் திருவுளக்கருணையுந்த டோட், சீயமேபோலத் திகழும் வல்லாளன் சிகரியினதிட்டமுஞ் சேர்ந்து. (௩0)

வரம்பிலாதெழுதும் பிரமனுந்தாவான் மதுமலர்மேன்முதற்றொடு மலரி
னிரம்பிமான்மழுவு நீலகண்டமும்வெண் ணிலவணிசடிலமும் பிறவும்

பாம்பியநெஞ்சிற் பயமிலாதருள்ப் பாய்ந்திடச்செய்தலிற் பதைத்தான்
றாம்பிரித்திடின்மே லெனத்திசமொருமான் றனைப்படிக்கழிபிகநினைத்தான்

ஆதிநாயகரர்க் கிகலவர்மூவ ரசமூகத்தொருத்தியோ டுதிக்க
வேதியன்மகளுங் காசிபமுனிவன் பிசமனைவருந்தலுஞ் சகித்த
சோதிவானவனெ னவர்க்குறவாகித் துதித்தமிழ்சொரிமுகி லனைய
நீதியோன்பிறந்தற்கிவ்வணம்பொருந்த நிலைமையோர்கொடிதல நிலந்தே.

காத்தனைவிதத்திற் றரிக்கிலுங்கனன்மீ திழுதைதயைச் சொரிந்தவாறுக
மூத்தமென்றுலகிற் சிலப்பகர்பெயரான் மோகமேமேவிடற் கொல்கி
யத்தனைக்கருதிக் கச்சிலைவெற்றநுபட் டதைத்தனனதனிலுங் கவிரா
னித்தத்திக்கிவ்வூர் வசிப்புநன்றலவென் றேகினன்வடதிசை யிடமே. ()

கச்சியேகம்பங் கண்டனனிறைவன் கழல்பணிந்தப்பெயர் மருட
மெச்சிடற்கினிய சுவைமொழிப்பெருஞ்சீர் மேவிபமாலையொன் றணிந்தா
னச்சிவனிரங்கி மயலொழித்தில்லா னணிகொளாருரிலோர் புலவ
னச்சியகொடிபாற் றாதுமுன்சென்றே னவின்றிடாதிருந்ததென் வியனே

அஞ்செழுத்துரைத்துப் பாசிவனுருவத் தகஞ்செலுத்திடுஞ்சமையத்து
மஞ்செனக்சுறுத்த கூந்தலுந்தாள மணிநகைப்பவளவாய் வனப்பு
நஞ்செனவமுத மெனத்திகழ்விழியு நவில்வனபிறவும்வந் திலங்க
வெஞ்செயன்மதவேட் கிளைப்பவர்போன்றே மீண்டனனருணையைவிரும்பி

சென்றனன்விரைந்து சேர்ந்தனன்றெருவிற் சிறுவர்தாம்பற்பலர் சேர்ந்து
பின்றனைத்தொடரத் திரிந்தனனொருநாள் பிரமையைப்பெருக்கிய பேதை
குன்றவில்லுடையார் கோயிலிற்கொடிக் குலமாமிகொனைவரக் கண்டான்
முன்றவங்காட்டிக் கொடுத்தன்றடுத்தான் மொய்குழல்வெருவிலண்
மகிழ்ந்தான். (ருசு)

அன்னமிட்டடியார் தம்மொடுபழகு மகத்தினிற்பிறந்தவா றதனுற்
சின்னமென்முலையாள் சிரித்தமாமுகமுந் சிந்தைபுள்ளன்புமேற் சிறக்க
வென்னகாரணமெம் மடிகளேயெனக்கேட் டிருகையுங்குவித்தன ளினைதி
றுன்னதுமயலாங் கடலிடைதளர்வேற் கொருகைதந்தருளெனப்
[பிடித்தான். (ருஎ)

தொட்டபோதச்ச மானமோடுதிக்கச் சுரிகுழற்றெரிவைநேர் மடவா
ணட்டமாடியபின் னனமிகும்வேர்வை நகுங்கலைபணியொடு நனைக்கக்
கட்டமுற்றிடுமுன் விடமனைக்கோடிக் கருணையந்தாயொடு பகர்ந்தா
ளிட்டமாம்படியே நடந்திலாய்மகளே யெனவழைத்திடஞ் சொலென்
[றெழுந்தாள். (ருஅ)

அம்மகள்கரந்தொட் டவனுடற்பரிச மாகுமுன்சூக்குமம் புணர்ந்து
மும்மலத்தொன்றாய் முடிந்தமெய்ப்பொருளாய் மூளைக்குள்விந்தாயசுக் [கிலநீர்
செம்மலாயிருந்த வனத்தினைக்கழுவுஞ் சிறத்தொடுவெளிப்படத் தனது
கைம்மலர்தனி லேந்தியாங்குதிர்ந்த கவினரசிலையின்மேல் வைத்தான். ()

வைத்தனுமவளைத் தாய்கொடுவந்தாண் மலரடிபணிந்தன ளெழுந்தம்
மூத்தவாணையும் பதந்தொழப்புரிந்தாண் முன்னரியவாறருள் புரியச்
சித்தமூடிரங்க வேண்டுமென்றிரந்தாள் சிறந்த பேரறிவினைமதித்துக்
கைத்தலமதனுற்சுட்டியோர்வெண்பாக்கழறினன்களங்கமில்கருத்தோன்.

தோடவிழ்மலர்மெல் லளகமாமயிலே தொடர்ந்துனைவிரும்பினர் போனர்
நீடறிவதனைறிகிநீயென்னை நினைத்திடிவிடிப்பினி லுதைப்பேன்
கூடநான்விரும்பி லுதையெனும்பொருளுட் கொண்டனள் குறிப்பிற [லதைக்கண்
டாடகப்பணிதோய் மகளுணக்கொடுத்தா ளதுமுதற்கருப்பமே யானாள்.

கந்தலோகத்தி லுறைபொய்யாமொழிப்போக் கவியவள்கருப்பையுட் [புகலுஞ்
சுந்தரக்களப முலைமினார்கலிச் சுகப்பெருங்கடலுகற் சுவைதோய்
செந்தமிழ்க்கடலுஞ் செழிக்குமென்றருளாற் சேணகத்திந்தி ராதியருஞ்
சந்தனப்பொதியை முனிவனுதியருந் தனித்தனிகருதினர்நமே. (சஉ)

அருட்பெரும்பேற்றுக் குரியவன்கருப்பத் தமர்தலாலன்னவட் கழகுந்
தெருட்சியுங்கனவிற் றேவர்கண் முனிவோர் திகழ்நலமாகிய பிறவு
மருட்கொடேண்வெறுத்தன் முதலியவியல்பும் வளர்ந்தனமாதமோர் பத்து
முருட்டுதேர்ப்பரிதிமுடித்தநாளயவொருசுபதினத்தில் வந்துதித்தான்.

ஆறதாந்திங்கண் மூன்றதாங்கிழமை யரியநாள்பன்னிரண் டாகு
மூறணுகரிதா மிலக்கினமொன்பா னுமவனுதித்தபோ தெங்கை
கோறலுண்டுவப்பார் குலமறக்களைந்து குலவும்வேற்குருபான் றனக்கே
நீறணிதகையாற்றவமுகிர்ந்தவர்போ னிலவுமென்றனக்குநிச்சயமே. ()

அன்னைபாலகனைக்கண்டுகண்களித்தாளவளிலெண்மடங்குவட் பெற்றுண்
முன்னைநாணடந்த விதத்தினைத்துவகை முழுகினனொய்குழ லினத்தா
ரென்னையோவறியேம் பெண்பிறந்திடல்போன் றிவர்மகிழ்கூர்வதென் [றிசைத்தார்
பொன்னைவேண்டிமெவ்வினத்திலிவ்விருவர்புகுந்ததுபோதனுர்பிறையே.

பத்திரகிரிக்குத் திருவருள்கிடைப்பான் பருங்கழுவெரியெழப் பாடி
முத்திவேட்டிரப்போர் தகைமயிசுற்கொடியோன் முதுகுடர்சரிதர மொழி [ந்து
கைத்திடுமொருபேய்க் கரும்பிணிப்பாஞ்சீர் கமழ்திருவொற்றியி லிலிங்க
சித்தியெய்தினன்றன் றவத்தினுமுருவாஞ் சேயிதென்றுணர்ந்துளார் [சிலரே. (சசு)

முவிருபொறியுங் குறியுமாதரவா முருகனை முன்னிடு மவர்க்குந்
நாவின்மெய்ப்புலவோர்தமக்குமா றுயிர்போற்றணியருளை சலத்தலந்தின்
மேவியவருணை கிரியவதாரம் விளம்பினனினியவன் வளர்ந்து
பாவிமாணையபினை ஞலகினினிகழ்ந்த பலவினோதங்களும் பகர்வாம். (௪௭)

திருவவதாரச்சருக்கமுற்றிற்று.

ஆக கவி ௧௩௨

வேலுமயிலுந்துணை.

௨

முருகக்கடவுடுணை.

மாயாவினோதச்சருக்கம்

கந்தநாதன் கருணையினாற்கமழ்
சந்தவண்மைத் தமிழ்சொலப்பூமியில்
வந்தபாலனு மற்றையபாலர்போ
லந்தவுண்மை யயத்தனனையகோ. (௧)

ஆவெனாடிக் கழுதனணங்குறுந்
தூவெள்வாணகைத் தோகையரியாவருங்
கூவெனோதைக் குரவையிட்டார்கொடி
மாவெவ்வேறுற மஞ்சனமாட்டினார். (௨)

அளவிலெண்ணெயு மன்னநன்னீரும்விட்
டுளதமிழ்ச்சுவை யொப்பெனவூட்டினார்
சுளகிலிட்டுயர் சூரியன்முற்செலும்
வளமையாதிய மற்றெதுஞ்செய்தனர். (௩)

எண்ணிரண்டு தினத்திலிசைந்தபல்
புண்ணியங்கள் புரிந்தனர்போற்றினார்
கண்ணிலெண்ணெய் கவிழ்த்தனர்திங்களிற்
றண்ணிலாவிய தாய்முகநோக்கினான். (௪)

இரண்டுதிங்கட் கிளநகைகாட்டினான்
றிரண்டுமூன்றிற் றிகழ்ந்தனனாலினிற்
புரண்டுகையைப் புவியினிலூன்றியோர்
சரண்டுலங்கத் தலையசைத்தாடினான். (௫)

அஞ்சுதிங்களி லார்வமிக்கன்புடன்
கொஞ்சுவார்கரங் கொட்டிடல்கண்டுதன்
னெஞ்சுவந்துகை நீட்டினனுறினி
லெஞ்சுறுதிடப் பேறல்விரும்பினான். (௬)

ஏழுதிங்களி லெட்டினிலொன்பதிற்
றூழுறுது தவழ்ந்து நடந்தனன்
வாழும்பத்திற் பதினொன்றில்வாய்திறந்
தாழுரங்கொண் டுரைசிறிதோதினான். (௭)

ஆண்டொன்றெய்த வருணகிரியென
வேண்டொர்நாமம் விதிமுறையிட்டுநற்
பூண்டொகுத்துப் புதுக்கலைபோடணிந்
தூண்டொகைக்கு ளுறைப்பிலதூட்டினார். (௮)

வயதுமூன்று வரச்சிறுதேருருட்
டியல்பிற்பாட்டிக் கெழீற்பெருந்தேர்விழாச்
செயலுநோத் திகழுநெய்த்தீபமுங்
கயல்விழித்தமக் கைக்கெதிரேந்தினான். (௯)

பொருவில்பாட்டிவிண் போயினபுண்பொரு
துருகுமன்னையையூட்டிவளர்த்தசீர்
கருதிபேங்குமக் காளொடுகண்டுதா
னிருகணீர்விட் டிரங்கலுமெய்தினான். (௧௦)

வருடமொன்று கழித்தபின்மாசிலா
வருணையீசர்க் கவர்பெருங்கோயிலின்
முருகுவார்குழன் முன்னையையன்னைசெய்
திருமணத்தது தீர்ந்துவப்பாகினான். (௧௧)

சற்றுநாண்மக டன்குணமியாவையு
முற்றுநாடியுவப்புறுந்தாய்மகன்
முற்றுசீர்பெறன் முன்னிமுறைப்படி
கற்றுவாவெனிற் கண்கலுழ்ந்தேகுவான். (௧௨)

செல்லல்காட்டித் திரும்பிவந்தாடுவா
னல்லபாட நவிலவுமஞ்சிடான்
வல்லபுந்தி வகுத்தனனீசனின்
சொல்லமைந்துன் சுதன்வருகின்றிலான். (௧௩)

என்றுகல்வி யியற்றுநனோதுசொற்
றுன்றுகாதுடைத் தாய்மனந்துண்ணெனக்

கன்றுமோர்தினங் கந்தன்கனவில்வந்
தின்றுதொட்டவ னென்மகனென்றனன். (௧௪)

அந்தணாயமு மாதியிலன்னவன்
வந்தவாறு மதித்தனள்வாடிலாள்
மைந்தனேழு வயதுமட்டுற்றபின்
கந்தநாண்மலர்க் கார்குழற்றாயினை. (௧௫)

விண்ணுளோகர் விழைந்தனர்தான்பெறும்
பெண்ணுடன்சிறு பிள்ளையென்றெண்ணிடேன்
மண்ணும்வானு மதிக்கவல்லானவ
னண்ணுமாறு நடத்தெனச்சொற்றபின். (௧௬)

பெற்றவாறும் பிறங்கிலைவேலுளான்
சொற்றவாறுமெய்ச் சொல்லெனச்சொல்லினு
ளற்றமம்மக ளப்படிக்கல்லது
மற்றவாறுசெய் யேனெனமாழ்கினுள். (௧௭

வாடியேங்கிடு மக்களைவிட்டுவிட்
டோடிவிண்ணி லுறைந்தனளுற்றபின்
கேடில்வேதன் கிளத்தியநான்மறை
பாடிடும்பற் பலகடன்செய்தனர். (௧௮)

வேறு

கூறுமொழிச்சரதம்விடாத் தமக்கையன்றி யுலகின்மற்றோர் கொழு
கொம்பில்லான், றேறுதமிழ்ச்சிறிதுணர்ந்த மட்டில்விட்டான்றெருத்
தோறுந், திரியச்சோம்பான், சோறுமவள்போயழைத்துக் கொடுவந்துநல
ம்பகர்ந்தாற் றுய்ப்பானிந்த, வாறுவயதொருபத்தோ டிரண்டாகு
மட்டுநன்கு வளர்ந்தான்மன்னோ. (௧௯)

ஆனைவருமாகின்மணி யோசைமுந்தி வருமென்னல்போ லாடல்
கற்குந், தேனைநிகர்மொழிப்பேதை பெதும்பையரோடுறவாடிச் சில
வாருதி, மானைவென்றவிழிப்பருவ மங்கையர்க்குமிச்சைகொண்டு
மனத்துள்வெட்கிப், பூனையெனச்சிறிதுநாட் கழித்தான்பின்பெரு
வேங்கை போல்வான்மாதோ. (௨௦)

வயதுபதினாறு மட்டொருவாறிருந்தான்பின் மாதர்நல்லார்,
கயல்விழிப்பார்வையைப்பவளக் கனிவாயைமுலைத்துணையைக் கண்டு
கண்டு, மயல்வெறிகொண்டான்றமக்கை சலியாமற்றரும்பொருளை வாங்கி
வாங்கிப், புயல்பொழிந்தா லெனக்கொடுத்துக் கணிகையர்தம் மனை
தோறும் புகுந்துமீண்டான். (௨௧)

ஊர்வியப்பப் புணருமின்னார் கருத்வியப்பவிரவுபக லோய்வுறுமற்,
சீர்விதுவெண்குடைவேடன் றிருவிழாநடத்தியதாற் றேகந்தன்னிற்,
சார்வியாதிகட்காசாம பெருங்கோயின்றொடர்ச்சிநண்டுந் தளராதானான்,
கூர்விழிப்பாவையருமெய்தும பொருளிமித்தமருவருப்புக் கொள்ளார்
போன்றார். (௨௨)

தம்பியையும்பொருள்வழங்குந் தனையுமுல்கிழ்வதஞ்சாத் தமக்கை
யன்றான், வெம்பிணியுற்றுத்தழங்கித் தடுப்பமுதன்னியன்னையன்று
விளப்புமாற்ற, நமபிநடந்தாள்பொருள்போய்ப் பலபணியு மனையும்
விற்றுநல்கித்தீர்ந்தாள், கும்பியில்வைத்தாதரித்தார் பலர்கூடியோரு
ருவங்கொள்ளல்போன்றாள். (௨௩)

தன்றலைமை யிழந்தினத்திற் றாழ்வாளு எக்கினிமுன் றாலிகட்டி,
மன்றலணிந்தாளையொருவனுக்கும்வெறுப்பாகுண் மஞ்சட்கொம
பாற், குன்றவில்லாபரணிதாவேப் பொன்னைவிற்றுக் கொடுத்தில்லாள்
கூலிக்குச்சிற், சென்றவன்னு மவளையலைழந் தருமையுடனெழுதிட்டாள்
சிறிதுநாளான். (௨௪)

ஆடைசிறுத்துடன்மெலிவுற் றழுதுகுன்றிக் கடன்வாங்கக் கஞ்சி
வாடிச், கோடையயில்போற்றவர்வா ணலையையுநன்னுடற்றணியுங
குறியாவாற்றான், மேடைசிறுகுச்சான விதங்கருதான் போவதென்னி
லைந்தான்வேண்டு, மாடைகொடுத்தனுப்பென்று னப்பொழுதுமனங்கு
ளிர்ந்தோர் வார்த்தைசொல்வாள். (௨௫)

யானுமொருகணிகையன்றி வேறலலேவிரும்புநல மென்பாற்றுய்ப்பா
யேனுனக்கத்தனைதாரேஞ் செலும்வருத்தஞ் சினக்குறிப்பென் றெண்ணே
லென்றாள், மானுறழ்கண்ணாண்மொழித்த் யனைவன்காதுட்புகுந்து
மனத்தின்மின்னு, நேனுடலிற்கொள்ளுமைய லொருங்கறச்சுட் டது
திரும்பா தோடிப்போனான். (௨௬)

சென்றவனித்தேகாதி ப்ரபஞ்சமுழுதுங்குக தெய்வமென்றுணர்,
டென்றவிலங் கூறுமொழி மெய்மையெனப் றனிதுணர்ந்தா னிதயம
புண்ணா, யின்றதற்குப் பழிகொடுக்க வேண்டுமெனுந்துணிவுற்றா னிமைய
மென்னுங், குன்றநிகர் வல்லாளன் கோபுரத்தினை யேறுக முறித்திட்
டானே. (௨௭)

வல்லாளனனைலயுண்ண ருலைபோகக்கோபுரமேசெய் மதிளிறகிழ்பா,
லெல்லாவின்னருருவு மம்மதியமற்றுஞ்சகாயின்மீ தேறிவீழ்ந்தாற்,
கொல்லாமற்கீழ்விடுத்துக் குலவுமுழுவெண்ணீறுங் கொற்றந்தண்டு,
நல்லாடைக்கோவணமுந் திகழொருவனரேன்றினின்று நவிலலுற்றான், ()

இப்படிநீயுயிர்வெறுத்து விழலாமாமுறைமையிதன் றினிமேற் செய்யே, லப்பவத்திற்செய்ததவங் காத்ததிவ்வாறுயிரிழந்தோ ரனந் தங்கோடி, மெய்ப்பயனெல்லாமுனக்கிம் மூர்த்திநல்கு மென்றொரு சொல் விளம்பிச்சுட்டி, யப்பழையகோபுரத்து வடவருகிற்றிருவுருவ மதனைக்காட்டி. (உசு)

யாமுனக்குச்சொல்லல்கவு மாரசடாக்கரமதனை யியம்பச்சோம் பேல், பாமுழுதுமியற்றுநலம் பாலிக்குமுலகமுற்றும் பரவச்செய்யு, நீமுனைநாளிருந்தவிதந் தனையுணர்த்துஞ்சிலநாளி னெடுவேற்செவ் வே, டுமுறுவற்கனிவாயார் தம்மோடுமெயின்மீதிற் றுலங்கச்செய்யும்.

என்னுமொழியுரைத்தானன் னவன்குமரகுருபரவே ளெனத் தேர்ந்தில்லான், றன்னுருவத்தொருதவசி யெனப்பணிந்தான்கருணை யினுற் றவளநீற்றை, நன்னுதலிற்றீட்டியவ னறியமுன்றூன்சுட்டியத னடுவிற்றூனோர், மின்னுறழப்புகுந்தான்கண் டுடன்வருந்தித்தேறி மிகும் வேட்கையுற்றுன். (௩க)

இன்னவிதம்பாதாளத் தினரொடுசொற் றுயச்செய்வா னேகு வான்போற், பன்னரியபுகழ்ப்பரிதிப் புத்தேண்மேற்றிசைக்கடலிற் படிந்தானப்பான், மின்னவிர்சிற்றிடைத்தமக்கை வீடுதொறுந்தம்பி யினை வினவிக்கோயின், முன்னணுகிக் கண்டழுதாண் முனியே லென்றுளவள்பான் மொழிவதானுன். (௩உ)

அன்னையைநன்கறியேனு னுயிரமன்னையுமுனக்கொப் பாகா ருண்மை, யுன்னைமுனிந்துய்வேனோ வுனதுரையிரலென்றனக்கின் றுணர்வுண்டாயிற், றென்னையிந்தக்குகனுண்டு கொண்டான்மெய் யுனக்குமென்பேற் றினிற்சற்றெய்தும், பின்னையொன்றுங்கருதே னின் சுதந்தரச்சோறருந்தியுயிர் பிழைத்திரென்றுன். (௩௩)

அந்தமொழிகேட்டவுடன் றுய்கனவிற்கண்டேனென் றறைந்த மாற்ற, மிந்தமட்டின்மெய்யாயிற் றெனத்தெளிந்தாள்குகவேளை யிறைஞ்சிநின்றிம், மைந்தனெண்மூன்றுண்டளவு மருண்டுழன்று னின்றுனது மலர்த்தாளன்பே, சொந்தமெனக்கைக்கொண்டான் புரப்பதுன்றன்கடனெனுஞ்சொற் சொல்லிப்போனுள். (௩ச)

பொன்போலுமவளருணைப் புனிதனுர்கோயிலன்னம் புசித்துச் சின்னு,ளன்போடுங்கழித்தருண கிரிநாதன்கண்களுநீ ரருவிகொட்ட, வன்போரும்புகழ்ந்துமன வருத்தமுறக்கயிலாய மலைக்குச்சென் ருண், முன்போனபாட்டியையுந் தாயையும்போலானந்த முழுக்குற் ருளே. (ருடு)

வருத்தமுற்றவருணகிரி யவணலமுந்தன்னலமு மதித்துத் தேறித், திருத்தகுகோபுரத்தானை வடவருகின்மாடமெனச்சிந்தை யூடும், பொருத்தமுறச்சிந்தித்துத் தந்தையைப்போ லிரந்தமுது புசித்துப்போதப், பெருத்தகுட்டநோய்தவிர்ந்தா னுலகத்தார் நிந்தையெனும் பிணியுந்தீர்ந்தான். (ருசா)

முன்னுருவத்தினுஞ்சிறந்த வடிவமுறக்கண்டுபல மோகமின் ஞர், பொன்னுதவவேண்டாமென் றனைத்தழுவிக்கொள்ளலொன்றே போதுமென்ருர், பன்னுமொழிச்சுவைக்குருகான் வச்சிரப்பாறை யிற்கடினம் படைத்தான்சிந்தை, மன்னுதிருவேடமுமோர் தவசி யைப்போல்வந்துகுகன் வழங்கப்பெற்ருன். (ருஎ)

கண்டுசிலர்தெண்டனிட்டார் கணிகைமைந்தனெனச்சிலர்தாங் கருதிப்போனுர், கொண்டுவந்தாங்கமுதளித்தார் சிலர்சிலர்தாங்குக னருளாற் குறித்தசீர்பெற், றெண்டுவரும்பைம்பொன்னு மிரசதமு மணிக்குவையு முய்த்தாரப்பான், மண்டுபுகழ்க்கோபுரத்தை யொட் டியொருதிருக்கோயில் வயங்கிற்றன்றே. (ருஅ)

திருமாலாதியருலகின் மானிடயாக்கையிற்புகுந்து திகழ்வுற்ரு லும், வருமாயையருணகிரி நாதனைச்செய்விநோதமிந்த மட்டிற் சொன்னேன், மருமாலைக்கடம்பணியு மீரிருதோட்செவ்வேளை மனத் தானுடி, யருமாந்தமயின்மேற்கண் டருட்பேறுபெற்றவித மறை குவேனே. (ருகூ)

மாயாவிநோதச்சருக்கமுற்றிற்று

ஆ கவி கஎக

வேலுமயிலுந்துணை

உ

முருகக்கடவுடுணை

அருட்பேற்றுச்சருக்கம்

பெருமைப்பிணியிற் பிழைபட்டுழலா
தருணைச்சிகரிக் கழகாகியநல்
லுருவத்தினுளூற் றவனோதியதைக்
கருதிக்கருதிக் கசிவுற்றனனால். (க)

முன்வந்தவர்பின் வருமுத்தர்முதற்
றன்வந்தனைகொள் பவர்தம்முருவோ
டென்வந்துகனா விலிலங்கினும்வேன்
மன்வந்தனனென் றுமதித்தனனே. (உ)

குலிசந்திகழ்சூ லமுதற்குளிர்தோள்
வலிகண்டுவழுத் தெனவந்தொருநா
ளொலிதங்குகழற் குகனைப்பறுசீர்
மலிசெந்தமிழ்வண் மையளித்தனனே. (௩)

அந்நாண்முதலா வருமைப்பனுவற்
செந்நாவலர்மெச் சுதிறத்தினவா
யெந்நாளுமிசைந் திடுமட்டெழில்வேண்
முந்நாலுபுயத் தின்மொழிந்தணிவான். (௪)

வானாடர்வழுத் திவணங்குறுநற்
சேனாபதியென் றுறுசிற்பரவே
டானாவாலுந் ததியிற்குலவா
வேனானது முள் ளிமெலிந்திடுவான். (௫)

கனவிற் சிலகண் டுகளித்ததுபோ
னனவிற்றிகழா மைநவின் றுழல்வான்
சினவிற்புருவச் சிலைவேடமினாண்
மனவிற்குறிசொல் லமகிழ்ந்திடுவான் (௬)

அயலார்மொழியா மசரீரியெலா
மியல்போடுபொருந் தவிசைத்துணர்வான்
மயலார்தருமற் றவைவிட்டொருநிச்
சயமாகியபத் திதனைப்புகழ்வான். (௭)

முன்னஞ்செயுமா றுமுனைச்சிகரிச்
சின்னஞ்செலலா மெனவெண்ணிடுவா
னென்னன்மையறிந் துமெழிற்குகவேள்
கின்னம்புரிகின் றதெனென்றழுவான். (௮)

இத்தெய்வமலா தெவர்செப்பிடனும்
பொய்த்தெய்வமெனுஞ் சொல்புகன்றிடுவான்
முத்தெய்வமுமூ வுலகத்தினும்வா
ழெத்தெய்வமுமீ தெனவும்பகர்வான். (௯)

அறுமாமுகமா றுநெறிப்பொருளென்
றிறுமாப்புடனெம் முறையும்பகர்வான்
குறுமாமுனிவன் கொளுநன்னிலையைப்
பெறுமாறுபெருக் கநினைத்தயர்வான். (௰)

கொள்ளுஞ்சமயத் தினர்மெய்க்குருவா
விள்ளும்பொருள்வே லவனென்றுணர்வான்
றெள்ளுந்தமிழ்கொண் டுதிருப்புகழே
யெள்ளும்பிழையின் றிமிகப்பகர்வான். (௰௧)

ஆறுறுசகத் திரமன்பர்பெறும்
பேறுயதிருப் புகழ்பேசியபின்
மாறுதவறத் தொகையானவகுப்
பூறுமவையின் றியுரைத்தனனால். (௰௨)

வேறு

இவ்வாறுநாடோறு முயலருணகிரிநாத னெனுமன்பன்முற்
செவ்வானமிகநாணு மொழில்கொண்டகுகனீடில் சிகிவாகனத்
தெவ்வானவருமென்னை யலதில்லையஞ்சேலெ னச்சொற்றுவந்
தொவ்வார்தமுயிருண்டு வருதுங்கவடிவேலொ டொளிர்வுற்றனன்.()

கண்டான்வணங்கிப்பு கழ்ந்தானெழுந்தான் கரஞ்சென்னிமேற்
கொண்டானுள்வெப்பங்கு ளிர்ந்தான்மகிழ்ந்தான்கு தித்தாடினன்,
வண்டாயகண்பெற்ற தாய்மாரு மப்பாவ ருந்தேலெனு
விண்டாரநோக்கக்கு ழைந்தான ளப்பற்ற வீறெய்தினன். (௰௪)

முக்கட்பிரானுக்கு முன்னுளிலன்னேன்மொ ழிந்திட்டதாஞ்
சிக்கற்றவுண்மைப்பொ ருட்டந்திடக்கொண்டு தெளிவாகினன்
மக்கட்குலத்திற்பி றந்துந்தனித்தெய்வ வடிவாகினன்
மெய்க்கற்பிருந்தும்பி றர்க்கொத்திருந்தான்வி ளக்கத்திலே. (௰௫)

வருக்கைப்பலாவின்க ணிக்கீயையார்போய்வ ரச்சொல்லுவார்
மருப்புட்பமோர்பான்ம லர்ந்தானல் வண்டெவ்வ ணஞ்சுற்றுமோ
குருத்தத்துவத்தோரை யெவ்வாறு ணர்ந்தன்பர் கொள்வார்களோ
பொருப்பொத்தவருணைபு ரிக்கோபுரத்தாடல் பொலிவுற்றதே. (௧௬)

வந்தார்வினைக்கோர்ம ருந்தானவெண்ணீற்றின் வலியுற்றது
செந்தாதுநீபப்பு யக்காரன்வேல்வென்றி திகழ்வுற்றது
சந்தாகரச்செந்த மிழ்ப்பாடல் பலகோடி தழைவுற்றது
பொந்தாருமாவிற்கு யிற்கூவுமருணைபு ரிக்கோபுரம். (௧௭)

தையற்கொடுத்தற்கு மஞ்சாதபுகழ்கொண்ட தனிமன்னவன்
செய்யச்சிறந்துற்ற படியான்மெயடியார்கள் சீருற்றது
மையற்றவிர்க்குங்கு கன்றொண்டர்குழுவென்று மலிகின்றதாற்
பொய்யற்றஞானப்பொ ருப்பாய வருணைபு ரிக்கோபுரம். (௧௮)

கூட்டம்பெருக்கின்ற குணரூபம்வைத் தெண்ணில் குருவானசெவ்
வேட்டம்பிரானுக்கு மவனண்ணனுக்கும்பொன் வீடாவது
பாட்டந்தசந்தம்ப குத்தோதுகவுமாரர் பலர்வந்துதம்
பூட்டன்செய்தானென்று குடிகொள்ளுமருணைபு ரிக்கோபுரம். (௧௯)

வள்ளத்தையொக்குந்து ணைக்கொங்கையெழில்கொண்ட மறவள்ளி
கள்ளத்துணிந்தோனு மவனோடுதுணையான காரானையுங் [யைக்
கொள்ளத்தகுந்தான மிருமாடமென்னக்கொ டுத்திட்டது
புள்ளட்டநெடுமாய னெனநீடுமருணைபு ரிக்கோபுரம். (௨௰)

தன்மேன்மையெண்ணித்த னைச்சாருவார்க்குண்மை தரலுற்றது
நன்மேகலைப்பாவை மார்வந்துதினமாடு நடனத்தது
கன்மேலுலாவுங்க ழற்கந்தன்விளையாடல் களின்மிக்கது
பொன்மேருவென்னச்சி றக்கின்றவருணைபு ரிக்கோபுரம். (௨௧)

தழைக்கைக்குரூரத்தர் தம்மைக்கெடுக்கின்ற தகையுற்றபின்
பிழைக்கைக்கிரப்பார்க ளனைவோரு மொழிவண்மை பெருகுற்றது
கழைக்கைச்சமர்க்கார னயனோடழுக்காறு கழறத்தினம்
புழைக்கைக்களிற்றோடு குகன்வாழுமருணைபு ரிக்கோபுரம். (௨௨)

அக்கோபுரத்தாடன் மலிநீர்மைகண்டார்க ளவ்வாலயம்
புக்கோதவிடமுண்ட பெருமானைவழிபாடு புரிதொண்டர்தா
மிக்கோகையுற்றார்கள் வேலோனையங்குற்ற மேலோனுடன்
றக்கோர்தகும்பண்பின் முன்பேணிருண்மை தனைநாடியே. (௨௩)

விள்ளும்புகழ்ச்சோண கிரிநாதர்கோயிற்குள் வியனூர்பொருட்
கள்ளுந்தொழிற்றுட்டர் கண்டஞ்சியுள்ளங்க லங்கிப்பல்வா
றெள்ளும்பிணக்குற்ற கன்றூர்களிவனம்மை யென்செய்வனே
தள்ளுங்கொல்வேல்கொண்டு சாடுங்கொலென்னுந்த விப்பெய்தியே.

வேறு

வியன்மயில் விருத்தஞ்செவ்வேல் விருத்தமா தியபல்பாட
னயனுறப் பகர்ந்தங்குற்று னளிர்பொழி லருணைக்குன்றி
னயலரு கடுத்துச்சேய்போன் றவிர்பழமலையிற்கீழ்பா
லுயர்குகை திருத்தியொவ்வோர் வேளையாங் குற்றுமீண்டான். ()

அப்படிச் சிலநாள் போக்கி யறைந்தபாட் டாங்கேற்றற்கோ
துப்பவிர் மேனிச்சேந்தன் சொல்லிய படிக்கோதூநீ
ருப்பமு தமைந்ததாலோ வுரைக்குமற் றெதனுற்றானே
வெய்ப்பற வூர்கடோறு மேகின னிச்சையில்லான். (௨௬)

குன்றமுங் குகையுஞ்செம்பொற் கோயிலுங் குறுகிக்கண்டு
மின்றனை நிகர்வேற்பெம்மான் வியன்புகழ் விரித்துப்பாடிப்
பொன்றயங் கியமேன்மாடம் பொலிகொடி புயலுக்கற்பாற்
சென்றவிர் சிறப்பின்மிக்க செந்திலம் பதியிற்சேர்ந்தான். (௨௭)

காருடற் சூரன்மாயக் கணங்களோ டயிலோன்வந்த
சீருமற் றுளபல்வீறுந் தெளிந்ததா லுவகையெய்தி
மேருவிட் டந்நாள்வந்த வேதியர் முதலங்குள்ளா
ரியாருமுற் றினிதுகேட்க விசைத்தமிழ் படிக்கலுற்றான். (௨௮)

பரங்கிரி யாதியாய பலபலதலந் தோறவ்வத்
தரம்படு தலத்திற்காய தமிழின்மட் டுரைத்துமீண்டோ
னிரங்கொலிக் கடற்செந்தூரி லெவ்வகைத் தலத்தின்மீதும்
வரம்பெறத் தொடுத்தபாடல் வகையெலாம் வகுத்துச்சொன்னான்.

சந்தனு சலத்துச்செவ்வே டலையசைத் துவக்கக்கண்டான்
செந்தமி ழதனுவியான்சொ றிருப்புகழ் முழுதும்பாடம்
வந்தவ ரடியேன்பெற்ற வாழ்வுற வேண்டுமென்று
னந்தவா றளிக்கச்சோம்பே னஞ்சலென் றுரைக்கக்கேளான். (௩௰)

சிந்தெனுங் கடலிற்றன்கைத் திருப்புகழ் முழுதுஞ்சிந்தி
நொந்தெரி மனத்தனாகி நுவலுமேற் றிசையைநோக்கி
யிந்தெனுந் தவளநீற்று னிலஞ்சியம் பதியிற்சேர்ந்தா
னந்தெறி யலைபல்வாறு நல்கிட வுலகோர்கொண்டார். (௩௧)

அப்பதி யடைந்தவன்னே னயிலுடைக் குமரவேளின்
மெய்ப்பதம் பணிந்துபோற்றி வியன்றிருப் புகழ் நூல் போன
வெப்பநோய் மலியநின்றான் வேலையிற் சிதறலேனுங்
குப்பமா வொருக்காற்கூடிக் குலவுமென் றுணரப் பெற்றான். (௫௨)

அத்திரு நகரிற்சின்னு ளமர்ந்திருந் தருணைக்கோயிற்
சித்திரச் சிகரிச்சேந்தன் றெரிசனத் தாவன்மிஞ்சிப்
பத்தியால் வழியிலுள்ள பருப்பத முழுதும்பார்த்து
முத்திகல் கிடுமவ்வூரின் முன்னியவா றுசேர்ந்தான். (௫௫)

காயிரும் பணையமேனிக் கடவுள்வா ழருணையூரின்
மேயிருப் பவர்களெல்லாம் விரும்பினர்வினவச் சூழ்ந்தார்
கோயிலிற் சிலருமார்வங் கொண்டனர் சிலர் துன்புற்று
ராயினும் வழக்கம்போலச் சிகரியி லமர்ந்திட்டானே. (௫௪)

ஆடுறு மயின்மீதேறு மயிலவ னருட்சீரொன்றே
நாடுறு மவனக்கோயி னன்முகப்புறையும்வேலை
பீடுறு மவ்வூராளும் பிரபுட தேவனோர்நாண்
மாடுறும் பலர்களோடும் வந்தனன் மதமாப்போன்றே. (௫௫)

வருமவன் றன்னைப்பாரான் மலைமணங் கமழும்வண்மைத்
திருவடி கருதியுற்றான் சேவகர் சிலர்வந்தொன்னார்
கருவறக்களையுந்திண்டோட் காவலன் வரவு சொன்னு
ரொரு திரு வெண்பாவப்போ துரைத்தன னுணர்வின்மிக்கான்.

தந்திமா முகவன்றன்னைச் சற்குரு பரனையார்க்கு
முந்திய தம்பிரானை முறைப்படி வணங்கியுண்மை
மந்திரங் கருதிக்கந்தன் வளமைசேர் பெயர்கொண்டாடி
யுந்திறு மாப்புற்றேமற் றெருருவாற் பயனியாதென்றான். (௫௭)

தந்தைமுன் சோழராசன் றனையவ மதித்தானென்றிவ்
விந்தைசெய் தான் கொல்வேந்தன் வினவிவந் தருகினின்று
நுந்தையார் தாயார்நன்கு நுவலெனக் கேட்டானப்போ
தெந்தைவேற் குமரனுத்தா ளிளம்புனக் குறத்தியீசன். (௫௮)

ஒருமுறை தனக்குப்பாட்ட னுலகெலா முய்யக்காத்தா
ளருமைசால் பாட்டிமாமனைங்கணைக்கிழவனம்பொற்
பெருமலை தனைப்பேர்த்தாலும் பெயர்க்கொணுப் பிள்ளையார்தாம்
பொருவிலாப் பெரியதந்தை யெனுங்கவி புகன்றான்மாதோ. (௫௯)

நல்விதி யினனுற்கோப நணுகிலா னகைத்துக்கொண்டான்
செல்வியின் றொடர்பாலீசன் றிரும்பவோர் முறையென்னென்னுஞ்
சொல்வினு விலன்றன்பித்தைத் தூயவன் றனதேன்றோர்ந்தான்
கல்வியின் பெருமைதானுங் கருதிடா தகன்றான்மன்னோ. (சய)

பிரணவப் பொருளைச்செவ்வேள் பேசிடப் பெற்றநீரா
லானகத் தியனென்றுள்ளார்க் கடுத்தசோ தரனுமான
வாமுனி விளையாட்டிந்த வண்ணமெண் ணிறந்தகோடி
நிரதிச யானந்தத்தே நிலைத்துமெய் யருளாற்செய்தான். (சக)

அன்னவை முழுதுந்தேறே னறையவும் வல்லேனல்லேன்
சொன்னமட் டருட்பேறென்னுஞ் சருக்கத்தைச் சுருக்கியப்பாற்
றென்னவ னாட்டிலுள்ள திருவில்லி புத்தூராழ்வான்
றன்னகங் கெடுத்தவீறு தனைச்சிறி துரைசெய்வேனே. (சஉ)

அருட்பேற்றுச்சருக்கமுற்றிற்று

ஆகூ கவி உகங

வேலுமயிலுந்துணை

உ

முருகக்கடவுடுணை

வில்லிபுத்தூராழ்வார்கலகச்சருக்கம்

பொதியமால்வரை யாதியபலமலைப் பொலிவு
மதிரும்வார்திரைத் தாம்பிரவன்னியா தியவா
நதிகளாற்றிகழ் மாட்சியுஞ்செந்தமிழ் நலமும்
பதியவிண்ணவர் நாட்டினுஞ்சிறந்தது பாண்டி. (க)

மஞ்சுறுப்பசுஞ் சோலையும்வண்டுதே னருந்தித்
துஞ்சலார்மலர்த் துணர்களுங்காவிசெங் குமுதங்
கஞ்சமார்புனல் வாவியின்பெருக்கமுங் கவின்று
தஞ்ச மாமெழிற்புவிமகடலையெனத் துலங்கும். (உ)

ஈசனம்பிகை முருகவேளென்னுமூ வருமுன்
னாசகன்றசெங் கோல்பிடித்தரசியற் றியதால்
வாசவண்டமிழ்ச் சங்கமோர்மூன்றுமன் னியதாற்
பேசரும்புகழ் படைத்ததுபிறங்குதென் னாடு. (௩)

அஞ்சுறுத்தனி வீரமுமாண்மையும் புனித
மிஞ்சுபான்மையு மீகையுமிரக்கமும் வேலை
நஞ்சுகொண்டவ னடியராற்சமண்கெடு நலமுங்
கொஞ்சுமங்கைய ராடலும்பாடலுங் குலவும். (௪)

வாதவூர்முனி குருகையூரினன்முதல் வல்லோர்
போதவந்துதித் தளவறப்புகழ்ந்ததென் னாட்டி
னேதமின்றிய சீர்பலகவிஞரு மிசைத்தா
ரோதவேண்டுங ருரைப்பவர்பற்பல ருளரே. (௫)

தக்கநாட்டினிற் சதுரவான்கிரிநெடுஞ் சாரன்
மிக்கசீர்த்திரு வில்லிபுத்தூருள ததனின்
மக்களுடுயர் மறைக்குலம்வாழ்வுற வந்தோன்
றிக்கடங்கவுண் டுமிழ்ந்தவன்பதந்தொழுந் திறலோன். (௬)

கொங்குமன்னவன் வேண்டலிற்குருகுலத் தினர்சீர்
பொங்குதீஞ்சுவைத் தமிழ்க்கவியான்மிகப் புகன்றோன்
றங்குசாருவ பூமனென்றொருபெயர் தரித்தோன்
மங்குல்போற்கவி பொழியுமோர்துணைவனை வாய்ந்தோன். (௭)

சந்தவான்கவி தொடுப்பதிற் றன்னையே மதித்து
வந்தநாவல ரளவிலார்தம்மொடு வாதிட்
டந்தமன்னவன் கொடுத்தகூன்வாட்படை யதனாற்
செந்தகைச்செவித் துணையறக்கொய்தலிற் சிறந்தோன். (௮)

அனந்தனென்னுமோர் பாவலன்றன்செவி யறுப்பான்
சினந்தபோதவ னென்பெயர்ச்சேடனுக் கிலையான்
மனந்தளர்ந்திடே னென்றனன்விடுத்துள மகிழ்ந்தான்
கனந்தழைத்தசொற் றதிக்குதவியநலங் கண்டு. (௯)

தனதுபாடலுக் கொருநயம்வருமெனிற் சமையத்
தினர்விரோதமெத் தனைவருமாயினு மெண்ணா
னெனலன்றேனமொன் றெய்தருமிருபதத் தினனு
மனகனின்றொரு பன்றிபின்றொடர்ந்தன னந்தோ. (௰)

என்றுபாரதத் தியம்பியதன்மையா லிலங்குங்
கன்றுபார்த்தன்வில் லடியிணைப்புகழ்ந்ததுங் காட்டுந்
துன்றுமுத்தமிழ் மதம்பொழிகளிற்றினஞ் சோர்ந்து
குன்றுபேரொலிச் சந்தவாய்க்கோளரி யேறே. (௰க)

வேதியன்றமிழ் விழவழவென்பவர் வெருவ
மோதிடுந்தொனிப் பனுவலான்மூ துலகளந்த
வாதிநாரண னடியவர்க்கடிமைசெய் தவ்வூர்
நீதிவேந்தனு மதித்திடநிகழுமந் நாளில். (௰உ)

கச்சிமாநகர் விடுத்தொருவயிணவன் கரியோ
னச்சிவாழ்திருப் பதிசிலபார்த்தபின் னறைப்பூம்
பிச்சியாதிய மலர்முடித்துதவுமோர் பேதைக்
கிச்சியாமகி ழாட்டுறுமத்தலத் தேய்ந்தான். (௰௩)

முழுகிநாமமுந் நான்குமிட்டரிகரி முகுந்தா
பழுதில்கேசவா நாரணாவெனமிகப் பரவி
யெழுதொணுமறைக் குலத்தினற்சடங்குசற் றியற்றி
யழுதகண்ணுட னஞ்சலிக்கரத்தின ளுகி. (௰௪)

கோயிலுட்புகுந் துயர்ந்துளார்விதிப்படி கும்பிட்
டாயினித்தநெய் யடிசிலாதியவயின் றப்பால்
வாயிலிற்சில நேரமுற்றிருந்தவ்வூர் மாந்தர்
மேயியம்பிடு மொழிகளாலவன்புகழ் விரும்பி. (௰௫)

அந்தவேதியன் சாருவபூமன்வா ழகத்தில்
வந்தபோதவன் வாளுடன்றிகழ்ந்தனன் வணங்கி
யிந்தவாள்செய லென்னெனக்கேட்டன னெதிர்த்த
சந்தநாவலர் செவியறுத்திடுமென்றான் சாற்றும். (௰௬)

எங்களூட்டுறுஞ் சுதரிசனுசலத் திடத்தோர்
துங்கநாவல னுமவன்சுடலேயி லாடுஞ்
சங்கரன்சிறு மகன்பெருமாளெனச் சந்தம்
பொங்கமார்தரப் பொழிபவனெனப்பலர் புகல்வார். (௰௭)

அன்றியெங்களூர்க் குமரகோட்டத்தில்வந் தனனுஞ்
சென்றிடுஞ்சிலர் பார்த்துவந்துரைத்தனர் தேகத்
தொன்றிவீழ்பொடிப் பெருக்கமுங்கோவணத் துடையு
நின்றிரந்துணு மோடும்வைத்தரனென நிகழ்சீர். (௰அ

கொண்டுவாழ்பவ னுமவன்றன்னிடங் குறுகி
மண்டும்வா துசெய் துயரவும்வல்லகோ லென்றான்
விண்டுவன்னவன் கேட்டலும்வீரமிக் கெய்திக்
கண்டுசொல்லலேனு டங்குவாவென்றனன் கழறும். (௰௯)

குருகைதென்குறுங் குடிமுதற்காண்பது குறித்தேன்
பொருவிலாயெனை யனுப்பெனவிரந்தனன் போனான்
கெருவவாரிதி யனையவன்பற்பலர் கேட்ப
வருணையூரிலோர் புலவனையடக்குதற் காக. (௨௰)

இன்றுபோதுமென் றொருதினங்குறித்தன னியாரு
நன்றுநன்றென விசைந்தனர்தடுத்திலர் நாற்பா
லென்றுசொல்படைக் காவலனெனப்பல ரெண்ணத்
துன்றுசீருடன் வடதிசைநோக்கினான் றுணிந்தே. (௨௧)

செல்லும்வேலையிற் சிவிகைதாங்குநர்முதற் சிலர்தா
மொல்லுநற்சகு னங்கிடையாவித முன்னி
வெல்லுவானவன் றானெனப்பேசினர் மெல்ல
வல்லுடன்பகல் விரைந்தனனருணையை யடுத்தான். (௨௨)

ஆனைதேர்பரி யாட்பெருக்கணுகல்கண் டயலார்
சேனையென்றடற் பிரபுடதேவமா ராசன்
றானையார்த்தது வருமவனெற்றர்க டாமக்
கோனைவந்துகண் டுள்ளவாறுரைத்தனர் குளிர்ந்தான். (௨௩)

அன்றுதானெழிற் சிகரியினருகில்வே லணிந்து
நின்றுளான்றன தடிமையும்பொருளென நினைத்தா
னின்றுவந்தவன் றேல்வியுற்றானம்மூர்க் கேற்ற
மென்றுமெண்ணின னதற்குளவ்வேதிய னேய்ந்தான். (௨௪)

வேறு

வரலுமந்த வேதியனுக் கரசன்செங்கை
மலர்குவித்தா னுபசார மலியச்செய்தான்
புரவலர்தாங் கொடுத்தவிரு தனைத்தும்பார்த்தான்
பொருத்தமுறு மிடமமைத்தான் புசிப்பவெல்லா
மாண்மனையி லிருந்தனுப்பச் சொன்னான்வேண்டு
மவையுதவத் தக்கோரை யருகிற்சேர்த்தா
னூரனுறுபா வலர்க்கிடியே றனையான்கண்டுள்
ளுவகையுற்று வந்தவித முரைத்திட்டானே. (௨௫)

கேட்டலுமன் னவன்மனந்தோய் வருத்தமோர்பாற்
 கிடக்கமுன்னோர் வழக்கமெனுங் கிளர்ச்சிக்கஞ்சி
நாட்டரசர்க் கொத்தபடி நடப்பேனென்று
 னலமெனக்கொண் டின்றலது நாளைக்குன்னூர்க்
கூட்டமுட னவனேயும்வைத் தென்றன்கல்விக்
 கொற்றமறி யெனப்பெயர்ந்தான் கூடப்போய்மீண்
டோட்டமுதுண் டொருவரையுந் துணைக்கொள்ளாற்கிவ்
 வுறுகணுற்ற தென்னெனச்சற் றுடைந்தானப்பால். (உ௬)

தன்னதரண் மனைவாயிற் புலவன்றன்னைத்
 தனியழைத்திப் பாவலவன் றன்மையாது
நின்னறிவிற் றோன்றியவா றுரைத்தியென்று
 னெடுநாளாக் கேள்வியிவ னிலத்திற்பல்லோ
ரின்னலுறச் செவியறுப்போன் றானேயென்று
 னிவ்விடத்தோன் றன்மையென்னென் றிடலுமின்னோன்
சொன்னயமா தியபொருந்தப் பாடுவோனே
 தோல்விவெற்றி தெய்வபலஞ் சொல்லேனென்றான். ( )

நின்னுரமியா தெனக்கேட்ப விருவேழத்தி
 னெடும்போரி னிடைக்கொதுகை நேர்வேனென்றான்
பன்னுமொழி கேட்டுமெய்கண் டுவகைகூர்ந்து
 பரிந்தவனோ டமைச்சுமுதற் சிலரையேவி
மன்னுபுக ழருணகிரி நாதன்றன்பால்
 வணக்கமுட னடந்தவிதம் வகையாய்ச்சொல்லி
யென்னுதவி வேண்டுவதியா தென்னக்கேண்மி
 னென்வனுப்பி யரண்மனைக்குள் ளேகினானே. (உஅ)

வேந்தனுரை கேட்டவர்தாஞ் கிகரிக்கேகி
 விளம்பும்வண்ணம் விளம்பவந்த மேலோனன்று
சாந்தமனஞ் சிறிதுகொதிப் பெய்தியென்றுந்
 தமியேனுக் குதவிசெய்யத் தக்கோனுன
சேந்தனுக்குமவன் றமையன் றந்தைதாய்க்குஞ்
 செறிந்தமற்றப் பரிவாரத் தெய்வங்கட்கும்
போந்தவுப சாரமிகச் செய்வித்தோரம்
 புகலாமற் பொதுவாதல் போதுமென்றான். (உ௯)

அம்மொழிகொண் டவருரைக்க வரசன்கேட்டா
னதிவியப்புற் றறிவோமென் றடுத்தநாளிற்
செம்மொழியா கமவிதியா லபிடேகாதிச்
சிறப்புமிகச் செய்வித்தான் சிகரிக்கேகி
மெய்ம்மொழிச்செந் தமிழருணை நாதன்முன்போல்
வெறுத்துரையா துபசாரம் விளம்பப்பெற்று
னெம்மொழிக்கு மிசைந்தமறு மொழிதான் சொற்று
னீட்டமுற்று மோவியம்போ லியங்கக்கண்டான். (௬௰)

தக்கவரை யனுப்பியிதே தருணமென்று
சாருவபூ மனுக்குரைத்தான் சரபந்தன்னைக்
கைக்களிறென் றெண்ணியதோர் மடங்கல்போலக்
கடுகிவந்தான் வரும்வழியிற் காண்பாரெல்லா
முக்கணர்தந் திருக்கோயிற் சிகரிக்காவன்
முருகோனை யருணகிரி முனியைவேந்தை
யக்கவிஞன் றனைவினையைக் காலந்தன்னை
யாதரவாக் கொண்டுபல்வா றறைந்தார்மாதோ. (௬௧)

வந்தவனை யரசனமைச் சாதியோர்போன்
மாதவத்தா லருணகிரி வரன்பேர்வாய்ந்தோ
னந்தணனென் றிடுமுறையா லுபசரித்தா
னருந்தவனென் றவன்மதியா ததட்டிப்பேசிச்
சந்தமொழிந் தனையெனக்கேட் டிங்குவந்தேன்
சாற்றுகென்றான் சாற்றுகின்றேன் றடையொன்றில்லை
வெந்தறுகண் கொள்ளேன்மின்னென முன்சொல்லி
விகடபரி மளமெனும்பா விளம்பினனே. (௬௨)

கோடைப்பிடி யிடித்தாற்போன் முழக்கங்கொண்டான்
கூறிமற்றோர் கவிதொடுத்துக் கொள்ளுமுன்ன
மாடையம்பொற் பணியாதி யணியுமற்றோ
னவையறிய விக்கவிநம் மடப்பக்காரன்
சாடையினிற் சொல்லிடுவா னெனநாடோறுந்
தலைக்கேறு மாணவத்தாற் றவறிச்சொன்னான்
மாடைமலை யனையபுயத் தரசன்கேட்டிம்
மாற்றமியல் பல்லவென்றான் மயிலோனன்பன். (௬௩)

கண்கணெருப் பெழச்சினந்தக் கவியைநோக்கிக்
கழறுமொழி யிதமறியாய் கவியென்சொல்வாய்
வண்கவிதை நீயுரைப்ப துளதோவென்றோர்
மசகமென மதித்தானம் மட்டின்மன்னன்
றிண்கழற்கா லியானையென வெழுந்துநின்று
சீரியநீ ரிவ்வணம்போர் செயனன்றல்லப்
பண்கவிநூ றொருவர்சொல்ல வொருவர்கேட்டுப்
பயனுரைக்க வேண்டுமெனப் பகர்ந்தானன்றே. (௩௪)

முன்னாளி லேழெழுவர் கலகந்தீர்த்த
முழுப்புலவ னருகினின்று முறைகுன்றாமற்
றன்னாவாற் குழிப்பெடுத்துக் கொடுத்துச்சந்தத்
தமிழ்பாடச் சொல்லியன்னோர் தரங்காட்டில்லான்
மன்னாலிவ் வாறுசொல்லப் பெற்றாரவ்வூர்
மாதவன்பாட் டுரைத்திடவாய் திறந்தான்வந்தோன்
பின்னாலே பொருளுரைத்தான் றுவக்குமந்நூல்
பேசுகவி பாதியின்மேற் பெயர்ந்ததம்மா. (௩௫)

கந்தனந்தா தியினியமகக் கவியோர்நூற்றிற்
கழறுமைம்ப தாயபின்னர் கருத்துட்கொஞ்ச
நொந்தருண கிரிநாதன் முருகவேளை
நோக்கினான் றிகைத்தவென நுவலோர்பாடல்
வந்தொரு வருக்கத்தா லருத்தஞ்சொல்ல
மாட்டாமல் வேதியன்றான் மாழ்கிச்சோர்ந்தா
னந்தகன்போற் பற்பலர்கா தறுத்தபாவ
மமைந்ததிந்நா ளெனக்கெனச்சொற் றாண்மைதீர்ந்தான்.

மன்னன்முதற் பலருமிவன் காதுகொய்தல்
வழக்கென்றா ரருணகிரி வண்மைப்பேரோ
னென்னபயன் கொய்ததனாற் கொய்யாவிட்டா
லியான்கொடுத்த காதெனப்பே ரிருக்குமென்றா
னன்னமொழி கேட்டெவரு மதிசயித்தா
ரந்தணனுங் களிகூர்ந்தா னவன்கைவாளைப்
பின்னமற்றோ னுனக்காகா தென்றுவாங்கிப்
பிரபுடதே வனுக்களித்துப் பேணென்றானே. (௩௭)

வேதியன்போன் மாதவன்ருன் ரேல்வியுற்ருல்
விடமாட்டான் செவியறுத்தே விடுவானென்ருங்
கோதினர்பற் பலரவனவ் வொருபாட்டிற்கு
முரைகேட்டுக் கொண்டு முற்று முரைத்தபின்னர்
நீதிவழி யுரையெழுதி முடித்தோர்பாட்டு
நிகழ்த்தினு னருணேச னென்னச்சுட்டித்
தீதில்கவிக் கடலேழுங் கடந்ததென்றுஞ்
சிந்தைமகிழ்ந் தேமெனவுந் திகழுமன்னே. (௩அ)

அருட்பேற்றி னருணகிரி துவக்கும்பாட
லானந்தம் விளைத்ததனை யடக்கிக்கொண்டே
யிருட்கோரத் தாலிகழ்ந்த படியாலன்னே
னிறுமாப்புங் கொடுவாளு மிழந்ததன்றிப்
பொருட்கூறிப் புலமையில்லை யென்னுஞ்சொல்லும்
புந்தியினிற் ருேன்ருமற் போயிற்றேனுந்
தெருட்சீரோ ணுதலினுற் ருேல்வியேற்றுச்
சிரங்குனிந்தா னப்பெருமை சிறிதன்றம்மா. (௩௯)

இருவர்களும் வண்ணநல முணர்ந்தோர்கூட்டத்
தேற்றமுற்ருே ராயிருந்து மிகலிக்கொண்டு
பொருபுலவர் பாடலதே யென்றுமுன்னூல்
புகன்றிருந்தும் வாளுமதன் பொருத்தமாயு
மருமலிவெண் டாமரையா ளரையணுவில்
வந்திருந்தவ் வாறுரைத்து மாற்றுநீராற்
றிருவருளின் செயலன்றிச் செயலொன்றில்லாத்
திறத்தையெளி துணர்ந்துகொள்வார் சிறந்துள்ளோரே.()

பொல்லானென் றிடும்பெயர்போ யருணைநாதன்
புகழிருக்கு மட்டழியாப் புகழ்ச்சீர்தோய்ந்து
வல்லாண்மை வேதியன்றன் னூரிற்சென்று,
வாழ்ந்திருந்தா னிக்கதையிம் மட்டிற்சொற்றே
னெல்லாரு மத்தவத்தோன் றன்னைமெச்சு
மியல்புசகி யாதழுக்காறெய்திவாடி
யில்லாத பகைவிளைத்த சம்பந்தாண்டா
னெனுமொருவன் றன்னைவென்ற தியம்புவேனே.(௪௧)

வில்லிபுத்தூரராழ்வார்கலகச்சருக்க முற்றிற்று

ஆ கவி உ௫ச

வேலுமயிலுந்துணை

உ

முருகக்கடவுடுணை

சம்பந்தாண்டான்விகாதச்சருக்கம்

மன்னவர் வணங்குஞ்சீரோன் மந்திரம் பெரிதுகற்றோ
னன்னவா கனனேபோலு மருகனுக் கடிமையானோன்
பன்னருந் தமிழ்ச்சொற்சாரம் பதிந்திடா மனத்துப்பாவி
தன்னக மண்டகோளந் தனில்வளர் சம்பந்தாண்டான். (க)

பெற்றவர் தமக்கு மீளாப் பெருநர களிக்கும்பெற்றி
யுற்றவ னிரட்டையார்தா மொருகிறிக் கவிதையோத
மற்றவர் தம்பான்மன்னு மலுக்கென வலியச்சொன்னோன்
குற்றமி லருணையூர்க்கோர் கோதெனக் குடிகொண்டுள்ளான். ()

மற்றையர் புகழ்ச்சிகேட்கின்மனமிகவருந்துந்தீயோன்
பற்றைவென் றவர்க்குஞ்செஞ்சொற் பாவலர் தமக்குமாகான்
பொற்றைபோற்பொலிந்ததேகன் பூருவப் பயனியாதாலோ
கற்றையங் குழற்பிராட்டி கருணை நற்பெயரோடுற்றான். (௩)

உள்ளியின் றழைக்குநாம முயர்மருக் கொழுந்தென்றோதி
யெள்ளிடற் கரியசவ்வா திணைமிகப் பூசல்போலத்
தெள்ளிய குரவன்பேருஞ் சிறப்பரை யருளுந்தோயத்
தள்ளிடுஞ் சமணப்பாவி தனக்கய னமைத்திட்டானே. (௪)

சமணனு மவன்முன்னுளிற் றன்னெறித் தலைவர்தம்மைத்
தமரொடு கழுவிலேற்றிச் சைவரைப் புரந்துளான்றன்
விமலமாந் திருப்பேர்கொள்ளன் மெல்லிய மேடக்கன்று
சமரவல் வேங்கைநாமந் தனைக்கொளல் போன்றதன்றே. (௫)

தன்னுடைக் கணவன்றன்னைத் தணந்துமற் றொருவன்றன்னாற்
பன்னுசீர் மகவும்பெற்றாள் பழைய மங்கலங்கொண்டாற்போன்
மன்னுசாத் தேயனாகி மனக்களிப்படைந்துமன்னோன்
முன்னுள சமணமார்க்க முறைப்படி நடித்தான்மன்னோ. (௬)

அறங்களின் முயன்றிடாம லலகையூட் டாதிசெய்வோர்
பிறங்குபொற் கிழிபெற்றுற்போற் பெரியரைப் பேணிடாமன்
மறங்கொள்வா னுகுமன்னேன் மலைமகண் மலர்க்கண்ணுடுந்
திறங்கொடு புவியிலியாருந் திடுக்குறத் திகழ்ந்தானந்தோ. (எ)

சிந்துரந் திருநீறிட்டுச் சிவபிரான் மகிழ்ந்துநோக்கு
மிந்துநேர் முகத்தெம்பாட்டிக் கினியதொண் டியற்றில்லாளுல்
வெந்துறு குணத்தைநீக்கி மெய்யுணர் வளித்திலாடான்
வந்துறச் செபித்ததாய மந்திரப் பலன்மட்டீந்தாள். (அ)

எத்தனை பேறுநல்கு மெழிற்பரை யருள்விலாச
மத்தனை தானென்றெண்ணி யளப்பருங் களிப்பனுன்
புத்தமிழ் துதவுந்தீம்பாற் புணரியைப் பூனைகாணின்
மொத்தமுங் குடியாமுன்னந் திருத்தியின் முழுகுமாபோல். (கூ)

அன்னவ னவ்வூராளு மரசனு மதிக்கப்பெற்றுத்
தன்னலங் கருதிவாழ்வான் றமிழ்ப்பெருஞ் சிறப்புவாய்ந்த
தென்னனுட் டாழ்வான்மெச்சுந் திறத்தினனொருவன்கோயின்
முன்னமர்ந் திடக்கண்டியாரு மொழிபுகழ்சகியானுன். (ய)

தினந்தரை புரப்போன்றன்பாற் சிகரிமா முனிவன்சீரை
மனந்தனின் மதிக்கொண்ணுத வண்ணமிக் குரைத்துவந்தான்
கனந்தனைப் புரையுமோதைக் கவிபொழிந் திடலுங்காதைச்
சினந்தறுத் திடவந்தான்றன் செவிபுரந் ததுங்கண்டோனுல். (யக)

மற்றவன் காத்துவாளை வாங்கினேன் வைத்துக்கொள்ளா
துற்றதன் கரத்தினல்கு முணர்வையு முன்னியுன்னிப்
பற்றணு வளவுமில்லான் பகையிவற் குளதென்றோர்ந்து
நற்றலை யசைத்துக்கேட்டு நாட்சில கழித்தான்மன்னே. (யஉ)

அவனமுக் காறுகண்டு மம்பிகை யருட்சீர்க் கஞ்சிப்
புவனியை யாளும்வேந்தன் பொதுப்பட விருந்தானன்னேன்
கவனமோர் சிறிதுகற்ற கள்வனுட் கருத்தோராமற்
றவனெனக் குறித்தாய்தெய்வத் தன்மைகாட்டிடச்சொல்லென்றான்.

என்றலு மரசனென்றற் கிருவருமினியர்தாமே
புன்றகை யினனென்றியாரைப் புகலுவே னென்றுன்கேட்டு
நன்றல துயர்ச்சிதாழ்ச்சி நாட்டினி லறிந்துகொள்ளல்
குன்றநேர் புயத்துமன்னர் குலத்தினுக் கடுத்ததன்றே. (யச)

இன்னமும் பலரைக்காண்பா யாவரு முயர்ந்தோர் தாமென்
றன்னவர்க் கெல்லாநீயோ ரடிமை யொத் தடங்கலாமோ
வுன்னது குலத்துள்ளாரு முலகரு மதிப்பார் கொல்லோ
வென்னவிவ் வண்ணம்பல்வா றிசைத்தன னிசைந்தான்மன்னன். ()

தந்திரங்காலநோக்கஞ் சமையமா தியமுற்றோர்ந்த
மந்திரிதன்னைக்கோயில் வாயிலின் வடபாற்கேவிச்
சந்திரன் றரித்தவேணித்தலைவனா் மதலைக்கான
வந்தியன் றன்பாலிந்த வாறுரைத்திறைஞ்சச்சொன்னான். (௰௬)

அவ்வமைச் சாங்குற்றன்போ டந்தமா தவனைப்பேணி
மௌவலந் திண்டோண்மன்னன் வாழ்வினுக்கிறுதிகொல்லென்
னெவ்வமுற் றிடைந்தவாறு மெண்ணமு மிறுமாந்துள்ள
வெவ்வர வனையான் செய்த விதங்களும் விரித்துவீழ்ந்தான். (௰௭)

தெண்டனிட் டவனைநோக்கிச் செழுந்தமிழ்க் கடலேயன்னான்
விண்டலம் புரந்தவேலோன் மேவலிச்சிகரிதானோ
மண்டலத்தெண்ணில்கோடி மலைகளுண் டவற்றாடொன்றிற்
றொண்டர்பற் பலர்கொண்டாடத்துதித்துயப் போதுமென்றான். ()

கேட்டலு மழுதுகெஞ்சிக் கேடெனக் கிதில்வேறில்லை
நாட்டரசனுக்குமுன்போய் நாணிதை நவின்றாலென்னை
வீட்டலுஞ் செய்வானென்ன வெருண்டன னிரங்கிச்செவ்வேட்
காட்டலுக் கிசைந்துநாளுங் கவினுறுந் தலமுஞ்சொற்றான். (௰௯)

புன்மையோர் சிறிதுந்தோயாப் புலவன்வாய்ப் புதுச்சொற்பெற்ற
நன்மையா லமைச்சனார்வ நளிர்கடன் மூழ்கிமீண்டு
வன்மையோர்க் கியமன் போலு மன்னன்முற் குறுகிவாய்ந்த
தன்மைமுற் றுரைக்கும்போது சமணனுங் கிருந்தான்சாற்றும்.(௨௰)

அவனயிற் குமரன்றன்னை யழைக்குமத் தினத்தின் முன்னா
ளுவகையோடுமையைநீகா ணுறப்புரிந்திடுவேனென்றான்
றவன்மொழிந்திடலுமற்றோன் சாற்றலுங் கருதி மன்ன
னிவணமக்கெய்துங்கொல்லோ வெனக்களித் தையமுற்றான். (௨௧)

அண்டரூர் புரக்குஞ்சேந்த னடிமைதான் சொலுமீரெண்கான்
மண்டபத்தீசானத்தின் மன்னுதூ ணதனைச்சார்ந்துஞ்
சண்டனே ரமணன்சொன்ன தலத்தினுந் தனிச்சீர்ப்பந்தர்
குண்டம்வே திகையொப்பாய கோலமிக்கமையச்செய்து. (௨௨)

வேண்டுவ பிறவுஞ்சேர்த்து விழித்துயில் வின்றிவேந்த
னுண்டுவ ரிதழார்போக மொப்பன கைப்பவோர்வா
ருண்டுசின் ஞளும்பன்ஞ ளாகவீற் றிருந்தான்றூ
மூண்டுமுற் பகைசெய்திட்டோன் மொழிந்தநா ளுதித்ததம்மா. (உரு)

வேறு

அந்தநாளுதித் தனுமவன்விதிப்படி யம்பிகையருட்கோலஞ்
சிந்தனைக்குள்வைத் தோமமாதியபல திருச்சடங்குகள்செய்தீண்
டிந்தவேளையி லரசனுமறியவந் திலங்கெனப்பலவாறு
நொந்தயர்ந்தவ ளெழுத்தொரு மூன்றையு நுவன்றசைவறநின்றான்.

அத்தினத்தெழி லருணைநாயகன்பெய ரமைந்தவனயில்வேளைத்
துத்தியம்புரிந் தின்றவன்மொழிப்படி துலங்கிடாதருளென்று
பத்தியான்மிகப் பணிந்துகெஞ்சினன்சமர்ப் படுகளத்தொப்பாரி
வைத்திருக்குமஞ் ஞானம்விட்டனனது வம்பலமுறைதானே. (உரு)

அடிமைவேண்டலு மறுமுகக்குருபர னம்பிகையெனுந்தாய்தன்
மடியின்மீதுசென் றிருந்தனனன்னவண் மனமுழுதுவப்பாகும்
படிபல்லாயிர மாடல்கள்பயின்றனன் பரிந்தழைப்பவனூடு
வடிவுருக்குமமாக்கொடுதோன்றியென் மதலையாற்றடைப்பட்டேன்.

இன்றுநீயழைத்,திடிற்பிறர்காணவந்திலங்கிடேனெனச் சொன்
னுள், கன்றுதன்மைய னுகினன்வெயர்த்தனன் காவலனெதிர்நாணி,
நின்றுகூறினன் றவத்தினரறியுமந் நிச்சயந்தனைக்காணு, னென்று
பொய்த்தது மற்றதென்னுங்கொலென் றுளத்தினுட்டுயருற்றான். ()

ஊருளோர்சிலர் திருடனென்றிகழ்ந்தன ருண்மைதா னெனக்
கொஞ்சப், பேருரைத்தன ரப்படியாகில் பெரியவன்றவமாய,
சிறுயர்ச்சியன் றேவெனச்சிற்சிலர் செப்பினரதைநாளைப், பாரு
மென்றனர் சிலரிவ்வாறளப்பரும் பலவிதம்பகர்ந்தாரே. (உஅ)

அங்குதன்னுயிர் விடுப்பதற்கஞ்சிய வமணனுள்ளவமானம்
பொங்குகோபமுற் றிடும்படிசெயவவன் புரவலன்றனைநோக்கி
யிங்குன்மந்திரி யிடத்திலெண்ணிகலவ னியம்பியபடிசெய்யின்
மங்குருமலைச் சாயையிற்கப்புறம் வசிப்பனென்றனன்மன்னே. (உகூ)

அன்னமும்புன லும்புசிப்பிருந்தவா றவன்வலிதம்மாற்றஞ்
சொன்னபின்பரை கழல்பணிந்திகலவன் சொல்லியபடிநாளை
வன்னமாமயிற் குகன்வராதருளென வருந்தியன்னவட்கான
நன்னயத்துப சாரமிக்கியற்றிட னண்ணினன்மனைபுக்கான். (ஙம)

ஆயவன்புகழ் போயதுபோற்பக லகன்றதன்னவன்கொள்ளுந்
தீயவாணவம் போலிருள்செறிந்தது திருப்புகழ்மிகப்பாடும்
வாயனார்வமுந் திடுக்கமுமருவினன் மன்னரண்மனைக்கேகிக்
காயமுஞ்சலித் துறுகணோடையமுங் கலந்தநுபவித்தானே. (௩௧)

அருணையூரின்மட் டவ்விராவொருயுக மாநிகழ்ந்ததனீற்றில்
வருணமாமணி மரகதநிறப்பரி மன்னியபெருந்தேரோன்
பொருவின்மண்டபத் தூணினில்வேலவன் பொலிதருந்திருக்காட்சிக்
கருகரியாரெனப் பார்க்கவந்திடலென வவிர்ந்தனன்குணதிக்கில்.

மன்னனாதியயாவருமவ்வயின் வந்தடைந்தனர்வான்றோய் [முற்றுந்
பொன்னங்கோபுரத் தருந்தவன்முழுகினன் பொடியணியுடன்
துன்னவந்தெழிற் காவணம்புகுந்தனன் சூழவேழ்திரையிட்டான்
பன்னருங்கிரி யாவிதிப்படிமிகப் பரிந்துபூசனைசெய்தான். (௩௩)

முந்துநாட்டனைத் தடைசெயுமுருகனைமொய்குழன்முகில்சாரு
மிந்துநேர்முகத் தம்பிகைமடியில்வைத் தினியவாசகங்கூறிப்
பந்துநேர்முலைப் பால்வலிதுதவினள் பரிந்துவந்தருளில்லா
னைந்துமூவிருபொறியையுங்கருதியுண் ணோக்கமுற்றதுகண்டான்.()

மயிலைவேண்டினன் மனங்கசிந்துருகினன் வகுப்பினாற்றுதிசெய்தா
னயிலினோடவற்கொணர்தியே லுயிர்விடே னசத்தியமலவென்றான்
கயிலைமால்வரைச் சாரலிற்றிரிவது கருத்தினாலுணர்ந்தாங்குற்
றெயில்குலாவிய நடம்புரிந்தகவிய துமையவள்களிகூர்ந்தாள். (௩௫)

நீலகண்டமு நெடியபாம்பணிகளு நிருத்தமுமதுகாட்டக்
காலகாலன்மே னினைவுவந்தெழுந்தனள் கருநிறச்சமணன்றான்
வேலனன்னவள் வசத்துறலறிதலு மிகமெலிந்தவடன்னைச்
சாலவேண்டுதன் மறந்தனனாயவத் தன்மையினாலன்றோ. (௩௬)

அவன்விருப்பொத் ததுசெயல்விடுத்தன ளன்னவளதனாலே
தவமுனாண்மிகப் புரிந்துளாரவரவர் தாம்வணங் கிடுந்தெய்வங்
கவனமூடுதித் தாயிரமுறுதிகள் கழறினு மிறுமாப்போ
டுவகையுற்றிடா தையமுந்துயருமுற் றுருகுவருலகத்தே. (௩௭)

தெய்வமப்படி நம்பியபேர்களைச் சீரழித்திடமாட்டா
துய்வதற்குமெய்ப் பத்தியிற்கருமமே யுயர்ச்சியென்றிடிலவ்வா
றெய்வதுண்டுமென் றுரைத்தனர்மேலவ ரேன்றகூவியின்வேலை
செய்வதுஞ்சிசு வாதலும்பகரிரு திறத்தினுக்கிணையாமே. (௩௮)

முக்கணன்றனை யவணினைந்தெழும்படி முடிந்தவாறிலையேனுங்
கைக்கணிந்தவே லாயவள்குகனிடங் கவின்றதுமெய்யாமா
லெக்கணத்தினிற் கருதினும்வரத்தகு மிருந்ததெவ்விதத்தாலோ
வக்கலாபியை நேருமைமடியைவிட் டணிமயிலிவர்ந்தானே. (நகூ)

வேறு

ஏறியதுந் தூணிடைவந் தெய்தியது மொருகணமென் றியம்ப வந்தான், வேறிணைதீ ரருணகிரி நாதனந்தக் கணத்தின்மிக வெதும்பி யேங்கிக், கூறியபோ தெதிர்வருநீ யின்றெனக்கு வருத்தமிகக் கொடுத்தாயென்றான், றேறிடத்தேற் றினன்றெளிந்தான் றிருவுளத்தின் குறிப்புணர்ந்து திரையைநீக்கி. (சம)

வெளியில்வந்தான் சலிப்புற்றும் வெருட்சியுற்றும் பற்பலர்தாம் விலகிப்போயு, மளிமலிதார்ப் பிரபுடதே வனுக்கடுத்து நின்றசிலரங்கு வீசு, மொளிசகியா தவசமுற்று ரவனொருவன் மணிமுடிமீ துறுங்கையோடு, களிசிறப்ப நிற்கைகண்டா னிவன்றவநன் றுருகுமெனக் கருதிச்சொல்வான். (சக)

நின்பார்வைக் கடங்காது நெடுவேலான் றிருவுருவி னிலவுங் காட்சி, யென்பார்வைக் கெய்துவதோர் காரணத்தா லந்தவித மியம்பொண்ணாது, பின்பார்வைக் கொருகண்வைத்து மற்றொன்றாற் பாரென்றான் பேசாதுட்போய்த், தன்பார்வைக் கண்ணிரண்டுங் கொடுபார்த்தான் பேராசை தழைத்ததாலே. (சஉ)

கண்டுதொழு திருவிழியும் பறிகொடுத்தா னானுங் கருத்தூடன்றேன், வண்டுவர்ச்சிர்த் திருவுருவு மணிப்பணியு மயின்முதலாவனவும்வந்து, மண்டுதலிற் களிப்புற்றான் மாதவத்தோ னறிந்துகுகன் மலர்த்தாள்பேணித், தொண்டுசெய வல்லான்கண் கெடலாமா கொடுத்திடெனச் சொல்லிநொந்தான். (சந)

செவ்வேற்கைக் குமரகுரு பரமுருக னருள்கூர்ந்து திரடோள் வேந்தற், கவ்வேளை கண்கொடுத்தா னருணகிரி யுள்ளத்தோ வணிக்கம்பத்தோ, மைவேட்குஞ் சிகரிநெடு மாடத்தோ பற்பலவா மலையிலேயோ, மெய்வேதச் சிரத்திலோ வாகமத்தோ யாவினுமோ மேவவுற்றான். (சச)

மன்னருண கிரிநாதன் றனையுமத்து ணிடத்தினிது வயங்கா நிற்குஞ், சின்னவடி வுடைக்குமரன் றனையுமினி திறைஞ்சியினிச் செய்யுமாறிங், கென்னவென்றான் றவனிதனை யொட்டியொரு திருக் கோயி லியற்றி யப்பாற், பொன்னவிர்கோ புரமதிளா யிரக்கான்மண் டபமுதற்செய் போதுமென்றான். (சரு)

ஆனந்த முகமலர்ச்சி யுடனிசைந்தா னினிச்சம்பந் தாண்டா னிங்கு, நானன்பு செய்தாலுங் குடியிரா னவன்சபத நவின்றுள் ளான்மெய், வானந்தோண் டுதற்றுவக்கப் போகின்றேன் மதிட்குள வன் மனையுமாகா, தீனஞ்செய் வானிருந்த தலத்திலென்ன செயலா குஞ் செப்புகென்றான். (சசு)

அந்தமொழி கேட்டருண கிரியுரைப்பா னவனையவ மதிக்க வேண்டாங், கந்தமலர்க் குழலுமையா ளடிமைதா னழுக்காற்றாற் கனற்கோபத்தாற், செந்தகைய புகழிழந்தான் வேறுமனை யமைத் தாலுஞ் சிந்தையொப்பா, னெந்தவிதம் போனாலும் போகட்டும் வாவியொன்றுங் கியற்றென்றோதி. (சஎ)

புரவலனை யனுப்பியப்பாற் றான்வசிக்குங் கோபுரத்திற் புக் கான் மன்னன், பரவசந்தீர்ந்தெழுமமைச்ச ருதியரோ டுவகைமொழி பகர்ந்துபோய்த்தன், னரண்மனையிற் புகுந்துடனே களஞ்சியத்துப் பொருளையெல்லா மள்ளிச்சிறப்பத், திரமுணர்வார் முதலோர்க்குக் கொடுத்தரிய திருப்பணிகள் செயச்சொன்னானே. (சஅ)

எற்றுநூற் காரரொட்டர் கற்றச்ச ராதியரோ டிகல்வேந்தேவப் பெற்றுளசே வகர்பலர்க்கு வெவ்வேறு மனையமைத்துப் பெயர்ப்ப தன்றிச், சுற்றுமதிட் காரம்பஞ் செய்வதுவுங் கண்டமணன் றுணுக்க முற்றான், மற்றுளமா னிடர்பலவா றருணகிரி தனைப்புகழ்ந்து வணங் கினரே. (சகூ)

தன்றேல்வி யறிந்துமந்தச் சமணர்பிரான் மன்னனிடந் தனித்துப்போய்முன், னின்றோது மென்னவித்தை யவன்செய்தா னரண்மனையி னிறைத்துவைத்த, பொன்றேற்கத் துணிந்தனையே தூணினுக்குங் கோயில்கட்டல் புவியிலுண்டோ, நன்றோத லறிதி யென்று னறியா திந்தவித நடத்துவேனோ. (நய)

என்றுரைத்து மன்னனெனக் கையமில்லை யுனக்கைய மிருக்கு மாறற், சென்றுணர்ந்து கொள்ளெனவுஞ் செப்பினு னப்படியே சிகரிக்கேகி, நின்றுபல நிந்தைசெய்தான் கேட்டருணகிரிநாத னேரில்வந்தா, னன்றுவிண்ணூர்த் தருமலரைக் கொணர்தியென்ரு னரசனும்போய் நடுவணுனன். (நிக)

நல்லரசை நோக்கியந்த நாதனயிற் குருபரனை நம்புமன்பர், வல்லமைதேர்ந் தறியாவிவ் வம்பன்மொழி யையகின்பால் வருத்த லுண்டேற், சொல்லமரர் தம்மூரின் மலர்கொணர்தி யெனநீயுஞ் சொல்கின்றுயோ, மெல்லவிவன் சொற்சபத மறந்தவர்போல் விடுத் தனையோ விளம்புகென்று. (நிஉ)

வினவலும்வேந் துளநடுங்கி யையமெனக் கேதுனருண் மேவப் பெற்று, மெனதுகட னித்ததியில் வாலன்றே வெனப்பணிந்தா னிமையார்வாழுங், கனகநகர்த் தருமலருங் காட்டுதுநீ யிவன்மனை யிற் கவினூர்வாவி, புனலொடுசெய் திளையனூர்க் கபிடேகஞ் செய்தி வன்முன் புகன்றவாறு. (நிங)

வேறுநகர்க் கேகிடச்செய் விரைவிலென்று னம்முனிவன் விடப்பாம்பென்னச், சீறுசினத் தமணர்தங்கோன் றனைநோக்கித் தேர்வேந்தன் செப்புமுன்ன, நூறுதர மிங்கிருக்கச் சொன்னுலும் போவேன்பின் னுவன்றவண்ண, நாறுமல ரிவன்கொணரு நாளில் வந்து போதன்மட்டி னயந்தேனென்றுன். (நிச)

வேறு

அந்தமொழிப் படியிசைதற் காசனஞ்சி யருளாளன்
சுந்தரமா முகநோக்கச் சுகமேயத் தினத்திலிங்கு
வந்தறிந்து பின்போகு மட்டிலொப்பென் றுனவன்றன்
வெந்தகைமுற் றுணராத வேந்தனுமப் படிச்சொன்னுன். (நிரு)

அக்கணமே யவ்வூர்விட் டயலூருக் கவன்போனுன்
பக்கமொரு பன்னிரண்டிற் பார்வேந்தர் பெருமானுந்
தக்கபொருட் செலவிட்டுச் சாற்றியவா றவைசெய்தான்
கைக்களிற்றுக் கிளையான்றன் கழல்பணிவான் களிகூர்ந்து. (நிசு)

திருப்புகழே டவனுமந் திகழ்தாச்சேர்த் தனனன்றி
மருப்பொலிகற் பகக்காவின் மலர்கொணர்ந்து தருவேனென்
றொருப்படுஞ்சிந் தையின்வலியா லொருதினஞ்சுட் டினனதுதான்
பொருப்பிலிடும் விளக்கேபோற் புவியெங்கும் பொலிந்ததனுல். ( )

அழுக்காறு மலிசம்பந் தாண்டானு மத்தினத்தி
லிழுக்காய மொழிக்கஞ்சா தெழிலருணை யிடத்தெய்தி
முழுக்காகங் கொக்கிறகான் மூடியிருப் பதுபோல
வழுக்காய வஞ்சகத்தான் மனத்தைமறைத் திருந்தானே. (நிஅ)

அருணகிரிப் புலவோன்பா லடற்சம்பந் தாண்டான்முன்
பொருவரிய பகைசெய்து புகழிழந்த விதஞ்சொன்னேன்
மருமலிகற் பகமலர்க்கம் மாதவன்போ யதுமவன்றன்
னுருவமழிந் ததுமினிநா னுருசிறிது பகர்வேனே. (நிகூ)

சம்பந்தாண்டான்விகாதச்சருக்க முற்றிற்று

ஆ கவி ௬க௬

வேலுமயிலுந் துணை

உ

முருகக்கடவுடுணை

பாரிசாதச்சருக்கம்

பெற்றிமிக்கபிரபுட தேவன்முன்
சொற்றிடும்படி தூயவிண் ணூர்மலர்
பற்றிவந்திடப் பைந்தமிழ்ச்சோணவெற்
புற்றிருந்த வொருமுனியுன்னினன். (க)

தன்னுடம்பைத் தனித்திருக்கோபுர
மன்னுமேனிலை வைத்தனன்மாண்டதோர்
பொன்னுறழ்ந்த கிளியுடற்புக்கெழுந்
துன்னும்வானகத் தோடினனூடலும். (உ)

கூடவுற்ற குலக்கிளிபற்பல
நீடவேகி நிறைவலியின்மையால்
வாடலெய்தி வசிப்பிடத்துற்றன
பாடன்மிக்குணர் பைங்கிளியொன்றுமே. (௩)

மின்னலென்ன விளங்கெழில்வேலினான்
றன்னருட்பெருக் கங்கொடுதண்குலாம்
பொன்னகர்க்குட் புகுந்ததுபோகுமுன்
னொன்னலன்றெரிந் தானுமையோதலால். (௪)

சென்றுசிற்சிலர் திண்டிறன்மன்னன்முன்
னின்றுனக்கு நெடுவிசும்புற்றபூ
வின்றுகொண்டு வருதுமென்றேகினோன்
பொன்றுதன்மையடைந்து சொற்பொய்த்தனன். (௫)

இன்னதானத்திறந் தனணிச்சொன்மெய்
யென்னவோதி யிறைஞ்சவிடுத்தன
னன்னசொல்லர சன்செவிக்கங்கியிற்
றுன்னைவைத்த சலாகையிற்றேய்ந்தது. (௬)

தொண்டுகொண்டுயர் தூயவன்சொன்னசொற்
பண்டுபோலப் பலிக்குமென்றெண்ணினேன்
மண்டுவல்வினை வந்ததுகொல்லெனக்
கண்டுநொந்திரு கண்கலுழ்ந்தானரோ. (௭)

ஆயகாலையி லங்கமணன்புகுந்
தேயநஞ்ச மிவற்கெவர்நல்கினார்
மாயவஞ்சகன் வைத்திருந்தான்கொலோ
தூயகோயிற் றொடக்குறச்செய்தனன். (௮)

பொன்றயங்கும்வி ணூரினிற்போம்வலி
யென்றனக்கிலை யென்றிட நாணினா
னின்றனேக ரிகழ்ந்திடனாணிலான்
குன்றநேர்புயக் கொற்றவவென்னவே.’ (௯)

மன்னைநோக்கியு மற்றுளமன்பதை
தன்னைநாடியுஞ் சாற்றினன்பற்பல
வன்னையன்ப னகங்களிப்பெய்தவோ
வென்னைகாரண மோகுகனெண்ணிலான். (௰)

விரிதிரைப்புனல் வேணியன்கோயிலிற்
குரியபூசை யுஞற்றுநிமித்தமப்
பெரியவன்றன் பிறங்கெழின்மேனியை
யெரியிலிட்டன ரிப்படியாயபின் (௰௧)

அங்குதேவ ரதிசயித்தம்புவி
தங்குமோர்கிளி தன்னுடலோடுவந்
திங்குலாவுவ தென்னெனத்துன்னினர்
பொங்குசெந்தமிழ்ப் பாடல்பொழிந்ததே. (௰௨)

வேறு

பாடலின்பய னுணர்ந்துதம்மூரொடு பரிந்துதம்மையுங்காக்கு
மாடல்வேலவ னடித்தொழும்புடையதென் றறிந்தனரயிராணி
கூடவிந்திரன் கொலுவிருந்திடுமவை குறுகியோதினரன்னோன்
வேடம்வேறெடுத் துறுந்தவனுமென விரகினாலுணர்ந்துற்றான். (௰௩)

வந்துதெண்டனிட் டுபசரித்தழைத்தலு மலைத்திரள்வலியாவுஞ்
சிந்துவச்சிரந் தரித்தகைமிசைவரச் சிந்தைமிக்குவப்பாகி
முந்துகாரணஞ் சிறிதுகேட்டணிமணி முடித்தலைமிசைவைத்தான்
பந்துநேர்முலைச் சசிமுதலணங்கினர் பற்பலர்விழைவுற்றார். (௰௪)

கண்டிதோர்கிளி தானெனக்கருதிடிற் கடும்பிழைவருஞான
பண்டிதன்றன தடியருட்சீரியன் பாவலர்களின்மிக்கோ
னெண்டிசைக்குமப் புறத்தினுநிறைபுக ழிசைந்தவனெனவஞ்சி
யுண்டிடும்படி யமுதமிக்கூட்டியவ் வுடலுமேம்படச்செய்தார். (௰௫)

கூரிலங்கிய குலிசவேன்மன்னொடு குலவுபைங்கிளிநாதன்
பாரிசாதமென் மலரிலொன்றளித்தெனைப் படியினுக்கனுப்பென்றா
னேரியைந்தவத் தருவிலைக்காலமு மிருக்கலாமெனக்கூறக்
காரியஞ்சொலி யப்படிப்பெற்றொரு கணத்தின்மீண்டனன்மன்னோ.

இந்தமாநிலங் கருதலுந்தன்னுட லிகலவன்புரிதீங்கால்
வெந்தவாறுணர்ந் தொருசிறிதழுங்கினன் வினைத்திறன்முதலாமற்
றெந்தவேதனைத் தொடர்பையுமொழித்தரு ளளிதினிற்றரவல்ல
கந்தநாயகன் சம்மதமீதெனக் கருதியுங்களிகூர்ந்தான். (௰௭)

பெற்றதாற்களிப் படைவதுமேலவர் பெற்றியென்றிடுமாற்றா
லற்றமெய்திய வுவகையோடருணையை யடுத்துவந்தனனவ்வூர்
முற்றமாமணங் கமழ்ந்ததாலியாவரு மூக்குணர்ச்சியின்மூழ்கி
யுற்றதன்மைய ராயினரப்பொழு துயர்பிரபுடதேவன். (௰௮)

சீயநாவிரண் டேந்தியவாதனந் திருத்திவீற்றிருந்தானங்
கேயமந்திரி யாதியர்சூழ்ந்தன ரெழிலவைமிகக்கூட
லாயதஞ்சுகத் துடலினுட்புகுந்தவ னமரரூர்மலரீதென்
றீயவாங்கின னென்கடன்றீர்ந்ததென் றியம்பிடுமொழிகேட்டான்.

ஐயகோவென வலறினன்வீழ்ந்தன னருணைநாயகன்பேர் கொண், மெய்யனேர்கிளி யுருக்கொடுவந்துள வியனிணைத்தெழுந்தானின், செய்யமேனியை யென்னிடத்தளித்திலை சிகரியின்மிசை வைத்தாய், பொய்யர்சொற்படி யெரியிடற்கிசைந்தனன் பொறுத்திடென்றிறைஞ்சுற்றான். (உ௰)

வந்துகூறினர் தமைக்கொணர்ந்துமக்கதன் வகைசொலுரெவரென்ன, வெந்துகேட்டனன் வெருட்சியாலுரைத்தனர் விரைந்து வாட்படையேந்தி, யுந்துதீப்பொறியுடன்விழித்தவன்றனை யொறுக்க நாடினன்கண்டு, சிந்துரத்தனி வாய்திறந்தஞ்சுகத் திருவுருவினன் சொல்வான். (உக)

என்றனக்கது மிதுவுமந்நியமதி விதன்சுமையெளிதாகுங்
குன்றமன்னிடத் ததனுடன்செலிற்பல குழுவுடன்றெழல்வேண்டு
மென்றகைத்திருப் பெறுமிதோடேகிடில் வியன்காத்துறலாகுஞ்
சென்றவூரமிழ் தயின்றதாலிதனிடஞ் சிறிதுமெய்ப்பணுகாது. (உஉ)

இதுவுமிவ்வுட வினமுநல்லுணவலா லினமுற்றவை யுண்ணுப்
புதுமைதோய்வன வதுவுமுன்னுட்சில புசிக்கொணுதனவுண்ட
தெதுவுமீசுரச்செய லெனிலிச்செய லிகலவன்றனதாமோ
மதுவுநாணுறுஞ் சுவைக்கவி யிந்தவாய் வழங்கிடிற்கசப்பாமோ. ()

நிதமுமெத்தனை மானிடயாக்கைக ணிலத்தினில்விழுகின்ற, ததனைவிட்டிதை யெடுத்தநான்விருப்புறி லவற்றிலொன் றடையேனே, விதனமுற்றுள கிளிக்குழாமுவப்புறமேவுதும்விறன்மிக் காய், கதமுறேலெனக் கழறின னுடற்றெனி காட்டியும் பறந்தானே. (உச)

மன்னன்றன்றலை விதியினைப்பழித்தனன் வயிறெரிந்தனன்வஞ்சந்
துன்னவாழ்கொடுஞ் சமணனைவசைபடச் சொல்வதிற்றுணிவுற்று
னன்னதன்மையே யகிலமுற்றடைந்ததவ்வமணனெஞ்சமையானு
யுன்னருந்திற லுக்கிரகாளியிற் குரியபூசனைசெய்தான். (உ௫)

வேந்தன்றன்குடி கெடுக்கவோவருணையின் வியனழித்திடத்தானே
சாந்தமார்தமிழ்க் கிளியினை யினத்தொடு தடியவோதனையேசு
மாந்தரியாரையும் விழுங்கவோ காளியை வரவழைத்திடநாடிப்
போந்தபூசையிற் செயத்தகாதனசில புரியவுந்துணிவுற்றான். (உசு)

சருப்புசிப்பவர் சேனைகாவலனொரு சத்துருசங்காரத் திருப் புகழ்க்கவி யம்பிகைக்குரையெனச் செழுந்தமிழ்க் கிளிதன்பால், விருப்புடன்சொலக் கேட்டதுன்றனக்கலால் விளம்பிடேனென வேலா, யிருப்புரைத்தன னவண்மகனிவனென வியம்பியதந்நாளில்.

யாளிமீதிவர்ந் தாயிரந்தலையிரண் டாயிரங்கரத்தோடு, வாளிலங்கிய படைபல தாங்கியோர் மலையெனவளர்ந் தோங்கிக், காளிவந்தன ளதட்டினள் பணிந்திலன் கடுக்கெனத்திடுக்குற்றான், றேளினுங் கொடுங் குணத்தனுஞ் சமணன்மேற் சினந்தடித் துயிருண்டாள். ()

கண்ணிரண்டுநா வொடுமிகப்பிதுங்கின கருங்குருதி யின்சோரி, மண்ணிலோடிட மலசலங்கழிந்தன வஞ்சகத்தொடுமாண்டான், புண்ணியத்தினர் நினைக்கரும்வெறிப்புனல் புலைத்தசையிடும்பூசை, பண்ணிடும்பல ரிவ்வணமடிவது பாரினில்வழக்காமால். (௨௯)

அன்றுகண்டவர் கேட்டவரியாவரு மவுணராதியபொல்லார் பொன்றுநாளையி லிருந்தவராமெனப் புகலருங்களிப்புற்றார், நன்றுளார்க்கிடை யூறுகள்விளைத்திட நாடுநர்க்கதுதான்வந், தொன்றுமென்பதற் கிதுகரியாகுமென் றுரைத்துணர்ந்தனர்சில்லோர். (௩௰)

பேட்டுவாலன மலையவர்விரும்புதோட் பிரபுடமகராசன்
கேட்டுமாமகிழ் வெய்தியெண்ணறுபல கிரிதொறு நடமாடுந்
தாட்டுணைக்குகன் முதலியவானவர் தமக்கெலாமபிடேகஞ்
சூட்டுமாலைநி வேதனமாதிய தொகுத்திறைஞ் சினனன்றே. (௩௧)

வந்துகோபுர வாயிலினின் றுமுன் வானகமலரொன்று
தந்துபோயின கிளியினையதனது தண்ணருண்மிகையாற்கண்
டுந்துவன்பகை யொழிந்தவாறுரைத்தன னுயிர்த்திரளினுக்கெல்லா
மூந்துநாள்விதிப்படிநடந்திடுமென மொழிந்தவனுடன்வந்த. (௩௨)

பாவலன்றனைப் பார்த்துமைமகனெனப் பகர்ந்ததோர் கவிசொல்லிற்
றுவல்கொண்டெழு தினணினிவந்துவந் தறைந்தபாட்டெழுதென்ற
தேவலின்படி நடப்பதிற்பிழைபடே னெனவிறைஞ்சினனந்தக்
காவலன்சொலும் பெற்றனன்சிறிதுநாட் கழிந்ததிவ்வணமாதோ. ()

கொற்றவன்றன தருந்தவப்பயனெனக் குலவுபாலகன்றன்பா, லுற்றதன்னர சுரிமையைக் கொடுத்துவிண் ணூர்புகுந்தனனன்னோன், மற்றடம்புய வலிமுதற்பகர்நல மருவிமாதவத்தோர்க்குங், கற்றவர்க்குமோ ருயிரெனவிளங்கினன் கலிவெருண்டயர்ந்தானே.()

மெய்ப்புகழ்க்கடல் விளைக்குமப்புரவலன் விரிகடலோரேழு
மொப்புரைக்கருந் திருப்புகழாதிய வுயர்தமிழ்க்கவிகோடி
செப்புமேலவன் கிளியுருக்கொடுதிகழ் சிகரியிற்றினம்போய்வந்
தெய்ப்புறுமையிற் றுதையிற்சிரிய னெனும்பெயர்புனைந்தானே. ()

தேரிலங்கெழிற் றெருவளத்தருணையூர்ச் சிவன்பெயர் புனைந்துள்ளான், பாரிசாதமென் மலர்கொணர்ந்ததுமுதற் பகைகெடல் பார்வேந்தன், சிரியைந்தவீட் டுறலவன்மகன்றிறல் செப்பினமினியன்னோன், கூரியற்செழும் பவளவாய்க்கிளிகளிற் கூடிவாழ்ந்தமை சொல்வாம். (ங.சு)

பாரிசாதச்சருக்கமுற்றிற்று

ஆ கவி ங.சகூ

வேலுமயிலுந்துணை

உ

முருகக்கடவுடுணை

கிளிவாழ்க்கைச்சருக்கம்

குலவுசீர்த்திரு வருணைக்கோபுரத்
திலகுபைங்கிளி யினங்கண்டின்புற
நிலவுமொன்றிறந் துயிர்த்துநேயமார்
பலவுமஞ்சுறப் பறந்துபோயபின். (க)

அன்றதோடுசென் றயர்ந்துமீண்டவை
நின்றமற்றவை யோடுநெஞ்சழிந்
தொன்றருந்துத லின்றியோர்தினங்
கன்றலுற்றபின் காணப்பெற்றன. (உ)

கண்டுகிக்கிகி கககவென்றசொல்
விண்டுசூழ்ந்தன வேலன்றன்னடித்
தொண்டுகொண்டவன் சூழ்ச்சியான்மிகப்
பண்டுவாழ்ந்ததிற் பரிவுகாட்டினன். (ங)

மன்னனுதியர் வலிதில்வந்துவந்
தன்னம்பாற்குழம் பணையவுண்டிதா
மின்னறீர்ந்துயு நிமித்தமேறவைத்
தென்னதேற்றதென் றியம்புவார்சிலர். (௪)

சுற்றமோடுதா னருந்திற்றூயவர்
பெற்றநன்மைகள் பேசக்கேட்டுவந்
தற்றமங்கவர் தமையெலாமறிந்
துற்றதோர்கிளி யதனையோர்கிலார். (௫)

துங்கவான்மலர் சூடுஞ்சென்னியோன்
புங்கமார்கவி யெழுதும்புண்ணியன்
றங்களோடுசொற் சாற்றும்போதுவந்
தங்கண்ஞாலமுற் றவர்களார்வமாய். (௬)

ஐயநீங்குவ ரடுத்துச்சிற்சில
செய்யவாய்க்கிளி நெருங்கிற்சிந்தையின்
மையல்கூர்வருண் மருவுவான்றனைப்
பையநாடுறும் பருவமின்மையால். (௭)

தூலதிட்டியிற் சுழன்றிடாதருட்
பாலதாமனம் பதியும்வேட்கையாற்
காலநோக்கமா தியகண்டோர்சிலர்
சாலவீதென வுணர்ந்துசாற்றுவார். (௮)

சித்தாதிய கணத்துட்சிற்சில
ருத்தமக்குக னருளிலுற்றதோர்
பத்தன்வாழ்கிளிப் பான்மைகாணுற
வித்தகத்திரு வருணைமேவுவார். (௯)

இன்னதன்மைக ளளவிலாதன
துன்னவாழ்பவற் சூழுமவ்வினஞ்
சொன்னதோர்சுகப் பெயர்க்குத்தக்கசீர்
மன்னலாலுயர் மாண்புதோய்ந்தது. (௰)

வேறுவேறுதாய் விரும்பிப்பெற்றுள
நூறுநூறென நுவல்வயாவையு
மாறுமாமுக னருளேயேமிகக்
கூறுமொன்றுதன் பார்ப்பிற்கொண்டது. (௰௧)

செந்தமிழ்க்கிளி யுடம்பிற்சேர்ந்தினி
தந்தநாளெயி லிருந்தவாருயிர்ப்
பந்தமேவியும் பசியமாமயிற்
கந்தவேண்மலர்க் கழல்கண்டுமால். (மஉ)

அரியசந்தவாக் கதிபன்வாழ்தனுக்
குரியமேனியி லுற்றதோருயிர்
பெரியர்வேண்டுசீர் பெற்றதென்றிடிற்
சரியன்றென்பவர் தரைக்குட்பாரமே. (மங)

பேடுபார்ப்புமுற் பிறங்குபல்குழாத்
தூடுமேம்பட வுறைந்ததோர்கிளிக்
கூடுவாய்த்திடக் கொடுத்துக்காத்ததோர்
வேடுவன்செயல் விரிக்கொண்ணுதரோ. (மச)

வேறு

கந்தனறு பூதியலங் காரமுத லாய
பைந்தமிழ்ந றுந்தொடையல் பற்பலவ ணைந்து
செந்தகைய வாய்கொடுவ ரைந்தசில பாட
லந்தநக ரிற்சிலர்கொ டார்வமுற விட்டான். (மரு)

நல்லவரு டன்பழகின் ஞானமொடு கல்வி
யில்லவரு மிக்கநல மெய்திடுவ ரென்னுஞ்
சொல்லருணை யின்சிகரி தோய்தருசு கங்கட்
கல்லறமு ணிந்தகிளி யாணிசம தாகி. (மசு)

மாணிடவு ணர்ச்சியில்வ யங்குமகிழ் வெய்திக்
காணிடம லைந்துறுக லக்கமுழு தற்று
வானிடமி ருக்குமவர் வாழ்வையும்வெ றுக்குங்
கோனிடமி யைந்துளகு ணஞ்சிலபொ ருந்தி. (மஎ)

பெற்றவைநி னைத்துமகிழ் பேரறிவின் மூழ்கி
யுற்றனவ நாளிலவை யொத்தவுரு வத்தோர்
நற்றவன யிற்படைகொ ணுயகன்வ சிக்குங்
கொற்றமலை யிற்குடிகொ ளும்படிகு றித்தான். (மஅ)

அச்சிகரி யாலதைய டுத்தசிக ரிக்கு
நச்சியகி ளிப்பெயர்ந வின்றிடமி குக்கும்
பச்சிறகு கொள்ளுமவை பற்பலநெ ருங்க
மெய்ச்சிவனு றுங்கிரியின் மேற்றிசையி லுற்றான். (மகூ)

காதலறும் வாழ்வுதவு கந்தனுறை கந்த
மாதனநெ டுங்கிரியின் மன்னியகு வட்டின்
மீதணுகி யங்குலவும் வித்தகர்க ளெல்லா
நாதனென வொப்பவொரு ஞானவநு பூதி. (உ0)

வேறு

பாடினன் கிளியின்செஞ்சொற் பன்னிரு செவிக்கோன்கேட்டு
வாடிடேல் வாவாவென்று வரவழைத் தொருவன்சேவ
னீடிய புயத்தினேரா நிகழ்வலத் தோளில்வைத்தா
னாடினர் புலவர்கையா லணிமலர் மழையும் பெய்தார். (உக)

அன்றவ னருணையூரி லவதரித் திடுமந்நாளே
யென்றவேள் கிழமைமட்டி லிரண்டதா மெனவுஞ் சொன்ன
னன்றது மாறித்தோன்ற ஞனிலத் தியல்பேயாமா
லொன்றலாற் பிறிதொன்றில்லை யுரியசீர் செயவல்லார்க்கே. (உஉ)

அக்கிளி யயில்வேள்பாலு மமரர்கோன் மகடன்பாலு
முக்கிரக் குறவர்கானத் தொருமடக் கொடிதன்பாலு
மிக்கினு மினியசெஞ்சொல் லியம்பிமிக் குவகையீந்து
திக்கின மறியுமுண்மைத் திருப்புகழ் படைத்ததம்மா. (உங)

அப்புற நடந்தகாதை யதிற்சிறி தறிந்துற்றவு
மிப்புரா ணத்தினுயே னியம்பிடு மியல்பின்பாற்றன்
றெப்புல வனுக்கம்மேன்மை யிசையுமோ வறிகின்றில்லேன்
முப்புர மெரித்தாரீன்ற முருகவே ளறியுமன்றே. (உச)

யாணிதிற் பகர்ந்தவாற்றிற் கிசைந்திடா விதமுஞ்சில்லோர்
நானிலத் துரைப்பதுண்டு நலந்திக ழருணைநாதன்
கானிடக் குறத்திகோன்றன் கழல்பணிந் துய்ந்தவாற்றை
வானின்மென் மலர்கொண்டுற்ற வண்மையை மறுத்திடாரே. (உரு)

மருமல ரிதழியாற்கு மணிவிழை வழங்குசீரா
லொருபெருந் தா்ணதயாகி யுலப்பரும் புகழ்ச்சீர்தோய்ந்த
வருணைவல் லாளன்செய்த வணிநெடுஞ் சிகரிக்காவன்
முருகவே ளருளாலிந்த முதுகதை முடிந்ததன்றே. (உசு)

பலபல சிகரியோங்கும் படியிடத் தருணையூரி, னிலவுமொன் றினுக்கிம்மேன்மை நிகழ்ந்தவா றென்னென்றெண்ணும், புலவரும் பிறருந்தேறிப் புகன்றுவப் படைதல்வேண்டி, யுலகினிற் பழையோர் தம்மா லுணர்ந்தவா றுரைக்கலுற்றும். (உஎ)

கிளிவாழ்க்கைச்சருக்க முற்றிற்று

ஆக கவி ௩௭௬

வேலுமயிலுந் துணை

உ

முருகக்கடவுடுணை

கோபுரத்துச்சருக்கம்

ஆரணிந்த வவிர்சடைத்தம்பிரான்
சீரணிந்த செழுந்தழல்வெற்பதா
மூரணிந்தர சாண்டவரூடொரு
காரணிந்தகைக் காரன்வல்லாளனே. (க)

தருமநீதித் தகைமுழுதுற்றவ
ணிருமடந்தையர்க் கேற்றமணாளன்வேன்
மருமவீர மகாரதன்வண்டுழாய்க்
கருமலைக்கிணை யாகியகாட்சியான். (உ)

மன்னர்மன்ன னெனப்பெயர்வாய்ந்துளான்
சின்னவெண்பிறைச் சென்னியன்பொன்னடி
யுன்னலேதவ மென்னுமுணர்ச்சியா
னின்னலின்றி யிருந்தரசாளுநாள். (௩)

பாலன்வேண்டும் பருவரலுற்றுளஞ்
சாலவாடித் தளர்ந்தனன்சந்ததஞ்
சீலவேதியர் செப்பியவாறெலா
ஞாலமீது நடத்தியுநாணினன். (௪)

சரதமாநிறைத் தையலர்தாமுநல்
விரதமுற்று மெலிந்துவெதும்பின
ரரண்மனைக்கழ காமொருமைந்தனைக்
கரகநான்முகன் கைகொடுசெய்திலான். (௫)

வேந்தினத்தினுண் மிக்கவன்றன்னிடம்
வாய்ந்திடும்பல் வகைப்பொருளியாவையு
மேந்தியேற்பவர்க் கில்லையென்றோதிடா
தீந்திடத்துணிந் தானெழில்வாயிலில். (௬)

ஈகைகாட்டு மியற்பறைமோதுவித்
தோகையோடு மொருகொடிக்கட்டினு
னுங்கயானுள வாதுலரியாவரும்
வாகைபெற்று மகிழ்ச்சியின்மூழ்கினார். (௭)

அந்தநாளி லவன்பொருட்குன்றிடா
துந்தவைத்தன ராண்மழுச்செங்கையார்
தந்தவேழந் தனைநிகர்மன்னவ
னெந்தவேளையு மேற்பவையீந்தனன். (அ)

மேலுமேலும் வியன்றிருமிஞ்சுத
லாலுநொந்தன ளாயிழைதன்முலைப்
பாலுண்வாய்ச்சிறு பாலகனின்மையிற்
சாலும்வாழ்வைத் தணந்திடநாடியே. (௯)

வந்திரப்பவ ரின்மையின்மன்னவ
னைந்திருந்தன னூலிடையாளிடத்
தந்திவண்ண ரருண்மலிந்தாடுவான்
சிந்தியாவொரு சீருருக்கொள்ளுவார். (௰)

திரைந்தமேனியுஞ் செந்நிறத்தானையும்
வரைந்தபுத்தகம் வாய்ந்துளகட்கமு
மிரைந்தமூச்சு மிளைப்பும்வெண்பீளைநீர்
கரைந்தகண்ணுங் காத்தொருகோலுமாய். (௰௧)

நீறணிந்து நெடுவடத்தக்கமு
மீறமார்பில் விளக்கிவெயிற்றரும்
பீறலார்குடை நீழலிற்பேசரும்
வீறணைந்துள வீதியின்மேவினான். (௰௨)

மங்குல்போல வழங்கும்வல்லாளமா
லெங்குளானவ னீகைவிழைந்துமே
னங்குகொண்டனை யார்விடுவாரெனப்
பொங்குதுன்பினர் போற்புகன்றனரோ. (௰௩)

அன்னமாற்ற மறைதலுமங்குளார்
மன்னர்மன்னவன் வாழ்பெருமாளிகை
முன்னம்விட்டு மொழிந்தனருட்புகுந்
தின்னல்கூறி யிரக்குமுன்னேசில்கோன். (௰௪)

கண்டுவந்து கரங்குவித்தன்புடன்
கொண்டுசென்று குலமணிப்பீடமேற்
றெண்டுசெய்பவர் சூழவைத்தென்பணி
யுண்டுமென்னி லுரையெனவோதினான். (௰௫)

வேறு

மன்னன்மொழி கேட்டுமன மகிழ்ந்தார்போற் றிருவதன மலர்ச்சிகாட்டி, யென்னதுநெஞ் சகத்துவிருப் பொன்றுளதெந் தமக்காகு மியல்பின்பாற்றன், றன்னவண்ணம் புரிவாயேற் பகரலாம் பகர்ந்தபின்ன ராகாதென்றியா, ணின்னலுறச் செய்வாய்கொ லெனச்சொன்னான் மாலறியா விருதாட்பெம்மான். (௰௬)

வல்லாள னதுகேட்டிப் பூதலத்திலுள்ளதென்றால் வழங்கச் சோம்பே, னில்லாத பொருளெனிலியா னென்செய்வே னென்றுனவ் விறைவனெங்கு, மெல்லார்க்கு மெளிதிலெய்தத் தக்கதேயென்னளவு மிறும்பூதாயிற், றல்லாம லில்லையென்று னரசனின்னே யளிக்குதுநீ யறைதியென்றான். (௰௭)

ஈதுமெனச் சொன்னமொழி வினவியந்தக் கிழமுனிவ னியாதோவென்ன, நீதுயருற் றிடவேண்டா மொருமடவா ளின்பநல நினைத்தேனோர்நாட், போதுமென்று னுடனரைய னெற்றர்களை யனுப்பியவ்வூர்ப் பொதுமின்னாருட், சூதுறழுங் கொங்கைநல்லார் களிற்றனித்தோ ரனைவரையுந் தொகுக்கச்சொன்னான். (௰௮)

பருவமட மங்கைநல்லார் பலரையந்த முனிவரன்கண் பார்க்கச் செய்வித், தொருமகளைக் கொடுக்கமன்ன னுன்னுமுன்ன முயிர்த்தொகையி னுள்ளந்தோறு, மருவுமவ னவரவர்க்குந் தக்கவனுத் தனித்தனிபோய் மாடைநல்கி, யிருவருமா யமளிமிசை யத்தெருவின் மனைதோறு மிருந்தான்மன்னோ. (௰௯)

அவ்விறைவன் றனதருளாற் பெருவிரலிற் பால்சுரக்க வருந்தியுய்ந்த, செவ்வியமா முனிவனது சீடர்களிலொருவனிடைச் சேரியிற்றோ, றெவ்வியமங் கையர்பலர்க்கு மொவ்வொருவ னுவிளங்க லுண்மையென்று, லிவ்விதமாங் கியற்றியதோர் வியனுமென் றியாவர்சொல்வா ரிகத்தின்மாதோ. (௨௰)

போயவொற்றர் பலரும்வந்து கணிகையர்தம் மனைதோறும் போரேறன்னார், மேயவிதம் புகலக்கேட் டிகல்வேந்தன் றிடுக்கமுற்று வேறும்பல்வா, ருயவிதங் கருதியொன்று நீதியினுக் கிசைந்ததன்று லகற்றித்தன்றே, ணேயமுற்று ரிருவர்களி விளையாடன் னெழிற் பொலிவி னினைவுவந்து. (உக)

அரண்மனையுட் புகுந்தந்தப் புரத்தேகி யவளருகி லணுகியின் றென், விரதபங்கம் வாராமற் காப்பதுன்றன் கடனென்றான் மெல்லி நல்லாள், புரவலநின் னுத்தாரம் போனடக்கை யென்விரதம் புக லென்றாளவ், வரமுனிவன் கருத்துமிவன் முயன்றவித மத்தனையும் வகுத்துச்சொன்னான். (உஉ)

நின்பொருளா மென்றனக்கோர் சுதந்தரமின் றுன்னெறியி னிற்பேனென்று, ளன்பொடுமின் றிரவளவி லம்முனிவன் றனைச்சே ரென் றறைந்தான் சென்றான், மின்பொருசிற் றிடைப்பாவை யெள் ளளவு மனங்கோடா விரதியாகிப், பொன்பொதியு மணிப்பணிபூண் டரங்குமலங் கரித்திருந்தாள் புரையில்பண்பால். (உந)

பல்லணுவிற் கனையாகு மருணையுண்ணு முலையையிடப் பாகம் வைத்த, வல்லவர்தாம் வல்லாளன் மனைவியினைச் சேர்வார்போன் மாறுவேடம், புல்லவரும் பெருங்கொடுமை சகியானுத் தேழுபச் சைப் புரவித்தேரு, ரெல்லவன்றான் மேருவிற்கு வடபுறத்தின் மறைந்துவிரைந் தேகினனே. (உச)

அருணநெடுங் கிரியாகி யரியயன்றே டரிதாய வமலர்தாமற், றொருவன்மனை விஞ்யப்புணர்வா ராமாகி லதைப்பிறர்பா லுரைத் துத்தான்முன், குருமனைவி தனைச்சேர்ந்த கோதொருவா றொழிப்ப தெண்ணிக் கொண்டான்போலத், திருமலிதண் பனிக்கதிரா யிர முடைய மதிகுணக்குத் திசையில்வந்தான். (உரு)

தண்கமல மலர்குவிந்துற் பலமலர்ந்து வண்டுசில தயங்கவானத், தொண்குலவு முடுத்தோற்ற மனைதொறுங்கன் றினங்கதற வொழுகு தீம்பால், வண்கொண்மடி யசைந்தாக்க டெருவில்வாச் சிறுவரசை வாய்ந்த தோளோ, டெண்கிளர்நெஞ் சினராகி யொதுங்கவருமாலை யைக்கண் டிகல்வேன்மன்னன். (உசு)

காமவெறி விஞ்சியுடல் பணிப்பவித ழுலர்ந்து செம்மை கடைக் கண்சாரத், தாமதமே னரசனெங்கென் றடிக்கடிகேட் டிருந்தகள்வர் தம்மைப்போற்றிப், பாமரர்போற் கையில்வெண்ணெ யிருக்க நெய்க்கா ளனுப்பிநொந்த பழுது தீர்ந்தே, ஙீமகிழ்வுற் றெழுந்தருளென் றழைத்துவந்தவ் வரங்கதனுண் ணெறியோடுய்த்து. (உஎ)

அணங்கனையா டனைநோக்கி யிவர்க்கான பணிமுழுது மன்பிற் செய்து, பிணங்கலின்றி யின்பநலம் பெருக்கென்று னதற்குளவர் பெயர்தியென்றார், கணந்தறுகா தப்புறத்திற் கதவடைத்துப்போய்த் தனது கைவாளேந்தி, மணங்கமழ்மா லிகைத்திண்டோள் வல்லாளன் காத்திருந்தான் மகிழ்ச்சிகூர்ந்து. (உஅ)

மலர்விரித்த பஞ்சணையில் வீற்றிருந்த கிழமுனிவர் மருவுவாரென், றிலகுபசுந்தோகையன்னு ளறைக்கதவின் புறத்தாளிட் டெண்ணிலாத, பலதாஞ்சேர்ந் துள்ளாள்போன் முகமலர்ச்சி யுடனணுகிப் பக்கத்துற்றாள், கலகமதற் கஞ்சினர்போன் றிருந்தது போய் வெயர்த்தவசங் காட்டலுற்றார். (உகூ)

ஒருநொடிக்கோர் விதநோய்கொண் டுழல்வாரிற் பாதவித்தாரொள்வேற்கண்ணு, ளருவருப்போர் சிறிதுமின்றி யாதரித்தாள் விரதமுடி வாகாவாற்று, லுருகியங்கை விரலெநரித் தயர்ந்தாளக் கணஞ்சேவ லொலிகேட்டென்றாழ், வருமெனத்தேர்ந் தணிமுலைச்சோ டவர்மார்பிற் றிளைப்புறப்போய் வலிதிற்றேய்ந்தாள். ()

தழுவுதலு முன்னுளோர் கொடியிடமூன் றுருக்காட்டுந் தம்பிரானு, ரழுமதலை யுருவானு ரவளுமுலைப் பால்சுரந்தீன் றவளே போன்று, விழுமியசீர்க் கதவுதிறந் தாளுடனவ் வேந்துவகை வியப் போடெய்திப், திழுதிலளா முதன்மனைவி யொடுதானு மெடுத்தணைத் துட் பரிவுதீர்ந்து. (௩க)

மூவர்களு மடிக்கடிகைம் மாறிமுகந் தார்கடிகை மூன்றே முக்கா, லாவதன்முன் னகிலமுண்டோ னறிவரிய துணைத்தாளு மலர்ந்தகஞ்சப், பூவருவான் கண்டறியாப் பொன்முடியும் பார்த் துரியபுரைதீர்ந்துய்ந்தார், தேவர்பிரான் சிசுவடிவங் காணவரு வான் போலத் திகழ்ந்தான்வெய்யோன். (௩உ)

மந்திரியா தியர்தாமுந் திருவருணை யூரின்மற்றும் வாழ்சிலோரும், வந்திறைவ னருட்கூத்தென் றுணராமற் பலவாறு மகிழ்ந்து சொன்னர், முந்திவந்த கிழமுனிவ னெங்கெனக்கேட் டிலரவனு மொழிந்திலானெத். தந்திரமுந் தெரியுமந்தக் குழவியவர் மன வாஞ்சை தழையச்செய்து. (௩௩)

வேறு

மாயமின்னென விண்ணிடைமறைந்தது மறைந்து
போயபோதவர் வருந்துமுன்போர்விடைப் பரியிற்
றூயவாணகைச் சுரிகுழற்றேரகையோர் பாக
மேயசீர்முதற் றெரிதர விளங்கிய தன்றே. (௩௪)

வானுளாரனை வருமிகமலர்மழை பொழிந்தார்
கோனுமங்குள குழுவுடனுவகைமேற் கொண்டு
மானுறுங்கரத் தண்ணலைத்துதியொடு வணங்கி
யானுமென்குலத் தியாவருமுய்ந்தன மென்றான். (௩௫)

பொன்று தீமையில் புனிதர்தாம்புரவலன் றன்பா
னன்றுநின்றவ மகிழ்ந்தனமையுறே னுமே
யின்றுநின்மக வாயினம்வேண்டுமா றெழிற்சே
யொன்றுநல்கினும் வருடநூறுயபின் னொழியும். (௩௬)

உலகமுள்ளமட் டுன்மகவென்றெமை யுரைக்கத்
திலமளாவிய நீரிறைக்குதுமினித் தேகம்
விலகுமாறெவண் வேண்டுதியுரையென வினவக்
குலவுபோரிடை விடுத்தலேநலமெனக் குறித்தேன். (௩௭)

என்றுகூறின னீந்தனமென்றவ ரிருவ
ரன்றுதேடிய வரையினுள்ளுருக்கரந் தகன்றார்
மென்று கிற்பிடி நிகர்மனைவியரொடும் வேந்த
னின்றுபெற்றபே றென்னெனவியந்தினி திருந்தான். (௩௮)

தன்னையாண்டவ ரிலிங்கமாவுருக்கொடு தங்கு
முன்னையாலயத் தினைவளைந்தொருமதிண் முடிப்பித்
தென்னை வேண்டுபொற் சிகரிகீழ்த்திசையிலொன் றியற்றிப்
பின்னைமூன்றுமற் றுளதிசைதொறுமுறப் பேணி. (௩௯)

குணக்கிலுள்ளபொற் கோபுரமுகப்பினிற் கோதின்
மணக்கடாமுமிழ் வாரணமுகவனை வஞ்சர்
நிணக்குழம்பணி நெடியவேற்குமரனை நிறுவிப்
பிணக்கொரெள்ளள வின்றிநன்னெறியெலாம் பெருக்கி. (௪௰)

வாழுநாளையின் மகிமைசால்கயிலையின் மருவுந்
தாழும்வார்சடைத் தம்பிரானருண்மலி தகையா
லாழுமெய்யுணர் வுடையவல்லாளனை யன்னோன்
வீழும்வாழ்வளித் தருகில்வைத்துவப்புற விழைந்தார். (௪௧)

அன்னபாங்கினை யறப்பெருந்தேவதை யறிவுற்
றுன்னருந்திற லொட்டர்தங்கோனிடத் தொன்றிச்
சின்னமிக்குறு மவன்படைப்பெருக்கறச் சீறி
யின்னவாறென விரித்திடற்கரியபோ ரியற்றி. (௪௨)

மகராசியிற் சூரியன்றோய்தரு மதியி
னிகரில்பூசநா ளவனுடற்சுமையற நீக்கி
யிகல்செய்வீரர்தஞ் சுவர்க்கவாழ்வனைத்தையு மிமைப்பிற்
ககனமேவழி யெனக்கொடு விவரமாக் காட்டி. (௪௩)

இந்திரன்றழ லாதியரெண்மரும் பிறரு
நந்தியம்பெரு மான்மொழிநவின்றிடப் பெற்று
வந்திறைஞ்சிடக் கயிலைமால்வரைமிசை வயங்குந்
தந்தியீருரி யான்றிருமுன்பினுய்த் ததரோ. (௪௪)

களத்தின்மன்னவன் மடிந்திடல்கேட்டவன் காத
லுளத்திலுள்ளவ ரிருவருமுடல்விடுத் ததனால்
வளத்ததாகுமவ் வரையில்வந்தவனுடன் வாய்ந்தா
ளளப்பிலார்வமுற் றவரொருமூவரு மங்கு. (௪௫)

கமலைகோன்மலர்க் கண்ணணிகழறொழக் கண்டு
விமலர்தந்தையுந் தாயருமாமென வெஃகி
யமராதிய ரறியவப்போழ்துநன் கறைந்து
நமதுபாங்கரி லிடமமைத்தருளினர் தயையால். (௪௬)

அன்றுதொட்டரு ணாபுரியூரவ ரன்னோன்
பொன்றுநாள்வரி லீசனையவன்றரு புதல்வ
னென்றுசொற்றதற் கியைந்தநற்றிருவிழா வியற்றிக்
குன்றுறழ்ந்தபொற் சிகரியிற்குலவிளக் கிடுவார். (௪௭)

அந்தமன்னவன் றவமெலாந்திரண்டுரு வாகி
வந்தகீழ்த்திசைக் கோபுரவாயிலின் வடபாற்
கந்தவேள்பெருங் கருணையினுலொரு கவிஞன்
சந்தமாரிபெய் முகிலெனத்தோன்றிய தகையால். (௪அ)

அதனிலொன்றிய பெரும்புகழளப்பரு மனந்த
மிதனிலோதிய கதைகளுமஃதலா வில்லைப்
புதனைநேர்கவிப் புலவர்பற்பலர் துதி புனைந்து
மதனைவென்றசெவ் வேளரங்கினத்தொடு வயங்கும். (௪௯)

செச்சைகூதளங் கடம்பணிபுயத்தொரு சேய்தன்
பச்சையஞ்சுக முய்ந்தமைவினவலாற் படிறே
னிச்சைகொண்டதக் கோபுரமாதலி னியற்றுங்
கச்சைசூழரைக் காவலன்புகழ்கூழ றினனே. (௫0)

முன்னைநாட்புகழ்த் தொகுதியிற்சிறிதிவண் மொழிந்தேன்
பின்னையுள்ளன முடிந்திலவாதலிற் பேசே
னென்னையும்பொரு ளாமெனக்கொண்டதவ் வியல்பு
தன்னையார்சொலப் புரியுமோயான்செயுந் தவமே. (௫க)

வேறு

சந்தக்கவிகள்

தனதன தனதன தனதன தனதன தனனத் தானதன.

கருணையில் கொடியவர் மனையினு மலைவுறு கவலைப்பாழ்வினைநோய்
மருவிய கவிஞர்க ளணுகினு மவருள மகிழச்சீர்தருமான்
முருகவி ழிதழியு மதியமு மணிசடை முதல்வெற்பாகியதா
லருள்வள மொடுபொருள் வளமலி தருதிரு வருணைக்கோபுரமே. ()

தானன தானன தானன தானன தனனத் தானதன.

நாரண னுன்முக னுதியர் வீழ்பத நளினத்தார்மகிழ்கூர்
வாரண மாமுகன் வேலணி தோளினன் வளர்தற்கோரிடமா
மாரண நோயொடு சூழ்பவ மாறிடும் வழியிற்போமவரா
லாரண மாகம மோலிடு சீர்திக ழருணைக்கோபுரமே. (௫௩)

தத்தத் தத்தன தத்தத் தத்தன தனனத் தானதனு.

சித்தத் துத்தம பத்திப் பொற்புறு திறல்பெற்றுசிலரா
முத்தர்க் குச்சக சத்திற்சொற்பொருண் முழுதிட்டாள்வதுவே
மத்தப் புட்பமு டிச்சித்தற்குள மகிழ்பொற்பார்தனிவே
லத்தத்துக்குக ணிச்சைக் குட்படு மருணைக்கோபுரமே. (ருச)

தந்தன தந்தன தந்தன தந்தன தனனத் தானதனு

சந்தமு திர்ந்தசெ ழுந்தமி ழின்சுவை தனினட்பார்புலவோர்
கந்தனை யஞ்சுக மொன்றினு டன்றுதி கழறற்கோர்துணையே
சிந்தமு னிந்துநெ டுங்கிரி யின்புடை திரிதற்றீரசோ
டந்தார் வந்துபு கழ்ந்துதி னந்தொழு மருணைக்கோபுரமே. (ருரு)

தாந்த தத்தன தாந்த தத்தன தனனத் தானதனு

மான்றனைக்கையி லேந்துசிற்பார் மகிழ்கற்பாருமையா
ளீன்றபுத்திரர் வாழ்ந்திடத்தகு மிருபொற்கோயிலதே
யேன்றபத்தியின் மூண்டுமுத்தமி ழியல்பைத்தேறுநர்பா
லான்றசித்திகள் வாய்ந்திடச்செயு மருணைக்கோபுரமே. (ருசா)

தாத்த தந்தன தாத்த தந்தன தனனத் தானதனு

நீக்கமின்றிய வேற்றுரந்தர னெறியைப்பேணுதலே
மோக்கமென்றுணர் தீர்க்கநெஞ்சுறு முனிவர்க்காதரமே
பாக்களஞ்சிய மாத்திகழ்ந்திடு பலர்சொற்சூடுதலா
லாக்கமிஞ்சிய கீர்த்திகொண்டொளி ரருணைக்கோபுரமே. (ருஎ)

தன்னன தானன தன்னன தானன தனனத் தானதனு

பன்னகர்வாணரு முன்னிமுனூளுள பழுதற்றுகம்நூல்
சொன்னமெய்வீடுறு செம்மலையோடொரு துணையிற்காணுமதே
கன்னல்வில்வேடன தண்ணனுநீடிய கருணைத்தாதையுமா
மன்னமுமேனமு முன்னமராடிய வருணைக்கோபுரமே. (ருஅ)

தய்யன தானன தய்யன தானன தனனத் தானதனு

பையரவேநிக ரல்குன்மினூர்மயல் படரத்தாழ்பவரா
வையகமீதுழல் பொய்யரையாளவும் வருநற்றேவினதே
மெய்யறிவால்வினை கொய்தொருசாருசெய் வியனைப்பேசுநர்மே
லையமுருவருள் செய்திடநீடிய வருணைக்கோபுரமே. (ருகூ)

தனதன தானன தனதன தானன தனனத் தானதன

முகில்பொதி சீர்கொடு மகபதியாயணி முதிர்சொற்பாடல்களா
லெகினனுமரிமலர் மகளுறலாலரி யிணையொப்பாகிடுமா
மகிமிசையாடிடு மயிலிவர்சேவக னருள்பெற்றோர்புடையா
லகிலமெலாநுவல் பெருமையதாகிய வருணைக்கோபுரமே. (கூயு)

தத்தன தந்தன தத்தன தந்தன தனனத் தானதன

பொக்கமிலன்புபெ ருக்கியதொண்டர்கள் புதுமைச்சீர்பெறலா
லிக்கணியுங்கைம தப்பயல்கும்பிடு மியல்பிற்காமுறையே
தக்கன்மகஞ்சிதை யக்குதிகொண்டொரு தருமப்பேதையைவா
ளக்கரவம்புனை சித்தன்மணஞ்செயு மருணைக்கோபுரமே. (கூக)

தாந்த தத்தன தாந்த தத்தன தனனத் தானதன

வேண்டன்முற்றருள் வாழ்க்கையென்றுணர் விரதத்தோருறவா
னீண்டகொற்றவை வேற்றெழுஞ்சிலர் நினைவிற்றேய்வதுவே
தாண்டணிச்சிகி மேற்கொளுஞ்சிறு சரணச்சேய்புகழா
லாண்டலைக்கொடி மாட்சிதங்கிய வருணைக்கோபுரமே. (கூஉ)

தன்னத் தய்யன தன்னத் தய்யன தனனத் தானதன

வண்ணச்செய்யுளு நண்ணிச்சொல்பவர் வயிரப்பாறையைநே
ரெண்ணப்புல்லர்கண் முன்னுற்றேல்கிடு மிழிவைச்சாடுமதே
மண்ணைக்கெல்லியும் விண்ணிற்றுள்ளியு மதமற்றருணரா
வண்ணற்கைதொழும் வண்மைச்செல்வர்த மருணைக்கோபுரமே. ()

கோபுரத்துச்சருக்கமுற்றிற்று

ஆகூ கவி சஙகூ

வேலுமயிலுந்துணை

வாழி விருத்தம்

பார்வாழி வானுலகும் பிலமும்வாழி
பருப்பதங்கள் வாழியவை பலவுங்கொள்வான்
பேர்வாழி மாதவத்துப் பெரியோர்வாழி
பிறங்குதமிழ்ப் புலமைநலம் பெற்றோர்வாழி
யூர்வாழி யருணைநெடுஞ் சிகரிவாழி
யுயாருண கிரிநாத னுரைக்கும்பாடற்
சீர்வாழி கவுமார சமையம்வாழி
திருநீறுங் கண்டிகையுந் தினமும்வாழி.

அருணகிரிநாதசுவாமிகள்புராணமுற்றிற்று

நேரிசைவெண்பா

பத்தியினு லிப்படிநான் பாடுமிந்தக் காவியத்தைச்
சத்தியமாச் செவ்வேள் சரியென்றான்——புத்தியுள்ளீ
ரையமுற வேண்டா மருணகிரி நாதனன்பான்
மெய்யடிமை யாகிமகிழ் வீர்.

தெய்வமேதுணை.

P. R. RAMA IYAR AND CO., PRINTERS, MADRAS